
www.tamilarangam.net

# எரிமலை

யூன் 1995


## பொன்நிற மாலையைக் கொன்ற போர் விமானங்கள் வீழ்ந்த கதை

## இலக்கியம் போற்றிடும் எம்மவர் போர்த்திறன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# அன்புடன் ஆசிரியருக்கு!




# அக்கறைப்பூக்கள்

எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

ஐயா! வணக்கம்.

தமிழன் உலகத்தில் எங்கெல்லாம் இருக்கிறானோ, அங்கெல்லாம் எமது பண்தமிழ் வளரவேண்டும். எமது பண்பாடும் வீரமும் வளரவேண்டும். எமது தமிழீழத்தின் தானைத் தலைவன் தலைமையில் நடக்கும் போராட்ட சூழ்நிலைகளையும், தமிழ் மக்கள் அனுபவிக்கும் சொல்லொணா துன்பங்களையும், பொருளாதார பிரச்சினைகளையும், உலகத்தில் உள்ளோர் உண்மை நிலை அறிய வழிசெய்து அரும்பெரும் பணியாற்றிக்கொண்டு இருக்கும் 'எரிமலை'க்கும் அதன் செயற்பாட்டு ஆசிரியர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் தமிழீழ விரும்பிகளாகிய நாம் மனமார்ந்த நன்றியையும், ஆதரவினையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஐயா!

நாம் கிரேக்க கப்பலில் வேலை செய்கிறோம். எமது தமிழீழத்தில் நடைபெறும் போராட்ட நிகழ்வுகள், தற்போது 3-வது ஈழப்போரின் ஆரம்பம், எமது நாட்டு நிலைமைகள், போராட்ட சூழ்நிலைகள், எமது மக்களின் வேதனைகள்.... எல்லாம் அறிய ஆவலாக தவித்த நேரம், அதிர்ஷ்டவசமாக வேறொரு கப்பலில் எமது தமிழ் நண்பர்களை சந்தித்தோம். அவர்களிடமிருந்து "எரிமலை" புத்தகம் ஏப்பிரல் 94 இதழ் பெற்றோம். உடனே புரட்டிப் பார்த்தோம். சுவையான செய்திகள், கேணல் கிட்டு மாமாவின் நிகழ்வின் விபரங்கள், எமது சகோதரிகள் மேற்கொள்ளும் வேலைத்திட்டங்கள்.... அருமையாக எழுதியுள்ளீர்கள்.

இப்படிக்கு
மூர்த்தி, நண்பர்கள், பாலாஜி, குகதாஸ்,
ஜெயசிறீ, செலற்றீண்ட்

***

அன்புடன் ஆசிரியர் குழுவினர்க்கு,

**எரிமலை ஒரு பார்வை**
**மகளிர் சிறப்பிதழ் மார்ச் - 95**

முன் அட்டைப்படம் - மனதை உருக்கும் கமெராக் கவிதையாக, ஆயிரம் வார்த்தைகளால் சாதிக்கமுடியாத ஒரு வாழ்க்கையை இது சொல்லுகிறது.

அக்கறைப் பூக்கள் - மூன்று பூக்களும் கருத்துக் குவியல்கள்தான். சின்ன சின்ன கருத்துக்கள், ஆர்வங்கள், பாராட்டுக்கள், நன்றிகள், அன்புகள், அம்புகள் இந்தப் பகுதியில் இடம்பெறலாம் என்பது எனது சின்ன அபிப்பிராயம். கடிதங்களைச் சுருக்குவதன் மூலம் மேலும், அதிகமான, புதிய புதிய பூக்களை இங்கே பூக்கச் செய்யலாம்.

இனத்திற்கு வந்த ஆபத்தை... - என்ற கட்டுரை எமக்காக தலைவர் சுமந்த, சுமக்கிற இன்னல்களை விளக்கிச் செல்கிறது.

சுடரும் புதிய உலகுள் - இக் கட்டுரை விடுதலைப் போரையும், போராளிகளையும் எமது கிராமத்து இதயங்கள் எவ்வளவுக்கு நேசிக்கின்றன என்பதை கட்டுரையும் நிகழ்வுப் படங்களும் கூறுகின்றன.

விடுதலைப் போரின்... - என்ற கட்டுரை கடற்புலிகளின் தோற்றம், வளர்ச்சி, இன்றைய நிலை எதிர்கால நிலை குறித்து ஆழமாக ஆராய்கிறது. எமது கடற்புலம், தரைப்புலம் ஆகியவற்றில் விடுதலைப் புலிகள் அடைந்திருக்கும் வெற்றி துலங்குகிறது.

காலம் எழுதிய வரிகள் - மகளிர் சிறப்பிதழை இப் பகுதி அணி செய்கிறது. கவிதைகள் எல்லாமே ஆழமானவையாகவும், உணர்வுபூர்வமானவையாகவும் இருக்கின்றன.

திரு. நாகபத்மநாதனின் 'த தரும் வரலாறு' (1956 ஜூன் 5-ம் நாள்) - எமது விடுதலை உணர்வின் வித்து அன்றுதான் ஊன்றப்பட்டது. இளம் சந்ததியினர் எமது வரலாற்றை இங்கு அறியமுடிகிறது.

உலைக்களம் - உலைக்களத்தில் தீமூட்டி எமது மெல்லிய இதயச் சுவர்களில் கொள்ளி சொருகுகிறார் கவிஞர் வியாசன்.

கண்மணிகளே!
எங்கள் தாயகம் உங்களுக்கு
என்ன துரோகம் செய்தது.
இங்கிருந்து போங்களென்று
உங்களைக் கலைத்தது எது?
ஏன் போனீர்கள்?
கட்டிடங்கள் இடிந்துள்ளனதான்
என்றாலும்
இங்கே பட்டினியுடன் யாரும் படுத்ததில்லையே
எட்டிக் கால் வைக்கும் எதிரியைத் துரத்த
சுற்றிவர உங்கள் சுற்றம் இருக்கிறதே.

சிரித்திரனின் கருத்துச் சித்திரங்கள், 'வேலிப்பொட்டு', 'விமானப் பொட்டு' கருத்துச் செறிவுடையனவாக இருந்தன.

நான் சாகலாம், நீ சாகலாம் ஆனால் நாங்கள் சாகக்கூடாது - ஒவ்வொரு தமிழனும் காலையும் மாலையும் ஓதவேண்டிய மூலமந்திரம் இதுதான் என்று அந்த மாவீரன் குணா சொல்லித் தந்திருக்கிறான்.

சிறுகதை, நேர்காணல், கேள்வி-பதில்.... சில குறிப்பிட்ட அம்சங்களை இழந்தபோதும் இதழ் மிகச் சிறப்பானதாகவே அமைந்திருந்தது. உணர்வபூர்வமானதும் வலிமையுள்ள இதயங்களையும் ஈரமாக்கக்கூடிய ஆக்கங்கள் பலவற்றை சுமந்து வந்திருந்தது.

அதிக பக்கங்கள் சுமந்து எரிமலை இன்னும் ஆழமாக வரவேண்டும்.

துறையரான்

***

அன்புடன் எரிமலை ஆசிரியருக்கு,

மே மாத எரிமலை (வாசித்தேன்) பார்த்தேன்.

புதிய அழகுடன் வெளிவந்திருந்த எரிமலையைப் பார்த்தபோது என்னுள் ஒரு புதிய நம்பிக்கை பிறந்திருந்தது. தமிழில் தரமான ஒரு இலக்கிய சஞ்சிகை ஒன்று வரவேண்டும் என்ற கனவு நனவாகியது போல் இருந்தது. அது ஒரு தேவையாக இருந்தது. எரிமலையின் ஒரு கட்ட வளர்ச்சியாக இதனைப் பார்க்கலாம். தமிழில் உள்ள பல் வளங்களை ஒருங்கு சேர்த்து இது தன் உன்னதத்தை அடையும் என்ற நம்பிக்கை என்னுள் ஓங்கி நிற்கிறது.

இப்படிக்கு
நரேந்திரன் - பாரிஸ்.

***

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இதழின் உள்ளே...




பொன்னிற மாலையைக் கொன்ற போர் விமானங்கள் வீழ்ந்த கதை 06





அமெரிக்கப் பயணம் 10





நெஞ்சை விட்டு அகலாத மூன்று நாள் - தமிழீழத்தில் நடைபெற்ற மாபெரும் கலை இலக்கியக் கருத்தரங்கு 12





ஊருக்குத் திரும்புதல் - புதுவை இரத்தினதுரை 11





அவங்கட விதி- *இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தில் ஓர் நாள்* 29





இலக்கியம் போற்றிடும் எம்மவர் போர்த்திறன் - வ.ஆ.அதிரூபசிங்கம் 17





*தமிழோசை, இது எங்கள் தேசம், தாயகக் கனவு, சின்ன விழிகள், இன்னுமொரு நாடு, உயிர்ப்பூ ஆகியவற்றின் நெறியாளர் திரு. பொ. தாசனுடன்*

நேர்காணல் - *கருணாகரன்* 33





தோழர்கள் - *நோபல் இலக்கிய விருதைப் பெற்ற திருமதி. நடின் கொடிமரின் (தென் ஆபிரிக்க) சிறுகதை* 39


## இன்னும் பல அம்சங்களுடன்....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரிமலை

கலை பண்பாடு
அரசியல் சமூக ஏடு

பதின்நான்காம்
ஆண்டு
ஜூன் 1995

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42

# சந்திரிகா: இனவாதத்தின் இன்னொரு வடிவம்

மூன்றாம் ஈழப்போர் தொடங்கிவிட்டது. இப்போருக்கான, போரின் விளைவான சகல அழிவுகளுக்குமான பொறுப்பு முழுமையாக சிறீலங்கா அரசாங்கத்தையே சாரும். பேச்சுவாத்தையின் எந்தக் கட்டத்திலும் அரசாங்கம், தமிழ்த் தேசிய இனப்பிரச்சனையின் அடித்தளத்தை உணர்ந்து கொண்டதாகவோ, அதன் அடிப்படையில் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையில் இறங்கவோ முற்படவில்லை. சந்திரிகா அம்மையார் கூறுவதுபோல் இராணுவ வெற்றியின் சாத்தியப்பாடு இன்மையால் அதனைப் பேச்சுவாத்தையால் சாதிக்க முயன்றதாகவே உள்ளது. ஆனால், மேற்குலக ராஜதந்திரி ஒருவர் கூறியதுபோல, விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை முழுவதிலும் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டனர். அவர்கள் நாடகமாடவில்லை என்பதே உண்மையாகும்.

பேச்சுவாத்தையின் மூலம் அமையார் சாதிக்க முயன்ற மூன்று விடயங்களை இங்கு குறிப்பிடலாம். ஒன்று ஏனைய தமிழ்க் குழுக்களோடு ஒன்றாக விடுதலைப் புலிகளின் ஆலோசனையையும் பெற்று, ஒற்றையாட்சி அமைப்பை மாற்றாதவாறான அரசியல் திருத்தத்தை கொண்டு வருவது. அதனையே இனப்பிரச்சனையின் தீர்வாக வழங்குவது. இரண்டாவது தீர்வுக்கான அலகின் அடிப்படையில் வடக்கு, கிழக்கை துண்டாடிப் பிரிப்பது. இதற்கு வசதியான, மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை உச்சமாக பயன்படுத்துவது. வடக்கின் மீதான ஆக்கிரமிப்பு ஏற்கனவே தகர்ந்துவிட்டது. கிழக்கின் இராணுவ ஆக்கிரமிப்பை. இச் சமாதான காலத்தில் மேலும் இறுக்குவதே நோக்கம். விடுதலைப் புலிகளுடனான அரசியல் பேச்சுவார்த்தையின்போதும் தீர்வுத் திட்டம் கையளிக்கப்படும்போதும் கிழக்கு மாகாணத்தின் மீதான இராணுவ ஆதாயங்கள் பேரப் பொருளாக (Military Gains) கையாளப்பட்டு நியாயப்படுத்த வசதியாக இருந்திருக்கும். இவ் அடிப்படையிலேயே, தனது இராணுவ நிலைகளை கிழக்கில் விஸ்தரிக்க அரசாங்கம் முயன்றது. மணலாற்றில், இராணுவச் சுவர் அமைக்க முற்பட்டது. தனது கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடக் கூடாதென்று நிபந்தனையிட்டது. மூன்றாவது, விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்துவது. தமிழ் மக்களிடமிருந்து அவர்களைப் பிரிப்பது. இதற்கு மக்கள் மீதான பொருளதார நெருக்கடியை சுருக்குக் கயிறாகப் பயன்படுத்தி தளர்த்தவும் இறுக்கவும் முற்பட்டது. இதன் பொருட்டே சந்திரிகா அம்மையார் தமிழ் மக்களக்கு வழங்க இருக்கும் சமாதானத் தீர்வு எது என்ற கேள்விக்கு, “கடல், வான் வழிக் குண்டு வீச்சுக்களையும் தரையில் சுடுதலையும் நாம் நிறுத்துவதே தமிழர்களுக்கு நாம் வழங்கும் பெரிய சலுகை அல்லவா?” எனக் கூறினார். இவை சரிவராதுபோனால் பலம் குன்றி இருக்கும் இராணுவத்தை இவ் இடைக்காலத்தில் தயார்ப்படுத்தி, இராணுவ ரீதியாக தனது தீர்வைத் திணிக்க முற்படுவது. இந்நோக்காகவே ஆயுதக்கொள்வனவு, இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு, இராணுவ செலவீன அதிகரிப்பு என்பன தொடர்ந்து இடம் பெற்றன. பூநகரி முகாமை அகற்ற விரும்பாதது இதன் காரணத்தினால்தான்.

விடுதலைப் புலிகள், விசேடமாக தலைவர் பிரபாகரன் பேச்சுவார்த்தையின் ஆரபத்திலேயே சிறீலங்கா அரசின் நேர்மையீனத்தை கண்டுகொண்டார். எனவேதான் மக்களின் அன்றாடப் பிரச்சனைகளாயினும் அரசியல் பிரச்சினைகளாயினும் அடிப்படை விடையங்களில் எதுவித விட்டுக்கொடுப்பும் செய்வதில்லை என்று உறுதியாக நின்றனர். உணவு, மருந்து, போக்குவரத்து ஆகியவை அடிப்படை உரிமைகள். இவற்றையே பேரம் பேசி விட்டுக்கொடுத்தால், அடிப்படை அரசியல் உரிமைகளை விட்டுக்கொடுக்க நேரிடும் என்பதை தெளிவாகக் கண்டனர். அதிலும் முக்கியமாக, தென் தமிழீழத் தாயகப் பகுதிகளைப் பொறுத்தவரை, இராணுவ ஆக்கிரமிப்பு, இப்பேரம் பேசுதலுக்கு வலுவாக அமையும் என்று கண்டனர். அடிப்படை உரிமைகளை, தமிழ் மக்களின் அபிலாஷைகளை, ஆதாரக் கொள்கைகளை ஏற்க மறந்து, தனக்குச் சாதகமான தீர்வொன்றைக் காணமுற்பட்டது அரசாங்கம். அதற்குச் சாதகமான சர்வதேச அபிப்பிராயத்தையும் திரட்ட, தனது மக்கள் தொடர்புச் சாதனங்களையும் முடுக்கிவிட்டது.

இத் தீர்வுத் திட்டத்தைப் போர் அழுத்தத்தாலேயே திணிக்க முடியுமாயினும், அதற்குத் தயாராக இராணுவம் இல்லை. அவர்கள் தயாராகும் வரை பேச்சுவார்த்தையை இழுத்தடித்து வருவதை பார்த்துக்கொண்டு விடுதலைப் புலிகளால் இருக்கமுடியாது. இதனால்தான் மோதல் தவிர்ப்பிலிருந்து விலகி முன்னெச்சரிக்கையாக (Pre emtive) தாக்குதலை மேற்கொள்ள நேர்ந்தது. விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் நான்கும் அரசாங்க தரப்பினால் நிறைவேற்றப்பட்டால், மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்கும் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். அரசாங்கமோ கண்துடைப்பிற்காக, ஒரு அரசியல் தீர்வுத் திட்டத்தை வைக்கவும்(?), அதே கையோடு போர் நடவடிக்கையை மேற்கொள்ளவுமே முனைந்து நிக்கிறது. இதுவே அரசாங்கத்தின் இறுதித் திட்டமென விடுதலைப் புலிகள் தீர்க்கதரிசனமாக அறிந்து, முன்னேறித் தாக்கிய காரணத்தால், அரசாங்கம் தடுமாறிப்போய் உள்ளது. தனது பலவீனமான இராணுவத்தை வெளிநாட்டு உதவிகளோடு சீர் செய்து போரில் ஈடுபடுத்தவும், இராணுவத் தீர்வு காணவும் அமையார் எடுக்கு முயற்சி தோல்வியைத் தழுவும் என்பது மறுக்க முடியாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாழ்க்கையின் நிதர்சனத்திலிருந்து அந்நியப்படக் கூடாது



"கலை இலக்கியப் படைப்புக்கள் மக்களை சிந்திக்கத் தூண்டவேண்டும். பழமையிலும், பொய்மையிலும் பல்வேறு மாயைகளிலும் சிறைப்பட்டுக் கிடக்கும் மக்கள் மனதில் புரட்சிகரப் பார்வையை தோற்றுவிக்கவேண்டும். மாறிவரும் சமூக விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

நாம் இன்று ஒரு புரட்சிகரமான யுகத்தில் வாழ்கிறோம். பூகம்பமான மாற்றங்கள் உருவாகி வரும் புதியதொரு சகாப்தத்தில் வாழ்கிறோம். தமிழீழ மக்கள் இன்று விடுதலை வேண்டி போர்க்கோலம் பூண்டு நிற்கிறார்கள். எமது தேசிய வாழ்வின் சகல பரிமாணங்களிலும் வியாபித்து நிற்கும் ஒரு வரலாற்று இயக்கத்திலிருந்து கலைஞர்களும், அறிஞர்களும் அந்நியப்பட்டு நிற்கமுடியாது. அப்படி அந்நியப்படுவது மக்களிலிருந்தும் வாழ்க்கையின் நிதர்சனத்திலிருந்தும் அந்நியப்படுவதாக முடியும்.

இந்தக் காலகட்டத்தில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள் ஆகியோரிடமிருந்து நான் கூடியளவு பங்களிப்பை எதிர்பார்க்கிறேன். ஒரு தாயகத்தை கட்டியெழுப்பும் பணி புனிதமானது. இந்தப் புனிதப் பணியில் பங்குகொள்வது எல்லோரதும் தேசியக்கடன். ஆயிரமாயிரம் போராளிகளின் அற்புதமான தியாகத்தில் உருவாகி வரும் எமது தாயகத்தை ஒரு உன்னதமான, மேன்மையான சமுதாயமாக மாற்றியமைக்கவேண்டும். இந்த சமூக மாற்றத்திற்கு வழிகோலும் வகையில் சிந்தனையாளர்களும் சிருஷ்டிகர்த்தாக்களும் எமது இயக்கத்திற்கு பக்கபலமாக நின்று பணியாற்ற வேண்டும்."

தமிழீழ தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்



நேற்றடித்த மஞ்சள் வெய்யிலும்
உடல் வருடிய இளவேனிலும்
இன்றேன் இல்லாமற் போயின?
பருவம் தவறாத மாரியும்
பூம்பனியும்
பொய்த்துப் போனதேன்?
முற்றத்தில் பூச்சொரிந்த வேம்பின்
துளிர்கருகி,
இலை கருகி,
கிளைகளில் ஈரம்வற்றி
வேர்கள் கூடக் காய்ந்து கிடக்கிறதே.
வைகாசி மாதத்துக்குக் குயில்கள் எங்கே?
தட்டிவிட்டுப் படுக்கக்கூடிய தார்வீதிகள்
அம்மைத்தழும்பு முகமானதேன்?
அம்மன் கோவில் அசையாமணி கோபுரம்
ஏன் இடிந்துள்ளது?
சிரித்தபடி கையசைத்துப் போகும்
அந்தச் சீருடைச் சிறுவனின்
வலதுகரமேன் மொட்டையானது?
கூப்பிட்ட குரலுக்கு குரைக்கின்ற
நாய்களைக் கூட யார் கடத்தினர்?
எவரிடமாவது கேட்கலாமென்றால்
வீதியெல்லாம் வெறிச்சோடிக்கிடக்கின்றன.
அகலத் திறந்து கிடக்கும் படலைகளை
எவன் பூட்டினான்?
அன்று ...
நான் வெளியேறியிருக்கக் கூடாது.
வெளியேறியிருக்கவே கூடாது.

- மாலிகா -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொன்னிறமாலையைக் கொன்ற போர் விமானங்கள் வீழ்ந்த கதை



தமிழீழ வான்பரப்பில் வெள்ளி முட்டையிடும் இயந்திரப் பறவைகள் தமிழ் மக்களின் வாழ்வில், பயங்கரமான, கொடிய பயபீதியை ஏற்படுத்தின. மக்கள் எல்லையில்லாத் துன்பம் அடைந்தார்கள்.

வெண் முகில்களுக்கூடாக பொன்நிற மாலைப்பொழுதில் காது செவிடுபடும்படி திடீரென பேரிரைச்சலுடன் தமிழீழ வான் பரப்பில் தோன்றும் இந்த இயந்திரக் கழுகுகளின் கதையை எப்படிச் சொல்லுவது?

மக்கள் குடியிருப்புக்களின் மீதும், மக்கள் கூடும் இடங்களின் மீதும், வழிபாட்டு ஸ்தலங்களின் மீதும், வைத்தியசாலைகள் மீதும், பாடசாலைகள் மீதும் சர்வதேச போர்ச் சட்டவிதிகளுக்கு முரணான முறையில் பீப்பாக் குண்டுகளையும், மலக் குண்டுகளையும் வீசியது இவ் விமானங்கள்தான்.

இக்குண்டு வீச்சுக்களின் போது, எங்கள் மண்ணிலே பல பலகோடி சொத்துக்கள் அழிந்தன. ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் ஊனமுற்றவர்களாகினர்.

இந்த விமானங்கள் ஆக்கிரமிப்பாளர்களை எமது மண்ணுக்குச் சுமந்து வந்தது. நிர்மலமான நீல வான்வெளிப் பரப்பூடாக கொடிய நாசகாரக் குண்டுகளையும் ஆயுதங்களையும் கொண்டுவந்து சேர்த்தது.



விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படைப்பிரிவால் சுட்டுவீழ்த்தப்பட்ட 'அவ்றோ' விமானங்களில் ஒன்று

தமிழீழத்தில் தரைப் பகுதியிலும், கடற்பகுதியிலும் நின்றுபிடிக்க முடியாதுபோன சிறீலங்கா அரச படைகளும், இனவாத அரசும் வான் பலத்தை தமது பலமாக எண்ணியிருந்தனர்.

இந்த நேரத்தில் எமது தேசியத் தலைவர் அவர்களின் உருவாக்கத்தில், விமான எதிர்ப்புப் படையணி உருவானது. இவ்வணி உருவாகிய குறுகிய காலத்துக்குள்ளேயே அதன் உச்சகட்டத் தாக்குதல் பெரிய வளர்ச்சியை அடைந்திருக்கிறது. இதனால் சிங்களப் பேரினவாதம் அச்சமுற்று கையறு நிலைக்குச் சென்றிருக்கிறது.



கண்விழித்து உலகை காணுமுன் குண்டுவீச்சினுள் முடிந்த ஒரு சிசுவின் வாழ்வு

28-4-95 மாலை கடல்காற்று பனைமரங்களோடு வேகமாக மோதி வீசிக்கொண்டிருந்தது. மாலைச் சூரியக் கதிர்களின் ஒளியில் பலாலியிலிருந்து எழுந்த 'அவ்றோ' விமானம் துலங்கியது. HF 748 ரகத்தைச் சேர்ந்த இவ் அவ்றோ விமானம் 75 கோடி ரூபா பெறுமதி வாய்ந்தது. பலாலி விமானப் பெருந்தளம் எப்பொழுதும் போல உசார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. ஆக்கிரமிப்பாளர்களின் படைத்தளத்திலிருந்து தமிழின அழிப்புக்காக படையினர் நகர்த்தப்பட்டுக்கொண்டிருந்தனர். இந்த விமானத்தில் 19 இராணுவத்தினரும், 11 விமானப் படையினரும், 5 கடற்படையினரும் இருந்தனர். இவர்களுடன் அராலித் துறையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் காயமடைந்த எட்டு இராணுவச் சிப்பாய்களுமாக 43 பேர் இருந்திருக்கிறார்கள். இவர்களில் யாரும் இதுவே இறுதியான பறப்பாக இருக்கும் என ஒரு போதும் எதிர்பார்த்திருக்கவில்லை. இதற்கெல்லாம் மேலாக வடபகுதி விமானப்படைத் தளபதி 'வின் கொமாண்டர்' றோஜர் வீரசிங்காவும் இதில் இறந்துள்ளார். விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியினரின் தாக்குதலுக்கு உள்ளான இவ் விமானம் குறித்து, சிறீலங்கா அரசாங்கம் இயந்திரக்கோளாறு காரணமாகவே வெடித்துச் சிதறியது என மூடி மறைக்க முயன்றது. 1993-ம் ஆண்டு ஆனையிறவுக்கு அப்பால், Y-8 ரக விமானம் வெடித்துச் சிதறிய போதும் இயந்திரக் கோளாறு என்றே மூடி மறைத்தது. இந்த மூடி மறைப்பு விவகாரம் பின்னர் அவர்களிற்கே ஆபத்தானதாக அமைந்துவிட்டிருந்தது.

அடுத்தநாட் காலை 8.30 மணி போல், மழையும் பெய்யத் தொடங்கியிருந்தது. மாதகல் பகுதியில் 1500 மீற்றர் உயரத்தில் 'சார்லி றோஜர் 834' ரக அவ்றோ விமானம் பறந்து கொண்டிருந்தது. இந்த விமானத்தில் விமானப்படையின் உயரதிகா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மண்ணுள் சிதறிய மானுட வாழ்வு

ரிகளும், நிபுணர்கள் அடங்கிய குழுவுமாக பலர் இருந்தார்கள். இந்த விமானம் முக்கிய பிரமுகர்களை ஏற்றி இறக்குவதற்கே பயன்படுவது தெரிந்ததே. அவர்களின் முழு நோக்கமும் நேற்று எப்படி வெடித்துச் சிதறியது என்பதை அறியும் நோக்காக இருந்தது. அப்போது பாரிஸில் இருந்த ஜனதிபதி சந்திரிகாவின் பணிப்பின் பேரில், இந்த நிபுணர் குழுவை இரவோடிரவாக விமானப் படைத்தளபதி 'ஏயர் மார்ஷல்' ஒலிவர் ரணசிங்கவே நியமித்திருந்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள புன்னாலைக்கட்டுவன் பகுதியில் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில், விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியினரின் தாக்குதலுக்கு இவ் விமானம் உள்ளாகியது.

வானம் அதிரும் வண்ணம் இடியோசை கேட்டது. கரும்புகைகள் எழுந்தன. இந்த நிலையிலும் விமானம் பலாலித் தளம் நோக்கி விரைந்தது. மீண்டும் ஆகாயத்திலேயே சில வினாடிகளில் காதைப் பிளக்கும் வண்ணம் வெடியோசை கேட்டதென இதனை நேரில் பார்த்த தமிழீழ மக்கள் தெரிவித்துள்ளார்கள். பெரும் திரள் திரளாக மக்கள் கூடி வீழ்ந்து கிடக்கும் அந்த விமானங்களை பார்த்து வருகிறார்கள். தற்போது அதன் உதிரிப் பாகங்கள் பொதுமக்களால் சேர்க்கப்பட்டு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது யாழ். முற்றவெளி மைதானத்தில், சிதறிய விமானங்களின் உதிரிப்பாகங்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மக்கள் முகங்களில் எல்லையில்லாத சந்தோசம் கரைபுரள்கிறது.

★★

## ஒரு கவிஞனின் சோகம்


மானுட வாழ்வுக்கு, மனித நேயத்துக்கு அச்சுறுத்தலாக நிற்கும் இந்தப் போர் விமானங்கள், ஒரு கவிஞனின் உள்ளத்தில், ஆழ்ந்த, சோகமான கேள்வியாகவும் ஏற்படுத்தி இருக்கிறது.

அவனின் அந்தக் கேள்வியில் உள்ள நியாயத்தன்மை செத்தது எப்படி?

'சிக்கல் நாளில் வலி தீருதல்' என்னும் கருணாகரனின் கவிதையிலிருந்து...

எல்லாக் கேள்விகளுமே
பின்னலிடுகின்றன.
எல்லாவற்றையும் விடச்
சிக்கலானதாக,
விமானங்கள்
பயணிகளையும்
ஏற்றிச் செல்லுமென்று
குழந்தைக்கு எப்படி
நம்பிக்கைகொள்ள
வைப்பதென்று
புரியவில்லை எனக்கு.

# தமிழீழ எல்லைகளை வரையறுத்துக் காட்டிய கேணல் கிட்டு



செய்தியாளர் கூட்டமொன்றில், தளபதி கிட்டுவிடம் ஒருவர்;

"இலங்கையில், நீங்கள் கேட்கும் தமிழீழப் பகுதிகள் எவை? எவை? என்பதை திட்டவட்டமாக ஆதாரத்துடன் கூறமுடியுமா?" எனக் கேட்டார்.

ஒருகண நேரம் கூட யோசிக்காமல், கிட்டு உடனே விடையளித்தார்.

"இலங்கையில் எந்தெந்தப் பகுதிகள் மீது சிங்கள விமானங்கள் வீசும் குண்டுகள் விழுந்திருக்கின்றனவோ, அந்தப் பகுதிகளைக் கொண்டதே எமது தமிழீழம்" என்றார்.

கேட்டவர் உட்பட கூடியிருந்தோர் அனைவரும் கிட்டுவின் விடையை ரசித்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெண்புறா விருந்து...

உனக்கு என்ன வேண்டுமென்று
எனக்கு என் தந்தையை
வேண்டாமென்றாய்?

எல்லா வீடும், எல்லாமும்
நன்றாகத் தானே இருந்தது
திடீரென்று சண்டைபோட்டு
திடீரென்று என் வாழ்வைக்
குலைக்க
யார் உனக்கு அதிகாரம் தந்தது?

நீயும் நலமாய் வாழாமல்
போவதற்கு
என் நலத்தை ஏன் விலையாகக்
கொண்டாய்?

அன்புத் தாய் சிலவேளை
ஆவேசத் தாய் ஆகும் நேரம்
மௌனமாக அரவணைக்கும்
அப்பா என்னும் அற்புதத்தை
எண்ணி நான் அழும்போது உன்
துப்பாக்கிக் குண்டா என்
தோழனாகும்?

மாடியில், இரவில்
அம்மா ஊட்டிவிட
நிலவென்ன நட்சத்திரமென்ன
ஆயிரம் கேள்வியை அப்பாவிடம்
கேட்பேனே
தப்பாமல் சொல்லும் தந்தையின்
குரலை வேறு
சிப்பாய் வந்து ஒலிப்பானோ?

எப்போதும் நிலவும் சண்டை
என்றென்றும் வெடிச்சத்தம்
பருந்திடம் காக்கும் பறவையைப்
போல்
பகலிரவாய்க் காத்த தந்தையை
விருந்தெனக் கொண்டதே உன்
வெடிகள்

வெறுமையைக் கண்டதே என்
விழிகள்.

எத்தனை காலமாய் தன்னுள்
காத்து
வழிவழி வந்த வம்சத்தை
என்னுள் வைத்து, எதிர்காலம்
ஆனவனை
எதிர் கொண்டு அழித்தாயே
போனவன் போட்ட விதை
ஆயிரமாய், கோடியாய்



இனக்கலவரம் ஒன்றில் இராணுவத்தினரால் தன் தந்தை சுட்டுக் கொல்லப்பட்டதை நேரில் கண்ட ஒரு சிறுவன், வீட்டுச் செங்கல் ஒவ்வொன்றிலும் தன் தந்தையின் பெயரை எழுதிவைத்து மனித சமூகத்தையே குற்றவாளிக் கூண்டில் நிற்கவைத்திருக்கிறான்.

என்னுள் இயங்கும்போது
எப்படி நான் அமைதியாவேன்?
எப்படி நீ அமைதியாவாய்?

இனி
ஒவ்வோர் அணுவும் அவன் பேர்
சொல்லும்
இந்த வீட்டின் செங்கல்
ஒவ்வொன்றிலும்
அவன் பெயர் இருப்பதைப் போல.

முகத்தோடு முகம் உரசும்
அந்த சின்ன உரசலுக்காக
நெடுநேரம் விழித்திருப்பேனே
இனி ஒவ்வொரு செங்கல்லிலும்
அவன் பெயர் எழுதி
நான் முகம் உரசும் போது
சிதைந்தாலும் சரி என் முகம்
சிவக்காமலா போகும்?

அன்புப் புறாக்கள் நீ
ஆயிரம் விடலாம் என்
வன்மம் உன்னை வறுத்தெடுக்கும்

நீ
மானுடம் பேசுவதும்
மண்ணுயிர் காப்பதும்
அமைதிப் புறாக்களும்
அடுக்கடுக்காய்ப் பரிசுகளும்
ஆயிரம் இருக்கட்டும்

மனிதன் ஒரு சமூகப் பிராணி
எனும்
தத்துவத்தை என் கண்ணில்
ஏற்றிவிட்டு
நீ
என்றோ விடுகிற வெள்ளைப்
புறாக்கள்
எனக்கு விருந்தாகாமலா போகும்?

* புதுவை, சிவ. இளங்கோ *

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுட்டு வீழ்த்தப்பட்ட Y-8 (சகடை) விமானத்தை மக்கள் பார்வையிடுகின்றனர்

# நெஞ்சம் எதிர்கொள்ளும் நிமிர்ந்து!

"புக்காரா" வந்திங்கு பொல்லாத குண்டுமழை
நிற்காமலே நித்தம் பெய்திடினும் எக்காலும்
அஞ்சும் மனதறியா ஆண்மைப் புலிவீரர்
நெஞ்சம் எதிர்கொள்ளும் நிமிர்ந்து!

"பாரக்கெலி"யோடு பறந்தெங்கள் வான்பரப்பில்
போருக்கு வந்து பொழிந்தாலும் - நேருக்கு
நின்று போராடும் நிகரில்லாப் புலிவீரர்
வென்று கதைமுடிப்பர் விரைந்து!

மண்ணெண்ணெய் பெற்றோல் மா, சீனி மருந்தென்று
எண்ணிக்கை இல்லாப் பொருள் தடுத்தும் - மண்மீது
மாறாத பற்றுடைய மறவர் தமிழ்மக்கள்
சீறாம லோவிட்டார் சினந்து?


"சீனத்துச் சகடை" சிறுபொம்மர் கெலியெங்கள்
வானத்தில் சுட்டு வீழ்த்தியவர் - மானத்தை
உயிரின் மேலாய் உளத்தில் பதித்துள்ள
புயலாம் புலிவீரர் சிறப்பு!

வையப் படை முழுதும் வாரித் திரண்டெம்மை
நையப் புடைக்க நகர்ந்தாலும் - ஐயமின்றி
நெஞ்சத் துணிவோடு நேர்நின் றெதிர்த் (து) அவர்கள்
அஞ்சும் வகைசெய்வோம் அடித்து.

## சின்ன ஓவியர்களின் சிந்தையில் உரசிய போர் விமானங்கள்







அண்மையில் ஜேர்மனியில் நடாத்தப்பட்ட கேணல் கிட்டு ஞாபகார்த்த ஓவியப்போட்டியில் கலந்துகொண்ட சின்ன ஓவியர்களது வெளிப்பாடுகளாக இவ் ஓவியங்கள் விளங்குகின்றன. இவ் ஓவியங்கள் அவர்களின் சின்ன இதயங்களின் விசும்பல்களாகவும் விம்மல்களாகவும் இருக்கின்றன. வான்பார்த்த பூமித் தரைகளில் நின்று அகமகிழ்ந்தாடிய அவர்களின் சந்தோசங்களை குரூரமாக கொன்றதன் குரல் அடங்கிக் கிடக்கிறது. இந்த ஓவியங்கள் அவர்களின் ஆத்ம சோகத்தைப் பேசுவதை யாராலும் புரிந்துகொள்ளாது இருக்கமுடியாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அமெரிக்கப் பயணம்

அமெரிக்கா தற்கால உலகில், ஒரேயொரு பெரு வல்லரசாக (Super Power) விளங்குகின்றது. விஞ்ஞான வளர்ச்சியில் முன்னணியில் நிற்கிறது. மேலும், அங்குள்ள தமிழர்களும், பல்வேறு நவீன துறைகளில் தொழில் புரிபவர்களாகவும், வளம் மிக்கவர்களாகவும் (resourceful) உள்ளனர். இவ்விரு தொடர்புகளையும் நெருக்கமாக பிணைத்துக்கொள்ளும் வாய்ப்பாகவே எனது அமெரிக்கப் பயணம் அமைந்தது.

மே மாதம் 4-ம் திகதி தென்னாசிய விடயங்களுக்கு பொறுப்பான உதவிச் செயலாளர் திமோதி கார்னி (Timothi Carney)-ஐ அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள அலுவலகத்தில் (State Dept.) வைத்து சந்தித்தேன். என்னுடன், சட்டத்தரணி வி. ருத்ரக் குமாரும் வந்திருந்தார். சந்திப்பு நட்பு ரீதியில் அமைந்தது. இச் சந்திப்புப் பற்றி ராஜாங்க திணைக் களப் பேச்சாளர் குறிப்பிடும் போது "ஆக்கபூர்வமான அரசியல் தீர்வை காண்பதற்காக பேச்சுவார்த்தைக்கு செல்லுமாறு விடுதலைப் புலிகளை வலியுறுத்தி னோம்." என்று கூறினார்.

ராஜாங்கத் திணைக்களத்தில் நடந்த உரையாடலின் போது, விடுதலைப் புலிகள், மோதல் தவிர்ப்பிலிருந்தும், பேச்சுவார்த்தையிலிருந்தும் விலக நேர்ந்ததற்கான காரணங்கள் விரிவாக என்னால் விளக்கப்பட்டன. மேலும், மீண்டும் பேச்சுவார்த்தைக்குச் செல்வதானால், விடுதலைப் புலிகளின் நான்கு கோரிக்கைகளையும் அரசாங்கம் நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும், பேச்சுவார்த்தை தொடர்பான அடுத்த நகர்வை சிறீலங்கா அரசாங்கமே எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. முதன் முதல் வெளியரங்கமாக மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ சந்திப்பு மட்டுமல்ல, கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கான இருவழித் தொடர்பு என்ற ரீதியிலும் இச் சந்திப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

அமெரிக்காவில், பல்வேறு மாநிலப் பகுதிகளுக்குச் சென்று எமது மக்களைச் சந்தித்தேன். தமிழக மக்களும் தங்கள் ஆதரவை வெளியிட்டனர். கலிபோர்னியாகவுக்குச் சென்றபோது, எமது தேசிய புலிக்கொடி பறக்கவிடப்பட்ட வாகனத்தில், விமான நிலையத்திலிருந்து எனது இருப்பிடத்துக்கு அழைத்துவரப்பட்டேன். அங்கிருந்த நண்பர்கள், தமிழீழத் தூதுவராக மரியாதை வழங்குவதாகத் தெரிவித்தனர். பல்வேறு துறைகளிலும் தமது பங்களிப்பைச் செலுத்துவது மட்டுமல்லாமல், எமது விடுதலைப் போராட்டத்தில் முழுமையாக ஈடுபடப் போவதாகப் பலர் தெரிவித்தனர். வெளிநாட்டுச் செயல்பாடுகளில் அமெரிக்கா முன்னிலை வகிக்கவேண்டும் என்பது ஒருமித்த கருத்தாக இருந்தது. இவை நடைமுறைப்படும் போது, எனது பயணம் முழுமையான பயன் அளிப்பதாக இருக்கும்.

**லோ. திலகர்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஊருக்குத் திரும்புதல்

கால்களில் வேகம் பூட்டி;
காற்றாய் விரைவோம்
மகனே!
கால்கள் வலிக்கிறதா?
கலங்காதே.
ஊருக்குத் திரும்பும் மகிழ்ச்சியில்
தூரம் குறுகிவிடும்.
இன்னும் சொற்ப தூரம்தான்.
மகனே எட்டிநட.
எம்மைப் பிடித்த பீடைபொழிந்தது.
இருட்டு அழிந்தது.
எங்களூரில் வேர்விட்டிருந்த
கள்ளியும், நாகதாளியும்
இல்லாதொழிந்தனவாம்.
நெருஞ்சியும், நாயுருவியும்
நீறாகிப் போயினவாம்.
இனித் தென்றல் வந்து
தோளிலேறி விளையாடும்
மேச்சல் முடிந்து வீடுதிரும்பும்
மாடுகளின் மகிழ்ச்சியல்லவா எமக்கு?
மகனே!
நின்று விழிகளைத் தூரவீசு.
அந்தோ ஊரின் எல்லை தெரிகிறது.
அந்த வயல்வெளிகளைக் கடந்து விட்டால்
அதற்கப்பால்.... பனைக்கூடல் ஒன்றுவரும்.
அதையும் கடந்து நடந்தால்....
மணிப்புறாவும், ஆட்காட்டியும்,
பரந்தவெளி விரிந்து கிடக்கும்.
அதையும் கடப்போம்.
அதற்கப்பால்....
வெள்ளை மணல் விரித்த கடற்கரை வரும்
ஈரம் சுவறிய கரையின் மீது
பாதம் நனைய நடந்து போனால்....
'பூதவராயர் கோயில்' வரும்
அந்தக் கோயிலின் பக்கமாகவே
முன்னரெம் குடியிருப்புகள் இருந்தன.
மகனே!
அப்போது உனக்கு இரண்டு வயது
திடுமென ஒருநாளே....
எங்களூருக்கு "இயமன்" வந்தான்.
அவனோடு ஆயிரம் "கிங்கரர்" வந்தனர்.
ஊர்முழுதும் தீக்குளித்தது.
எண்ணையூற்றி எரித்ததால்....
ஊரின் முகம் கருகிப் போனது.
வீடு - வயல் - தோட்டம் - துரவு
கோயில் - பசு - கன்று - மரங்கள்
ஆண்கள் - பெண்கள் - சிறுவர் - கிழடுகள்
எல்லாமே எரிந்து போயின.
கோயிற் கிணற்றில்
தண்ணீரள்ளப்போன
உன் தாயும்
நெசவடிக்கப் போன உன் அக்காவும்
அன்று வீடு திரும்பவில்லை.
மீண்டும் வரவேயில்லை.
அன்று
உன்னை வாரியெடுத்து ஓடிவந்தேன்.
அதன்பிறகு இன்றுதான் வீடு திரும்புகிறோம்.
மகனே! எங்கள் வீடு
பத்து வருடங்கள் நாங்களிருந்த
அகதிமுகாம் போன்றதல்ல....
மகனே! அது அழகான வீடு.
அத்திவாரத்திலிருந்து கோப்பிசம் வரையும்
என் வியர்வையில் நனைந்த வீடு.
முற்றத்தில்....
உன் அக்கா வளர்த்த பூங்கன்றுகளின்
முகங்கள் தினசரி சிரிக்கும்.
விதம் விதமான நிறங்களில்
கொள்ளையழகு குடியிருக்கும்.
கிணற்றடியில்
செவ்விளனீக் கன்று குலைதள்ளியிருக்கும்
வீட்டுக்குப் பக்கத்தில் இரண்டு வேப்பமரங்கள்
தலையாட்டிச் சுகம் கேட்க
ஜில்லென்று காற்று வீசும்.
குயில்கள் வந்திருந்து கூவும்.
மைனாக்கள் ஏதேதோ பேசும்.
உன் வீடு அழகானதென்பதை
பார்த்ததும் ஏற்றுக்கொள்வாய்.
மகனே!
ஐயோ என் மகனே!
பூதவராயர் கோவிலைக் காணவில்லையே
என்னயிது?
பூமி பிளந்து என்னை விழுங்குகிறதா?
மகனே!
இதுதான் எங்கள் வீடிருந்த இடம்.
இங்கேதான் அந்த வேப்பமரங்கள் நின்றன.
அப்போ எங்கள் வீடு எங்கே?
என் மனைவி எங்கே?
உன் உடன்பிறப்பு எங்கே?
பன்னிரண்டு வயதான
என் சின்ன மகனே!
விடுதலைக்கு நாங்கள்
பெரிய விலை கொடுத்துவிட்டோம்.
வா மகனே!
இந்த இடத்தில்
இனியொரு கொட்டில்கட்டிக் குடியிருப்போம்.

- புதுவை இரத்தினதுரை -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# நெஞ்சை விட்டகலாத மூன்று நாள் கலை, இலக்கிய கருத்தரங்கு

**விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகமும், வெளிச்சம் கலை, இலக்கிய சமூக இதழும் இணைந்து மார்ச் 3, 4, 5-ம் திகதிகளில் நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தில் நடத்திய மூன்று முழு நாள் கலை, இலக்கியக் கருத்தரங்கு தமிழீழ கலை இலக்கியத்திலும், இலக்கிய கர்த்தாக்கள், கலைஞர்களிடத்திலும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பது மறுக்க வியலாதது.**

மாபெரும் என்று சொல்லத்தக்கதாக பெரும் செலவையும் உழைப்பையும் உட்செலுத்தி இக்கருத்தரங்கு நடந்து முடிந்திருக்கிறது.

கலையும், கலையுடன் இணைந்த வாழ்வும் எங்களுடையது. அந்த வாழ்வுடன் இணைந்த கலையும், இலக்கியுமும் செம்மை பெற்று அறிவியல் தத்துவார்த்தத் தளங்களில் நின்று, சமூக வாழ்வைச் செவ்வனே பார்த்துணர்ந்து நிற்பவையாக உச்ச வளர்ச்சி பெறவேண்டும் என்ற எண்ணத்தின் பிரதிபலி-ப்பே இக்கலை இலக்கியக் கருத்தரங்கின் பாடுபொருளாக அமைந்து இருக்கிறது. ஈழத்துக்கலை இலக்கியங்களை நல்லதொரு ஆரோக்கிய நிலைக்கு இட்டுச்செல்ல வேண்டுமென்ற வெளிச்சத்தினதும் கலை, பண்பாட்டுக் கழகத்தினதும் எதிர்பார்ப்பின் விளைவே இக் கருத்தரங்கு எனலாம்.



*கலை, இலக்கியக் கருத்தரங்கில் கலந்துகொண்ட மக்களில் ஒரு பகுதியினர்*



*இடமிருந்து வலமாக கலை, இலக்கியக் கருத்தரங்கில் உரையாற்றிய தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறு-ப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை, விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் திரு. வே. பாலகுமாரன், விடுதலைப் புலிகள் வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. சு. ரவி ஆகியோர்.*

*இடமிருந்து வலமாக வண. பிதா பிரான்ஸிஸ் ஜோசப் அடிகள், பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி நா. சுப்பிரமணியன், மூதறிஞர் திரு. சொக்கன், பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*இடமிருந்து வலமாக: வெளிச்சம் ஆசிரியர் சி. கருணாகரன், ஓவியர் தயா, ஓவியர் கோபாலி, திரு. இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் ஆகியோர்.*



*இடமிருந்து வலமாக: திருமதி. கோகிலா மகேந்திரன், திரு. நா. யோகேந்திரன், குழந்தை ம. சண்முகலிங்கம், திரு. த. செம்பியன் செல்வன் ஆகியோர்.*

இக் கருத்தரங்கில் வன்னி, முல்லை, மன்னார் மாவட்டங்களில் இருந்து நானூறு பேராளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொ-ண்டனர். யாழ். மாவட்டத்தின் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகக் கோட்டங்களிலிருந்து ஆயிரத்துக்கும் மேலான பேராளர்களும் ஆர்வலர்களும் வந்திருந்தனர்.

தூர இடப் பேராளர்களுக்கு போக்குவரத்து, தங்குமிடம், உணவு மற்றும் இதர வசதிகள் செய்து தரப்பட்டன. கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு மதிய உணவு, சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

அத்துடன் கலை, இலக்கியவாதிகள் யாவரும் காணும் பொருட்டு, தமிழ்த் தாய் பதிப்பகம் மற்றும் விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவினர் தமிழீழ வெளியீடுகள் கொண்ட கண்காட்சியொ-ன்றை நடத்தினர். விடுதலைப் புலிகளின் அனைத்துலகத் தொடர்பகத்தினர், தமிழீழம் தொடர்பான வெளிநாட்டு நூல்கள், சஞ்சிகைகள், பிரசுரங்கள், சுவரொட்டிகள் அடங்கிய கண்காட்சியினை வைத்தனர். அத்துடன் தயா, கோபாலி, மாற்கு, இராசையா, வாசுகி, செம்மலையான் ஆகிய ஈழத்து ஓவியர்களின் ஓவியக்கண் காட்சியொன்றும் நடத்தப்பட்டது.



*பேராளர்களும் போராளிகளும் உணவருந்துகின்றனர்.*

இவை மட்டுமல்ல;

"தமிழகத்தில் எமது அறிஞர்கள் நாடுகடத்தப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டபோதே, இக்கருத்தரங்கை நடத்தவேண்டும் என்ற

*இடமிருந்து வலமாக: யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி. நாச்சியார் செல்வநாயகம், முல்லைமணி வே. சுப்பிரமணியம், திரு. இளையவன், கவிஞர் விவேக், திரு. ஐ. சாந்தன் ஆகியோர்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இடமிருந்து வலமாக: கவியரங்கில் பங்கேற்ற கவிஞர்களான தில்லைச்சிவன், இ. முருகையன், சோ. பத்மநாதன், சா. வே. பஞ்சாட்சரம், ந. வீரமணிஐயர், வீ. பரந்தாமன், காரை செ. சுந்தரம்பிள்ளை ஆகியோர்.

முனைப்பு ஏற்பட்டது'' எனக் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்கள் கூறியிருப்பதும் இக்கருத்தரங்கின் பெறுமானத்தைச் சுட்டப் போதுமானது.

முதல்நாள் அரங்குக்கு மூதறிஞர் சொக்கன் தலைமை வகித்தார்.




கருத்தரங்கில் ஓவியம் பற்றிய அமர்வு

வெளிச்சம் சஞ்சிகையின் ஆசிரியர் சி. கருணாகரன் விரவேற்புரை நிகழ்த்த, யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட வரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் முதலுரை நிகழ்த்தினார். ''வாழ்வியலுடன் இணைந்த நாவல்கள்'' பற்றி செம்பியன் செல்வன் உரையாற்ற, இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் கருத்துரைத்தார். 'வாழ்வியலுடன் இணைந்த அரங்கியல்' குறித்து குழ -ந்தை ம. சண்முகலிங்கம் உரை நிகழ்த்த, திரு. த. கலாமணி கருத்துரை நிகழ்த்தினார். 'வாழ்வியலுடன் இணைந்த ஓவியங்கள்' என்ற பொருளில் திரு. மு. இராதாகிருஷ்ணன் (கோபாலி) உரையளிக்க, திரு. தி. தயானந்தம் (தயா) கருத்துரையளித்தார். தமிழர் பாரம்பரியமும் பண்பாட்டு மாற்றங்களும் பற்றி திருமதி. கோகிலா மகேந்திரன் உரையாற்றினார். தொடர்ந்து பேராளர்களுக்கும், உரையாளர்களுக்குமிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இரண்டாம் நாள் அமர்வுக்கு வண. பிதா பிரான்ஸிஸ் யோசவ் அடிகள் தலைமை வகித்தார். விடுதலைப் புலிகள் உறுப்பினர் திரு. வே. பாலகுமாரன் தொடக்கவுரையையும், யாழ். பல்கலைக்கழக தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் முதலுரையினையும் நிகழ்த்தினர்.

வாழ்வியலுடன் இணைந்த பார -ம்பரிய கலைவடிவங்கள், வாழ்வியலுடன் இணைந்த சிறுகதைகள் பற்றி முல்லைமணி வே. சுப்பிரமணியம், திரு. க. பாலநடராஜன் (இளையவன்) ஆகியோர் உரைகளையும், கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, திரு, க. சட்டநாதன் ஆகியோர் கருத்துரைகளையும் வழங்கினர். உலக விடுதலைப் போராட்ட இலக்கியங்கள் பற்றி திரு. ஐ. சாந்தனும், போராட்ட கால வாழ்வைப் பிரதிபலிக்கும் கலை, இலக்கியங்கள் பற்றி கவிஞர் இ. முருகையனும் எடுத்துக்கூறினர். கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இறுதிநாள் நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி. நாச்சியார் செல்வநாயகம் தலைமை வகித்தார். விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப்பிரிவுப் பொறுப்பாளர் சு. ரவி தொடக்கவுரையையும், தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்



கலந்துகொண்ட கவிஞர்களுடன் போராளிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செல்வன் சிறப்புரையையும், யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி முதலுரையையும் வழங்கினர்.

வாழ்வியலுடன் இணைந்த கவிதைகள் பற்றி, கலாநிதி சபா. ஜெயராசாவும், கவிஞர் விவேக்கும், வாழ்வியலுடன் இணைந்த இசை பற்றி, சங்கீத பூஷணம் சு. கணபதிப்பிள்ளை, இயலிசைவாரிதி ந. வீரமணிஐயர் ஆகியோரும் உரை

இக்கருத்தரங்கு சில பணிகளைச் செய்து முடித்திருக்கிறது. ஒருமித்த தொடர்பற்று இருந்த கலை, இலக்கியவாதிகளை ஒன்று சேர்த்தமை; தமிழீழக் கலை இலக்கியங்களை நாடிபிடித்துப் பார்த்து, அதன் செல்நெறியைச் செப்பனிட முனைந்தமை; இங்கு முகிழ்ந்து வரும் கலை இலக்கியங்கள் பற்றிய தொரு மதிப்பீட்டிற்கான அடிப்படையை ஏற்படுத்தியமை; ஆரம்பப் படைப்பாளருக்குச் சில வழிப்படுத்

வழிப்படுத்தியிருக்கிறது; பல விடயங்களைத் தெளிவாக்கி வைத்திருக்கிறது.

துப்பாக்கி சிணுங்கும்; பீரங்கி புலம்பும். அதன் நடுவே கலை இலக்கியம் படைத்த கலைஞர்கள், இலக்கிய கர்த்தாக்கள் ஒன்றுசேர்ந்து கலந்துகொண்ட இந்நிகழ்வில்,

ஈழத்துக் கலை இலக்கியங்கள் கலை நேர்த்தியும், சமூக அக்கறை



*இடமிருந்து வலமாக: கலாநிதி சபா. ஜெயராசா, கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளை, திரு. க. சட்டநாதன் ஆகியோர்.*


மற்றும் கருத்துரைகளை வழங்கினர். திரு. நா. யோகேந்திரநாதன் 'பரந்துபட்ட மக்களுக்கான கலை இலக்கியம்' பற்றிப் பேசினார்.

வாழ்வுக்கும் கலை இலக்கிங்களுக்கும் இடையிலான தொடர்பு என்ன? அவை எவ்வெக் காலங்களில் எவ்வாறெவ்வாறெல்லாம் கலை இலக்கியங்கள் அமையப் பெற்றன? இன்றைய எமது வாழ்வியலை இவை எங்கனம் பிரதிபலித்துள்ளன? என்ற வினாக்களுக்கு ஓரளவு விடைதந்தமையில் 'வாழ்வியலுடன் இணைந்த....' கருத்துரைகள் குறிப்பிடத்தக்கன.

இறுதியில், மூத்த கவிஞர்கள் ந. வீரமணிஐயர், பண்டிதர் வீ. பரந்தாமன், சா. வே. பஞ்சாட்சரம், இ. முருகையன், சோ. பத்மநாதன், காரை செ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் கவிஞர் தில்லைச்சிவன் தலைமையில் தம் 'நெஞ்சில் குடியிருக்கும் நினைவுகளை'க் கவிதையில் சுவைபடச் சொன்னார்.

கவிஞர் புதுவை இரத்தினதுரை இக்கருத்தரங்கின் நோக்கம், பயன், எதிர்பார்ப்பு என்பவற்றைத் தம் நிறைவுரையிலே வெளியிட்டார்.

தல்களைச் செய்தமை; தமிழக அரசால் தமிழாராய்ச்சி மாநாட்டிற்குச்



*கலை, இலக்கியக் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களில் இன்னொரு பகுதியினர்*

சென்ற சமயம் நாடுகடத்தப்பட்ட ஈழத்தறிஞர்களுக்குக் கௌரவமளித்து 'வீட்டு முற்றத்து மரமே இதந்தரும்' எனக் காட்டியமை என்பன குறிப்பிடத் தகுந்தவை.

கலை இலக்கியவாதிகள் பலருடன் அளவளாவும் போது, அவர்கள் கூறிய கருத்துக்கள் இக்கருத்தரங்கு விளைவித்த சமூகப்பயனை அளக்கப் போதுமானது. குறிப்பாக வன்னி, முல்லை, மன்னார் மாவட்டக் கலைஞர்களை இக்கருத்தரங்கு

யும் மிக்கவனாக, தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் ஏற்படுத்திவரும் சமூகப் பண்பாட்டு மாற்றங்களைத் துல்லியமாக எடுத்துக் காட்டுவனவாக, சரியான திசை வழியில் செல்வனவாக அமைய வேண்டும். அத்தகையதொரு பரிமாணத்துக்கு எமது கலை இலக்கியங்கள் பாய்ச்சலடைய வேண்டும் என்ற வேண்டுகை விடுக்கப்பட்டுள்ளது. இதனை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு கலை, இலக்கிய படைப்பாளர், விமர்சகர், வாசகர் யாவரையும் சார்ந்தது.

**-இயல்வாணன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராளியின் பேனாவிலிருந்து

# காரணம் கூறிவிடு



நில் அலையே!
நீட்டுயர்ந்து ஆர்ப்பரிப்பதன்
காரணம் நீ கூறிவிடு.
காலநதி கலக்கும்
உன்னுடலில்
கரும்புலிகள் கரைந்ததை
எண்ணி எண்ணி
பொங்குகின்றாயா;
பொங்கும் அலையோடு
பெருமிதம் கொள்கின்றாயா?
நில் அலையே!
நீட்டுயர்ந்து ஆர்ப்பரிப்பதன்
காரணம் நீ கூறிவிடு.
வண்ணமலர் பின்னும் கரம்
வலிமை பெற்று
போனதையா;
வரிப்புலியுடன் கரும்புலி
எரிமலையாய்
எழுந்ததையா;
எதையெண்ணிப்
பொங்குகின்றாய்?
நில் அலையே!
நீட்டுயர்ந்து ஆர்ப்பரிப்பதன்
காரணம் நீ கூறிவிடு.
“மல்லர் நாம்” என
மார் தட்டி வந்த
‘சுப்படோரா’வும்
சுக்கலாகிப் போனதையா...?
எதையெண்ணிப்
பொங்குகின்றாய்?
நில் அலையே!
நீட்டுயர்ந்து ஆர்ப்பரிப்பதன்
காரணம் நீ கூறிவிடு.
மங்கை(யும்)
நளாயினியுடன்
வாமனும் லக்ஸ்மனும்
கற்பிட்டிக் கடலினிலே
கலந்து மறைந்ததையா;
எதை எண்ணி
பொங்குகின்றாய்?
நில் அலையே
நீட்டுயர்ந்து ஆர்ப்பரிப்பதன்
காரணம் நீ கூறிவிடு.
எழுத முடியாத
எழுத் தோவியங்கள்
உன் உடலில்
உருப் பெற்றதையா
அன்றி...
உறவுகள் தனை மறந்து
சுதந்திரமே மூச்சென்று
உத்தமர் குருதியினை
உன்னகத்தே கொண்டதை
எண்ணி எண்ணி
ஏங்குகின்றாயா....
பொங்கும் அலையோடு
பெருமிதம் கொள்கிறாயா?
நில் அலையே!
நீட்டுயர்ந்து ஆர்ப்பரிப்பதன்
காரணம் நீ கூறிவிடு!

**- பொன்னிலா -**



ஞானசௌந்தரி - நாட்டுக்கூத்து


காவடி நடனம்

**செஞ்சோலை மகளிர் பாடசாலை கட்டட நிதிக்காக**

**நெதர்லாந்து தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் நடத்திய**

**சித்திரை மாலை**

**நிகழ்வில்....**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கியம் போற்றிடும் எம்மவர் போர்த்திறம்

தமிழன் வரலாறு புகழ் பூத்தது. தமிழன் வரலாறு சீர் படைத்தது. தமிழ் இலக்கிய ஏடுகளைத் தட்டிப்பார்க்கின்றோம். தமிழன் பெருமை அங்கே எட்டிப் பார்க்கின்றது. ஏடுகளின் பக்கங்கள் புரள்கின்றன. எம்மவர் பெருமைகள் திரள்கின்றன. முச்சங்கம் அமைத்து - மூதறிஞர் குழு நிறைத்து, மூவேந்தர் முயற்சியினால் முத்தமிழும் போற்றப்பட்டதை உணர்கின்றோம். முடிதரித்த மன்னர்கள் அடிபணிந்து போற்ற, எத்திக்கும் புகழ் பரப்பி ஏற்றமிகு ஆட்சியனை தமிழன்னை ஓச்சினாள் என்ற புகழுரைகள் இலக்கிய ஏடுகளிற் காட்சி கொடுக்கின்றன. திக்கெட்டும் சீர் நிறைத்து - தீந்தமிழால் புகழ் குவித்து - மற்றோர்கள் மலைத்து நிற்க, மாண்பு பல காட்டி நின்றான். மறத்தமிழன் என்ற மகிமைதனை இலக்கியங்கள் பேசுகின்றன. உலகிற் தோன்றிய மக்களுள் முதலில் தோன்றினோர் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடியினர் என்றெல்லாம் புகழாரம் எம்மவர்க்கு மலிந்து கிடக்கின்றன இத்தன்மையில், தமிழின் மகிமையை தமிழன் பெருமையைத் தரணிக்கு உணர்த்துவதில் தலைசிறந்து விளங்குபவை சங்கத் தமிழ் இலக்கியங்கள் என்ற நிலையில், தமிழ் இலக்கியப் பரப்பிலே தனியிடம் பெற்றுத் திகழ்பவை பத்துப் பாட்டு, எட்டுத்தொகை என்னும் பைந்தமிழ் நூல்களாகும்.



பண்டைத் தமிழன் மாண்புகளை எம்மவரின் பெருமை சேர் வரலாறுகளை போற்றி நிற்கும் தமிழ் இலக்கியங்களுள் அறம், பொருள், வீடு பற்றிப் பேசுபவை சில. இன்பம் பற்றிப் பேசுபவை சில. அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றுள் இன்பம் என்பதே பல்லோராலும் விரும்பப்படுகிறது பெரிதும் வேண்டப்படுகிறது. இவ்வின்பத்தைப் பெறுவதற்குக் களம் அமைத்துக் கொடுப்பது வழி வகுத்து வைப்பது நல்லாட்சி நிலவும் நாடேதான். நல்லாட்சி என்ற தன்மையில், தம்மாட்சி நிலவும் தேசம் ஒன்றிலேதான் அனைத்து இன்பங்களையும் அனுபவிக்க முடிகின்றது. ஒரு நாடு நல்லாட்சி பெற்றுத் துலங்கிட வேண்டின் தம்மாட்சி பெற்று விளங்கிடவேண்டின், அந்நாட்டு மக்கள் மறக்குலத்து மைந்தர்களாக மண்ணுக்குத் தம்மை அர்ப்பணிக்கும் மாவீரர்களாகத் திகழ்ந்திட வேண்டும். இதனாலேயே, பண்டைத் தமிழன் போர்க்கலையைத் தனக்குரியதெனப் போற்றி வளர்த்தான். படைமுகத்தைத் தன் விளையாட்டுக் களமென கருதி வாழ்ந்தான். எம்மவர் வாழ்க்கையின் இயல்புகள் பலவும் போர்ப் பண்புகளுடன் பிணைந்தவையாகவும், மறப்பண்புகளுடன் இணைந்தவையாகவும் விளங்கி நின்றன. பெற்றெடுத்த பிள்ளையின் பிஞ்சுக் கழுத்திலே ஐம்படைத் தாலியை அணிந்து மகிழ்ந்தனர் எம்மவர். புலியின் பல்லைக் கோர்த்துச் செய்த புகழ்தரு தாலியைப் புனைந்து களித்தனர் பண்டைத் தமிழர். காதற் கிழத்தியின் கைதனைப் பற்றிட களிறினை எறிந்து களித்து நின்றனர் பண்டைத் தமிழர். காளைச் சண்டையும், கோழிச்சண்டையும் கண்களிற் கண்டிட விருப்புடன் எழுந்தனர் மறக்குல மைந்தர்கள். புறவாழ்க்கையிலே போரினைப் போற்றி மகிழ்ந்த பண்டைத் தமிழர்கள் அகவாழ்க்கையிலும் போரினைப் போற்றி நின்றமையை இலக்கியங்கள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன.



இலக்கிய ஏடுகளைப் புரட்டி எம்மவரின் பண்டைப் பெருமைகளை பார்வியந்திடப் புரிந்துநின்ற போர்ச் சாதனைகளைப் பார்த்திடும்போது மெய்சிலிர்த்து நிற்கின்றோம். போர்களில் ஈடுபடுவதையும், வெற்றிகள் பல பெற்றிடுவதையும் கடமையெனக் கொண்டிருந்தனர் பண்டைத் தமிழ்க் காவலர்கள். பழங்காலத் தமிழ் மன்னர்கள் போர் வீரத்திற்கே முதன்மை கொடுத்தனர்.

**'போர் எனில் புகலும் புனைகழல் மறவர்'** என்று தொடரும்,

**பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை**
**வளியொடு தெண்கண் கேட்பின்**
**அதுபோர் என்னும் என்னையும் உளனே.**

என்ற தொடரும் எம்மவரின் வீர உணர்வையும் போரிடத் துடிக்கும் குன்றாத ஆர்வத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றன போர்க்களம் சென்று மாற்றானுடன் பொருதி இறப்பதே பெருமையெ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



னக் கொண்டனர் பண்டைத் தமிழ் வீரர்கள். மன்னர் செயலும் மக்கள் செயலும் இதனை உணர்த்தி நிற்கின்றன. கணைக்காலிரும்பொறை என்ற சேர அரசனுக்கும் செங்கணன் என்ற சோழ அரசனுக்கும் பகை மூண்டது. போர் நிகழ்ந்தது. சேரன் சிறைப்பட்டான். மான உணர்வுடன் சிறையிலே உணவின்றி வாடினான். நீர் வேட்கையால் நினைவு தடுமாறிய நிலையில் "தண்ணீர்" எனக் கேட்டு விட்டான். தண்ணீர் விரைந்து வந்தது. தவறினை மன்னன் உணர்ந்தான். அந்த நீரைப் பருகாமல் மான உணர்வுடன் சேரன் பாடிய பாடலை புறநானூறு எமக்குத் தருகிறது.

www.tamilarangam.net

"குழவியிறப்பினும் ஊன்தடிப் பிறப்பினும் ஆளன்றென்று வாளாற் றப்பார்" என்ற பாடலடிகளில் மன்னனின் போர் உணர்வு வெளிப்படுவதுடன், இயல்பாய் ஒருவர் வீழ்ந்துபடினும் மெய்யிலே வீரவடு தாங்கி வீழ்வதே சிறப்பு என்பதும் உணர்த்தப்படுகின்றது. பிள்ளை இறந்து பிறப்பினும் தசைப்பிண்டமாய்ப் பிறந்தாலும் அதனை கருப்பையிற் கிடத்தி வாளால் துண்டித்த பின்பே அடக்கம் செய்யப்பட்டது. போர் புரியும் வீரன் புறங்காட்டி ஓடுவது அறமல்ல என்பதும், முதுகிற் புண்பட்டால், தீரா இழிவும் மாறாவடுவும் ஏற்படும் என்பதும் பெரிதாய் மதிக்கப்பட்டது. தம் வீரர் போர் முனையிற் போர்புரியும் பொழுது தம்மைப் பாதுகாப்பதற்காகத் தனியிடம் புகமாட்டார்கள் மன்னர்கள். இன்பமாகிய மனைவியின் தோள் மருவு தலையும் மறந்து போர் ஒன்றையே இன்பப் பொருளெனக் கண்டு இலட்சியம் எனக்கொண்டு வாழ்ந்தனர் மறமன்னர்கள்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் போர்க்களத்திற் காட்டிய திறமைசேர் வீரத்தைப் புறநானூறு அழகாகக் கூறுகிறது.

# சிறீலங்காவின் படையணிக்கு புதியவர்கள்...

வடக்கு கிழக்கு போர்முனையிலிருந்து பல இராணுவச் சிப்பாய்கள் தப்பி தலைமறைவாகி உள்ளார்கள். விடுமுறையில் செல்லும் இராணுவச் சிப்பாய்கள் திரும்பி வருவதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். சிறீலங்காப் படையினரிடம் படுமோசமான மீளமுடியாத ஒரு சோர்வுநிலை ஏற்பட்டிருப்பதால் அவ்வாறான நிலையிலிருந்து அவர்களை மீட்டெடுப்பது எப்படியென இராணுவ உயர்பீடம் ஆராய்ந்து வருவதாக சிறீலங்காச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் ஈடுபடுவதற்கு தங்கள் படையணிகளை புதுப்பிக்க வேண்டிய நிலையில் தாங்கள் உள்ளதாக உணரத் தொடங்கியுள்ளனர். இதற்கு அதி சக்தி வாய்ந்த கருவிகளையும், ஆயுதங்களையும், புதிய போர் நுட்பங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதான நிலையில் அவர்கள் உள்ளார்கள். இதற்கு பல கோடி ரூபாய்கள் நிதி தேவைப்படுவது ஒருபுறமிருக்க 88,000-கும் உட்பட்ட படையினரே தற்போது கடமையில் ஈடுபட்டிருப்பதாகவும் போரில் ஈடுபட இத்தொகை மிகச் சிறிய எண்ணிக்கையிலானதே எனவும் அவர்கள் கருதுகிறார்கள். இதனால் புதிய ஆளணிகளை படையில் சேர்த்துக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். படையில் புதிதாய் இணையும் வீரர்களுக்கு காயப்பட்டால் அல்லது இறக்க நேர்ந்தால் 1,50,000 ரூபா பணம் தரப்படும் என்பது போன்ற விபரங்களுடன் கூடிய விளம்பரங்கள் செய்யப்பட்டு வருகின்றன. சிறீலங்கா தேசத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள கிராமங்களில் எல்லாம் இதுபோன்ற கவர்ச்சிகரமான ஏமாற்றுகரமான துவேச வார்த்தைகளுடன் கூடியதுமான சுவரொட்டிகள் ஆங்காங்கே ஒட்டப்பட்டு வருகின்றன.

இத்தகைய சுவரொட்டிகளில் காணப்படும் அறிவிப்புக்களாலும் விளம்பரங்களாலும் தங்கள் பாதைகளை மாற்றிக்கொண்ட அப்பாவி சிங்கள இளைஞர்கள் சிலரையே இப்படத்தில் காண்கிறீர்கள்.

புத்த பிக்குகளைப் போல வேடமிட்டவர்களும் தாமும் படையில் இணைந்து போராடத் தயார் என்ற ஏமாற்றுக்களை செய்து வருகிறார்கள். இது சிறீலங்கா தேசத்தில் வளர்ந்து போயுள்ள பௌத்த பேரினவாதத்தை, போரில் முழுமையாகப் பயன்படுத்த எடுக்கப்படும் உத்தி நடவடிக்கையாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். பௌத்த மத பீடங்களில் இது குறித்த கருத்து முரண்பாடுகள் தோன்றியுள்ளதாகவும் பேசப்படுகின்றது. எது எப்படியிருப்பினும் ஆட்சேர்ப்பு நடவடிக்கை தோல்வி நிலையை அடைந்திருப்பதை அறிய முடிகிறது, சிறீலங்காவின் புதிய அதிபர் சந்திரிகா பல முனைகளிலும் ஏற்பட்டு வரும் அழுத்தங்களாலும், பிரச்சினைகளாலும் குழப்பமான நிலையில் காணப்படுகிறார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'உடன்று மேல் வந்த வம்ப மன்னரை
வியந்தன்று மிழிந்தன்று மிலனே யவரை
அழுந்தப் பற்றியகல் விசும்பார்ப் பெழக்
கவிழ்ந்து நிலஞ்சேர வட்டதை
மகிழ்ந்தன்று மகனுமிலனே'

'முறை முறையாக வெகுண்டு மேல் வந்த புதிய வீரரை மதித்ததும் அவமதித்தும் இலன். அவரை இறுகப்பிடித்துப் பரந்த ஆகாயத்தின் கண்ணே ஒலி எழக் கவிழ்ந்து உடலம் நிலதத்கததின் கண்ணே பொருந்தக் கொன்றதற்கு மகிழ்ந்ததும் இவ்வாறு செய்தோமென்று தன்னை மிகுத்ததும் அதனினும் இலன்'

நெடுஞ்செழியன் போர்த்திறம் இங்கே போற்றப்படுகிறது. மறப்பண்பு இங்கே புனிதமாக்கப்படுகின்றது.

மாற்றான் படையினரைக் கொன்று குவித்து, பசும் பொன்னாலான மன்னர்தம் முடியினை எடுத்துத் தம் அடியினை அலங்கரித்திடும் வீரக் கழலாய் மாற்றி அமைத்து, மனங்களித்தலும், பகையரசர்களின் காவலையுடைய மதில்களை அழித்து, அங்கு இருந்த அரசனுடைய முடிக்கலமதனால் தமக்குகந்த வீரமுடியினைச் செய்து புனைதலும் எம்மன்னர்களின் சிறப்பியல்புகளாக இருந்தன.

'கடி புனைந்த பசும்பொன்னின்
அடி பொலியக் கழறைஇய' என்ற தன்மையிற் புறநானூறும்

'கடி மதிலெறிந்து குடுமிகொள்ளும்' என்ற தன்மையிற் பெரும்பாணாற்றுப்படையும் தமிழ் மன்னர்களின் போர்த் திறமைகளைப் போற்றிப்பாடுகின்றன. போரிலே வெற்றி பெற்ற மன்னர்கள் பகையரசரின் முடிதனைக் கவர்ந்து கொள்ளுதல் சிறந்தவொரு போர் இலக்கணமாகக் கொள்ளப்பட்டது. முரசைக் கவர்ந்ததன் மேல் களவேள்வி செய்வது பெருமரபாக இருந்தது. பகையரசரின் முரசுகளுடன், வெண்கொற்றக் குடையினையும் பற்றிக்கொண்டு, தன் புகழுரை எங்கும் பரவிட, அவர்தம் படைகளைக் கொன்று களவேள்வி செய்த அரசரின் போர்த்திறமைகளை அகநானூறு போற்றிப் பேசுகின்றது.

மாற்றான் மேல் படையெடுத்துச் சென்ற மன்னர்கள் மாற்றான் நாட்டைப் பலவழிகளிற் கூறுபடுத்தினர் சிதைத்தழித்தனர். காற்றினும் கடிதாய்ப் பகை நாட்டினுள் சென்ற நெடுஞ்செழியன் பகை நாடு பற்றியெரியும்படி பெருநெருப்பை மூட்டினான்.

'காலென்ன கடி துரா அய்
நாடு கெட வெரி பரப்பி
யாலாங்கானத் தஞ்சு வரவிறுத்
தரசுபட வமருழக்கி'

செழியன் திறம் இங்கும் பேசப்படுகின்றது. செழியனின் போர்த் திறத்தைப் புறநானூறு மேலும் போற்றுகிறது.

'பொருநரும் இளைஞர் கொண்டியும்
பெரிதென
எள்ளிவந்த வம்ப மன்னர்
புல்லென் கண்ணர் புறத்திற் பெயர
ஈண்டு அவர் ஆடுதலும்
ஒல்லான் ஆண்டு அவர்
மாண் இழை மகளிர் நாணினர்
கழியத்
தந்தை தம்மூர் ஆங்கண்
தெண்கினை கறங்கச் சென்று
ஆண்டு அட்டனனே'



'நெடுஞ்செழியன் சிறுவன்' என்று எள்ளி நகையாடிப் போரிட வந்தவர்களைப் போர்க்களத்திலே கொல்லவொன்னாதவனாக அவரவர் ஊர்வரை ஓடவெருட்டி ஆங்காங்கே போர்ப்பறை முழக்கிச் சென்று அழித்த செழியன் போர்த் திறமையை இலக்கியங்கள் மேலும் இயம்புகின்றன.

பகைவரை வெட்டித்தம் வடிவினை இழந்த வாள்கள் பகைவர்தம் நாடழித்த தன்மையில் நிலையிழந்த வேல்கள் பகையரசனை மோதி அழித்துக் கிம்புரி கழன்ற களிறுகள் போர்க்களக் குருதிக் கறை படிந்த குளம்புகளையுடைய குதிரைகள் ஆகியவற்றுடன் கடல் நிகர் படையுடன் போரினைச் செய்து துளையிடப்பட்ட மார்புடன் நிற்கும் அதியமான் நெடுமான் அஞ்சியின் போர்த்திறமை போற்றி நிற்கின்றது புறநானூறு. அதியமான் புகழ் மேலும் உயர்கிறது.

'மறப்புலி உடலின் மான்கணம் உளவோ
மருளின விசும்பின் மாதிரத்து ஈண்டிய
இருளும் உண்டோ ஞாயிறு சினவின்
அச்சொடு தாக்கிப் பாருற்று இயங்கிய
பண்டச் சாகாட்டு ஆழ்ச்சி சொல்லிய
அரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையும்
உண்டோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



**எழுமரம் கடுக்கும் தாள்தோய்**
**தடக்கை**
**வழுவில் வன்கைமழவர்**
**பெரும**
**இரு நில மண்கொண்டு**
**சிலைக்கும்**
**பொருநரும் உளரோ நீகளம் புகினே.'**

'புலி சீறினால் எதிரே நிற்கும் மானினம் உளவோ? ஞாயிறு எழுமாயின் ஓடாது நிற்கும் இருளும் வானில் உளதோ? ஆற்றல் மிக்க கடாவானது போகுதற்கு அரிய துறையும் உண்டோ? இல்லை அன்றோ! அவை போல முழந்தாள் வரை நீண்ட வலிய கையினையுடைய வீரர்க்குத் தலைவனே! நின்நாட்டைக் கைப்பற்றிப் போரிடும் வீரரரும் உளரோ ? நீ களம் புகுந்தால் எவர்தாம் நின்னை எதிர்க்க வல்லார்.'


www.tamilarangam.net

அதியமான் நெடுமான் அஞ்சியின் போர்த்திறமையை போற்றிப் பாடுகின்றார் ஔவையார். விழுப் புண்களைத் தம் மெய்யினில் விரும்பி ஏற்றனர் எம்மவர்.

**'விழுப்புண் படாத நாளெல்லாம்**
**வழுக்கினுள்**
**வைக்குந் தன்னாளை யெடுத்து'**

என்பதற்கமைய விழுப்புண் படாத நாள்களைத் தம் வாணாளாகக் கருதாது இருந்தனர் எம் முன்னோர். போர்பற்றி எழுந்த உடற்புண் கண்டு உவகை மிகக் கொண்டனர். முத்தாகவும், பவளமாகவும், வைரமாகவும், மாணிக்கமாகவும் தம்மெய்யிற் படும் விழுப்புண்களைப் போற்றி மதித்தனர்.

'நெடுஞ்சேரலாதன் தன்னுடன் போரிட்ட ஆரியரையும், யவனரையும் முறியடித்தான். யவனர் கைகளைப் பின்பக்கமாகக் கட்டி அவர் தம் தலைகளில் நெய்யைப் பெய்து, தனது வஞ்சி நகரத்திற்கு அழைத்து வந்தான். அவர்களிடமிருந்த சிறந்த அணிகளையும் எடுத்துக்கொண்டான். இமயவரம்பன் தான் வென்ற ஏழு அரசர்களின் பொன் முடிகளை உருக்கித் தனது வெற்றிக்கு அணியாகப் பொன்மாலை ஒன்றை ஆக்கி அணிந்திருந்தான் எனிறெல்லாம் பதிற்றுப்பத்து பகர்கின்றது. மதுரைக்காஞ்சி, நெடுநல் வாடை என்னும் இரண்டு பாட்டுக்களுக்கும் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன். இவன் கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரவிரும்பொறை என்பானு




மே 1-ம் திகதி, பாரிஸில் நடைபெற்ற மேதின ஊர்வலத்தில் மொறோக்க நாட்டைச் சேர்ந்தவரும், பிரான்ஸில் வசித்து வருபவருமான பிறாகிம் புவாராம் (Brahim Bouarram) என்னும் இளைஞர், இனத்துவேசிகளால், அமைதியாக ஓடிக்கொண்டிருக்கும் செயின் நதி ஆற்றில் தூக்கிவீசப்பட்டதில் இறந்துபோயுள்ளார்.

இந்த சம்பவம் நடந்த இடத்திற்கு பிரான்சின் முன்னாள் ஜனாதிபதி மித்திரோன், கொலைசெய்யப்பட்ட இளைஞனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக சென்றிருந்தார்.

அந்த நதியில் மலர் வளையம் ஒன்றை எறிந்து தனது அஞ்சலியைச் செலுத்தி உரையாற்றுகையில், "இது வேதனைப் படவேண்டிய விடயம். எமது மக்கள் இக் கொலையை விரும்பவில்லை. மறைந்த இளைஞர் எமது இதயத்தில் என்றும் இருப்பார்" எனத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டன் தலையாலங்கானத்திலே போர் செய்து வென்று அவனைச் சிறைப்படுத்தினான். போரின் புகழினால் இவன் பெயரும் பெரிதாயிற்று. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் போர்த் திறமையைப் புறநானூற்றின் மூலம் போற்றுகின்றார் ஆலூர்மூலங் கிழார்.

**"காலனும் காலம் பார்க்கும் பாராது**
**வேல் ஈண்டு தானை விழுமியோர் தொலைய**
**வேண்டிடத்து அடூஉம் வெல்போர் வேந்தே**
**திசை இரு நான்கும் உற்கும் உற்கவும்**
**பெருமரத்து இலையில் நெடுங்கோடு வற்றல் பற்றவும்**
**வெங்கதிர்க் கனலி துற்றவும் பிறவும்**
**அஞ்சுவரத் தகுந புள்ளுக்குரல் இயம்பவும்**
**எயிறுநிலத்து விழவும் எண்ணெய் ஆடவும்**
**களிறுமேல் கொள்ளவும் காழகம் நீப்பவும்**
**வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவும்**
**கனவின் அரியன காணா நனவின்**
**செருச் செய் முன்ப....**

'வேல் நெருக்கம் கொண்ட பெரும் படை உடைய மேலான மன்னரையும் கொன்றழிக்கும் வெற்றிப் போராற்றல் உடைய வளவனின் போர்த்திறமையினால் எட்டுத்திக்கிலும் எரிகொள்ளிகள் எரிந்து வீழ்கின்றன. பெருமரங்கள் இலையற்றுக் கிளைகள் வற்றி உலர்கின்றன. அச்சந்தரும் பறவைகள் ஒலிக்கின்றன. தலைமயிர்களில் எவரோ எண்ணெய் வார்க்கின்றார்கள். பன்றி ஏற்றினை ஏறுகின்றது. ஆடைகள் களையப்படுகின்றன. வலிய படைக்கலங்கள் வைக்கப்பட்டுள்ள கட்டில்கள் முறிந்து வீழ்கின்றன' என்ற தன்மையிலான இந்நிகழ்வுகள் அனைத்தும் பகைவர்தம் கனவிலும் நனவிலும் நிகழ்வதாகக் கூறுகிறது புறநானூறு.

சோழன் கரிகாற் பெருவளத்தானின் போர்த்திறமையைப் போற்றி நிற்கும் புறநானூறு.

'எல்லியும் இரவும் என்னாய் பகைவர் ஊர்சுடு விளக்கந்து அழுவிழிக் கம்பலைக் கொள்ளை மேவலை'

'அவன் பகலிலும் போர் செய்வான். இரவிலும் போர் செய்வான். பகைவன் ஊர்கட்குத் தீயிட்டு அந்த ஒளியிலே இரவிலும் போர் செய்வான். பகைவர் ஊரார் அழுகின்ற ஆரவார ஒலி அவனுக்கு மிக விருப்பமானது'

சோழனின் போர்த்திறம் இங்கே ஓங்கி நிற்கின்றது. பண்டைத் தமிழர்தம் போர்த்திறமைகள் மகளிர் தம் மான உணர்வினாலும் போற்றி வளர்க்கப்பட்டமையையும் இலக்கியங்கள் எடுத்தோதுகின்றன. தம் வயிற்றிலே கருவாகி - கவின் பெறு வடிவிலே உருவாகி, தாம் கொடுத்த வீரப்பால் குடித்த மழலைகள் மறம் குன்றா மானமும், உரங்குன்றா வீரமும், உடையோராய்த் திகழவேண்டும் என்பதைத் தமிழ்த் தாய்மார்கள் தமது இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தனர்.

**"இடைப்படை யழுவத்துச் சிதைந்து வேறாகிய**
**சிறப்புடையாளன் மாண்பு கண்டருளி**
**வாடுமுலையூறிச் சுரந்தன**
**ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே"**

கையிலே வேல் தாங்கி - களத்திலே குவிந்துநின்று படை பிளந்து பாரிய படை அழித்துப் பாங்குடனே போர்க்களத்தே புரண்டுவிட்டான் ஒரு வீரன். அவன் உடலும் சிதைந்துவிட்டது. மறக்குலத்துத் திலகமாய் அவனை வளர்த்துவிட்ட தாய் தன் சேயின் அரும் செயல் கண்டு அகமும் முகமும் ஒருங்கே மலர்கின்றாள். மைந்தனின் வீரம் கண்டு மாதாவின் முலைகள் பால் சுரக்கின்றன. 'போரில் என் மகன் புறமுதுகிட்டு ஓடியிருப்பின் அவனுக்குப் பாலூட்டிய இம்முலையை அறுத்திடுவேன்' என்று சபதம் பூண்டு தன் மகனின் போர்திறமையிலே கொண்ட நம்பிக்கையுடன் போர்க்களம் புகுந்து, தன் மகன் இறந்து கிடக்கும் நிலைகண்டு ஈன்றபொழுதிலும் பெருமகிழ்ச்சி கொண்டாள் தாய்.



**"படையழிந்து மாறினனென்று பலர் கூற**
**மண்டமர்க்குடைந்தனனாயின் உண்டவென்**
**முலையறுத்திடுவென் யானெனச் சினைஇக்**
**கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்**
**செங்களம் துழவு வோன் சிதைந்து வேறாகிய**
**படுமகன் கிடக்கை காணூஉ**
**ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே"**

போர்க்களத்தே வீரராய் வீழ்ந்துவிட்ட மைந்தரின் வீர உணர்வும் அவர்களைப் பெற்றெடுத்துப் பேணி வளர்த்த தாய்மாரின் மான உணர்வும் ஒருங்கே நிழலாடுகின்றன.

தரைப் போரிகளில் ஏற்றமிகு வகையினிலே எண்ணற்ற சாதனைகள் புரிந்து நின்ற பண்டைத் தமிழர் கடற்போர்களிலும் தலைசிறந்து விளங்கினர். அஞ்சாநெஞ்சுடன் கடலில் பகைவருடன் போரிட்ட சேர மன்னன் 'பரதவன்' அல்லது 'கடல் மறவன்' எனப் போற்றப்படுகின்றான். கடலது பொங்கிச் சேர நாட்டை அழிக்க முற்பட்ட போது தன் வலிமையினாலும் தன் படையினரின் துணையினாலும் அக் கடலை பின்போக ஓட்டியமையால் செங்குட்டுவன் என்பான், 'கெடலருந் தானையோடு கடல் பிறக்கு ஓட்டிய செங்குட்டுவன்' எனப்பட்டான்.

## முதுகுக்கவசம்

**புகழேந்தியை மட்டந்தட்டுவதற்கு எண்ணிய ஒட்டக்கூத்தர் "எங்கள் சோழ அரசன் முதுகுக் கவசம் கட்டுவதில்லை. ஏன் தெரியுமா?" என்று பெரிய வீரன் என்ற அர்த்தம் தொனிக்கப் பேசினார்.**

**உடனே புகழேந்தி "உங்கள் சோழன் முதுகுக்குக் கவசம் போடாமல் இருப்பதன் ரகசியம் எங்கள் பாண்டியன் மீதுள்ள நம்பிக்கைதான். அதாவது புறமுதுகு காட்டி ஓடுகிறவர்கள் மீது பாண்டியன் வேலெறிய மாட்டான்" என்று கூறினார்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடற் கொள்ளைக்காரரான 'கடம்பர்' என்னும் இனத்தவரை இமயவரம்பனும், செங்குட்டுவனும் தத்தம் காலத்துக் கடற் போர்களில் முறியடித்துத் தம் வாணிகத்தை நிலை நிறுத்தினர். செங்குட்டுவன் பெற்ற கடற்போர் வெற்றிகளைப் போற்றி நிற்கின்றன பதிற்றுப்பத்தும். அகநானூறும் கடல் நீரை அரணாகக் கொண்டு அக்கடலிடையே வாழ்ந்து வந்த பகைவரைக் கப்பற் படையுடன் சென்று, அறவே அழித்துச் செங்குட்டுவன் பெற்ற வெற்றியினால் 'கடலோட்டிய வேல் கெழு குட்டுவன்', 'கடலோட்டிய வெல்புகழ் குட்டுவன்' எனப் பாராட்டப்பட்டான். புயலெனச் சீறிப் பெரும் அலையென மாறி ஆரிய மன்னரும் அவர்தம் படைகளும் அலறுமாறு அவர்களைத் தாக்கி, புகழினையுடைய இமயத்தின் மீது வளைந்த விற் பொறியைப் பதித்து தன் சீற்றத் தாற் சினம்கொண்டிருந்த பகை வேந்தரைப் பணித்து வந்த சேரன் புகழை அழகாகப் பாடுகின்றது அகநானூறு.

**"ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்**
**தொன்று முதிர் வடவரை வணங்கு விற்**
**பொறித்த**
**வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்..."**

சேரனின் போர்த்திறம் இங்கே தோற்றம் கொடுக்கிறது. சோழன் கரிகாலன், வசபன் என்னும் மன்னனின் ஆட்சிக் காலத்தில் கடற் படையின் துணைகொண்டு இலங்கை மீது போர்தொடுத்தான். இப்படையெடுப்பில் கரிகாலன் பெரு வெற்றிபெற்றான். வெற்றி பெற்ற கரிகாலன் பன்னீராயிரம் படையினரை சிறைசெய்து சென்றான். கடலிலே கோட்டை கட்டிப் போதிய பாதுகாப்புடன் இருந்த கடம்பர் மீது படையெடுத்தனர் சேரநாட்டு வீரர்கள். யானைமீதேறி நின்று கடலில் இறங்கி வேல் வீசினர். பகைவரின் பாதுகாப்பு உடைபட்டது.

**"கடும்பரிப் புரவி ஊர்ந்த நின்**
**படுந்திரைப் பனிக்கடல் உழந்த தாளே"**
**"கெடல் அரும்பல் புகழ்நிலைஇ நீர்புக்கு**
**கடலொடு உழந்த பனித்துறைப் பரதவ"**

என்ற அடிகளில் சேர மன்னன் அஞ்சாநெஞ்சுடன் கடலினுள் பகைவருடன் போரிட்ட பரதவன் அல்லது கடல் மறவன் போற்றப் படுகிறான்.

"கடற்கொள்ளைக் கூட்டத்தவராகிய கடம்பரையும், ஆரிய அரசர்களையும், யவன அரசர்களையும் இமயவரம்பன் வென்றடக்கி அவர்களிடமிருந்து பெற்ற பொருட்களையும், அணிகலன்களையும், செல்வங்களையும் தன்னுடைய மாந்தை என்னும் தலைநகருக்குக் கொண்டுபோய் வீரர்களுக்கும் புலவர்களுக்கும் வழங்கியது போக எஞ்சியவையை நிலத்தில் புதைத்து நிலந்தின்ன விடுத்தான்'' என்ற தன்மையில் இமயவரம்பனின் கடற்போர்த் திறமை பேசப்படுகிறது.

**"வலம்படு முரசின் சேரலாதன்**
**முந்நீர்ஓட்டிக் கடம்பறுத்து இமயத்து**
**முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து**
**நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்**
**பனிதிரை தந்த பாடு சொல் நன்கலம்**
**பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்**
**ஒன்று வாய் நிறையக் குவைஇ**
**அன்றவன்**

நிலந்தினத் துறந்த நிதியம்'' என்ற மாமூலனார் பாடல் மூலம் இதனை அறிய முடிகின்றது.

பழந்தமிழ் மன்னர்களின் கடற் படை வலிமையினாலும் கடற் படை வீரரின் வன்மையினாலும் தமிழ்க் கொடிகள் கடல் கடந்தும் பறந்தன.

மாற்றான் மீது படையெடுத்துச் சென்று அவனைத் தோற்றோடச் செய்த மன்னர்கள் தமது வெற்றியை உறுதி செய்யும் வகையில் பகையரசர்களின் காவல் மரங்களை வெட்டுதல் சிறந்த ஒரு போர் மரபாகப் போற்றப்பட்டது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் பகைவரின் காவல் மரமாகிய கடம்ப மரத்தை வெட்டினான் என்று பதிற்றுப்பத்து கூறுகிறது.

'பலர் மொசிந் தோம்பிய திரள் பூங்கடம்பின் கடியுடை முழுமுதறு மியவோய்' என்ற தொடர் இதை உணர்த்துகிறது.

கடற்படையின் துணைகொண்டு பகைவர் மீது தொடுத்த கடற் போரில் அவர்களது காவல் மரமாகிய கடம்பையும் வெட்டி வீழ்த்தி அக்கடம்பினால் முரசு செய்து முழக்கினான்.

**"வலம்படு முரசிற் சேரலாதன்**
**முன்னீரோடிக் கடம்பறுத்து"**

என்ற அகநானூற்றுப் பாடல் மூலம் இதனை உறுதி செய்திட முடிகிறது.

வஞ்சினம் கூறி போர்தனைப் புரிதலும், அப்போர்களில் திறமைகள் காட்டி வெற்றிகள் பெறுதலும் எம்மவரின் போர்ப்பண்புகளாக விளங்கின.

என்னை இளையன் எனப் புல்லிய மொழி மொழிந்த சினம் பொருந்திய அரசரைப் போரின் கண் சிதறப் பொருது அவர்தம் முரசத்தோடு கூட அவரை கைக் கொண்டிலேனாயின் எனது குடை நிழற்கண் வாழ்வார், தாங்கள் சென்றடையும் நிழல் காணாதே, கொடியன், எம்முடைய அரசன் என்று கருதிக் கண்ணீரைப் பரப்பிப் பழிதூற்றும் கொடுங்கோலை உடையேனாகுக' என்று தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் போர்க்களத்தில் வஞ்சினம் கூறி நிற்கின்றான் என்ற தன்மையில் புறநானூறு செழியன் புகழ்பாடுகிறது.

சோழன் நலங்கிள்ளி போர்செய்யப் புகுமுன்,

'என் உள்ளத்தை இகழ்ந்த அறிவில்லாதோன் துயில்கின்ற புலியை இடறிய குருடன் போலப் பிழைத்துப் போதலோ அரிது. அவன் வருந்தும்படி போர் செய்யேனாயின் தம் நெஞ்சிலே காதல் கொள்ளாத பொதுப் பெண்டிர் மார்பில் என் மாலை புரளுவதாக' என்று வஞ்சினம் கூறிப் போர் செய்தமையையும் புறநானூறு பாடுகிறது.

**'ஆற்றலுடையோராற்றல் போற்றாதென்**
**உள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்**
**றுஞ்சு புலியிடறிய சிதடன் போல**
**உய்ந்தனன் பெயர்தலோ வரிதே**
**மைந்துடைக்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கழைதின் யானைக்கால் அகப்பட்ட
வன்றிணி நீள்முனை போலச்சென்று
அவண்
வருத்தப் பொரேனாயின் பொருந்திய
தீது இல் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லாமுயக்கு இடைக் குழைக
என்தாரே'

வஞ்சினம் கூறுவதிலும் எம்மவர் தமது போர்த்திறமைகளைப் புலப் படுத்தத் தவறவில்லை.

இவ்வாறெல்லாம் தரையிலும், கடலிலும் பெரும் போர்கள் நிகழ்த் தித் தமது வெற்றிக் கொடியைப் பட்டொளி வீசிப் பறக்கவிட்டனர் தமிழ் மன்னர்கள். போரில் வேட் கையும் இறப்பில் அஞ்சாமையும் பெற்றிருந்தனர் பண்டைத் தமிழர் கள். அம்பும் வேலும் நுழையும் 'போர் முனைகளைத் தேடிச் சென்று அங்கு போர்புரியும் மறப்பண்பை வளர்த்து நின்றனர் எம்மவர். அடிக்கின்ற கோலுக்கு அஞ்சாது மென்மேலும் சீறிவரும் பாம்பைப் போன்று செயல்புரிந்த வீரரின் வியத்தகு திறமையினால் எங்கும் தமிழன் புகழ் பரந்து வீசியது.

**- வ. ஆ. அதிரூபசிங்கம்**



மேஜர் மதுஷா (திருமலை)



கப்டன் சாந்தா (புங்குடுதீவு)

**19-04-95-ல் திருகோணமலைக் கடலில், சிறீலங்கா கடற்படைக்குச் சொந்தமான 'ரணசுரு'வையும் 'சூரயா'வையும் சுட்டெரித்த கடற்கரும்புலி வீரர்கள்.**



மேஜர் கதிரவன் (பரந்தன்)



மேஜர் தணிகைமாறன் (கட்டைக்காடு)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அபத்தமும் அர்த்தமும்

## இரண்டாம் பாகம்

## பிரம்மஞானி

பிரெஞ்சு இருப்பியவாதிகளில் அல்பேர்ட் கம்யூ (Albert Camus, *1913-60*) ஒரு வித்தியாசமான மனிதர். அவரது உலகப் பார்வையும் வித்தியாசமானது. தான் ஒரு இருப்பியவாதி என்பதை அவர் மறுத்து வந்தார். ஆயினும் இருப்பிய தத்துவத்தின் சிறப்பு பிரதிநிதியாகவே அவர் கருதப்பட்டார்.

கம்யூவை ஒரு தத்துவாசிரியர் என சித்தரிக்கமுடியாது. இருப்பிய தத்துவம் பற்றி அவர் கனமான நூல்களை எழுதவில்லை. சொற்பமாக, சுருக்கமாக இரு மெல்லிய நூல்களில் (The Myth of Sisyphus, The Rebel) தனது தத்துவப் பார்வையை விளக்கினார்.

அவர் ஒரு எழுத்தாளர். இலக்கியப் படைப்பாளி. நாவல்கள், நாடகங்கள், சிறு கதைகளாக தனது வாழ்வனுபவத்தை எழுத்தில் வடித்தார். இளம் வயதில், 44வது வயதில் இலக்கியத்திற்கான நோபல் பரிசு அவருக்குக் கிடைத்தது.

அபத்தமான உலகில், அர்த்தமற்று வாழும் அபத்த நாயகனாக (Absurd Hero) அவர் மனிதனைக் கண்டார். இந்த அபத்த மனிதனின் அவலமான, அர்த்தமற்ற வாழ்வு பற்றி ஆக்ரோஷத்துடன் எழுதினார்.

கடவுள் இல்லாத உலகத்தில், நிச்சயமற்றதான வாழ்வில் மனித இருப்பிற்கு அர்த்தமென்ன? வாழ்வின் அர்த்தத்தை கண்டுகொள்ளாமல் வாழ்வதில் என்ன அர்த்தமுண்டு?

இந்தப் பிரபஞ்சம் மனிதனைப் படைத்திருக்கிறது. ஒரு விந்தையான பிராணியாக, விழிப்புள்ள ஜீவனாக, எதையும் விசாரித்தறியும் விவேகமுடையவனாக மனிதனைச் சிருஷ்டித்திருக்கிறது. இந்த அற்புதமான மனிதன் எதற்காகப் படைக்கப்பட்டான்? இந்தப் படைத்தலின் குறிக்கோள் என்ன? பிரபஞ்சத்திற்கும் மனிதனிற்கும் மத்தியிலான உறவு எப்படியானது?

மனிதன் விடைதேடி அலைகிறான். தெளிவுபெற விழைகிறான். ஆனால் மனிதனால் எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை. அறிய, அறிய, அறியாமை மேலோங்குகிறது. அபத்தத்தின் அலங்கோலம் தெரிகிறது. புரியப் புரிய, உலகம் புதிராக மாறுகிறது. தத்துவத் தேடல்களும், விஞ்ஞான விசாரணைகளும் மனிதனுக்கு உண்மையைக் காட்டவில்லை. வாழ்வின் அர்த்தத்தை விளக்கவில்லை. பொய்மையின் சிதைவுகளாக, எங்கும் எல்லாம் அபத்தத்தின் அசிங்கமான முகம்தான் தெரிகிறது.

நான் தொட்டுணர்ந்து, பட்டறிந்து கொள்ளும் இந்த உலகம் எனக்குப் பரிட்சயமானது. இந்த மலையும், மரமும், கடலும் அலையும், நீலவானமும், நிலவும், நான் சதா சந்தித்துக்கொள்பவை. இந்தப் பூமி என்னை தோள்மீது சுமந்து திரிகிறது. நான் இந்த உலகத்தின் கனிகளைப் புசித்து வாழ்பவன். கணத்திற்குக் கணம் நான் விழுங்கும் இந்தக் காற்றில் எனது உயிர் தொங்கி நிற்கிறது. இந்த உலகம் தான் எனது இருப்பிற்கு ஆதாரம். நான் இருப்பாக உயிர்த்து நிற்கிறேன். வாழ்வின் தீயாக எரிந்து கொண்டு இந்த உலகத்தின் மீது இச்சைகொண்டு நிற்கும் என்னை இந்த உலகம் ஒதுக்கிவிடுகிறது. எனக்கு பாராமுகம் காட்டுகிறது. பற்றற்றதாக நிற்கிறது. என்னிலிருந்து அந்நியப்பட்டதாக மௌனமாக நிற்கிறது. நான் வேர் அறுபட்டவனாக விழுந்துகிடக்கிறேன். எனது தேடுதல் பற்றியும், தடம் தெரியாது நான் எழுப்பும் அவல ஓலம் பற்றியும் இந்த உலகம் எவ்வித அக்கறை கொண்டதாகவும் தெரியவில்லை.

உணர்வற்ற, இலக்கற்ற, அர்த்தமற்ற உலகமும், உணர்வுள்ள, அறிவுள்ள, அர்த்தம் தேடும் மனிதனும், இரு துருவங்களாக, உறவுமுறிந்து, ஒத்திசைவு இழந்து, முரண்பட்டு நிற்கும் இந்த வாழ்வு அர்த்தமற்றது.

விடிகிறது. தினமும் விடிகிறது. திங்கள், செவ்வாய், புதன், வியாழன் என்று மாறி, மாறி, தொடர்ச்சியாக நாட்கள் விடிகிறது. விடியலுடன் நானும் விழித்துக்கொள்கிறேன். தினமும் தூங்குவதும், விழிப்பதும் வேலைக்கு ஓடுவதுமாக முடிவில்லாமல் நானும் விரைகிறேன்; நாட்களும் விரைகின்றன. அதே வேலை; பழக்கப்பட்ட, வழக்கமான அதே வேலை. சலிப்புத் தட்டத்தட்ட, இயந்திரமாக இயங்கி, இயங்கி, அதே வேலை. என்னோடு சேர்ந்து மற்றவனும் என்னைப் போல உழல்கிறான். அதே காலை, அதே பாதை, அதே வேலை, திரும்பத் திரும்ப பார்த்து அலுத்துப் போன முகங்கள். நாட்கள் ஓடுகின்றன. நானும் ஓடுகிறேன். அர்த்தமில்லாமல், மீண்டும் மீண்டும், அதே வினையில், அதே விழைச்சலில், நான் ஓடிக்கொண்டே இருக்கிறேன்.

இயந்திர உலகில் வாழும் நவயுக மனிதனின் அலுப்புத் தட்டும் உழைப்பும், அவசர வாழ்வும் அபத்தமானது என்கிறார் கம்யூ. கிரேக்க இதிகாசத்து பாத்திரமான சிசைப்பஸை (SISYPHUS) இந்த அசட்டுத்தனமான உழைப்பின் குறியீட்டுச் சின்னமாக அவர் சித்தரித்துக்காட்டுகிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெய்வங்களின் கோபத்திற்கு ஆளாகிறான் சிசைப்பஸ். சாபம் கிடைக்கிறது. தண்டிக்கப்படுகிறான். மலையடிவாரத்திலிருந்து மலை உச்சிக்கு ஒரு கற்பாறையை தள்ளிச் செல்லும் கடூழியத் தண்டனை. பாறை மேல்நோக்கி அவன் தள்ளிச்செல்ல, அந்தப் பாறை அதன் பழுவில் கீழ்நோக்கி உருண்டு விழுகிறது. தொடர்ச்சியாக, முடிவில்லாமல் முயற்சிக்கிறான். அவனது பகீரத முயற்சி, பயனற்ற முயற்சியாக மாறுகிறது. அர்த்தமற்ற, அசட்டுத்தனமான ஊழியம் செய்ய அவனுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. சோர்ந்து போகாமல், இடிந்துபோகாமல், தெய்வங்களை சினந்தவாறு அவன் முடிவில்லாமல் முயற்சிக்கிறான். இந்த சிசைப்பஸ் கம்யூவின் அபத்த நாயகன். தற்கால மனிதனின் அபத்தத்தை குறியீடு செய்யும் அக்காலத்து இதிகாச மனிதன்.

அபத்த நாயகனாக சித்தரிக்கப்படும் சிசைப்பஸிடம் ஒரு அபூர்வமான குணவியல்பைக் காண்கிறார் கம்யூ. தாங்கமுடியாத துயரிலும் தளர்ந்துபோகாத உறுதிப்பாடு அவனிடம் இருந்தது. தனக்குக் கிட்டிய விபரீத வாழ்வு பற்றியும் அவன் விரக்தி கொள்ளவில்லை. கலங்கவில்லை. தெய்வத்தின் சாபமாக, விதியாக, தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தமாக தன்மீது சுமத்தப்பட்ட பழுவை, அபாரமான பொறுமையுடன் அவன் சுமந்து செல்கின்றான். தனது வாழ்நிலையை ஏற்றுக்கொள்ளும் விழிப்புணர்வு அவனுக்கு ஏற்படுகிறது. துயரத்தின் அழுத்தத்தால் அவன் நசிபட்டுப் போகவில்லை. உறுதி தளராது தனது ஊழியத்தைத் தொடர்ந்தான். எட்டமுடியாத, சிகரத்தை நோக்கிய போராட்டத்திலும், அவனுக்கு ஒரு ஆன்ம திருப்தி இருந்தது என்கிறார் கம்யூ.

இந்தப் புராண காலத்து புனைகதையிலிருந்து நவீனயுக மனிதனுக்கு ஒரு அறநெறியை வரித்துக் காட்ட முனைகிறார் நூலாசிரியர்.

மனித வாழ்வு அபத்தமானது; துன்பம் நிறைந்தது; நிலையற்றது. இதுதான் இருப்பின் மெய்நிலை. இந்த இருப்புநிலையிலிருந்து எவரும் தப்பித்துக்கொள்ள முடியாது. இந்த வாழ்நிலையை மனிதன் துணிவுடன் எதிர்கொள்ளவேண்டும். தளர்ந்துபோய் விழுந்துவிடாமல் எழுந்துநின்று வாழவேண்டும். வாழ்வில் அர்த்தமில்லை எனக் கண்டுகொள்ளும்போது சிலர் உயிரை மாய்த்துக்கொள்கிறார்கள். வாழ்க்கையில் அர்த்தமில்லாத போதும் வாழ்க்கையை வாழத்தான் வேண்டும். வாழ்க்கையை முடித்துக்கொள்ளக் கூடாது. அபத்தத்திலிருந்து தப்பிக்கொள்ள தற்கொலையை நாடுவது பேடித்தனம். அது எவ்வகையிலும் நியாயமாகாது. கடவுள் இல்லாத உலகத்தில் மனிதன்தான் கடவுள். கடவுளிடமிருந்தோ, சுவர்க்கத்திலிருந்தோ மனித வாழ்வின் அர்த்தத்தைக் கண்டுகொள்ள முடியாது. மனித வாழ்வுக்கு மனிதனே அர்த்தத்தை கற்பிக்கவேண்டும். மனித செயலுக்கு மனிதனே அர்த்தத்தை கொடுக்கவேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனது அறிவுக்கு எட்டிய பார்வையுடன், தனக்கு கிட்டிய வாழ்நிலையை ஏற்று, அதில் திருப்திகொண்டு, எட்டமுடியாத எதிலும் இச்சை கொள்ளாது வாழ முடியுமாயின் அந்த வாழ்வு அவனுக்கு அர்த்தமுடையதாக அமையும் என்கிறார் கம்யூ. அபத்தத்திலும், அர்த்தமின்மையிலும், அர்த்தத்தைக் காண்பதுதான் அர்த்தமான வாழ்வாக அமையும் என்பது அவரது கருத்து. MYTH OF SISYPHUS என்ற அவரது தத்துவ நூல், மானிடத்திற்கு இந்தத் தரிசனத்தையே தருகிறது. வரண்டுபோன பாலைவனத்தின் மத்தியிலும் மனிதன் வாழவேண்டும், உழைக்கவேண்டும், படைக்கவேண்டும் என்பதே இந்த நூலின் மையக்கருத்து என்கிறார் கம்யூ.

உருவகக் கதைகளாக அவர் நாவல்களைப் படைத்தார். குறியீட்டுப் புனைகதைகள் மூலம் தனது தத்துவக் கருத்துக்களை அழுத்திச் சொல்வது அவரது தனித்துவ வித்துவம். கதாபாத்திரங்களும் இரத்தமும் சதையுமுள்ள மனிதர்கள் அல்லர். முகமற்ற கருத்துருவச் சித்திரங்கள்.

அந்நியன் (STRANGER) என்ற அவரது முதலாவது நாவல் பெரும்



ஓவியர் - மகா

அந்நிய மண்ணில் வாழும் தன் அண்ணனின் துயர் அவளைச் சுடுகிறது. பதுங்கு குழிக்குள்ளோ அல்லது இடர்பாடுகள் மிகுந்த நிலையில் இருந்துகொண்டோ போராடும் அவள் தாய்த்தேசத்தின் உயரிய விழுமியங்களை, கனன்று எரியும் விடுதலைக் கனலை தன் அண்ணிடத்திலும் ஏற்றுமாறு தன் தோழியைத் தூதுவிடும் உரையாடும் காட்சியைச் சித்தரிக்கின்ற ஓவியம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்ச்சையைக் கிளப்பியது. அது ஒரு அபத்த மனிதனின் கதை.

வாழ்க்கையில் விரக்திகொண்டு, தன்னில் வெறுப்புக்கொண்டு, சமூகத்தில் ஒரு அந்நியனாக அலைகிறான் ஒரு இளைஞன். உணர்ச்சிகள் அவனிடம் செத்துப்போயிருந்தது. ஒரு தடவை, கடற்கரையோரம் ஒரு அரபு மனிதனை அவன் சுட்டுக் கொலைசெய்கிறான். எதுவித நோக்கமுமின்றி, எதுவித உணர்வுமின்றி இந்தக் கொலையை செய்துவிடுகிறான். காவல்துறையினர் அவனைக் கைதுசெய்து விசாரிக்கின்றனர். நடந்ததை ஒப்புக் கொள்கிறான். ஆனால் அந்த அர்த்தமற்ற செயலுக்கு அவனால் விளக்கம் கொடுக்கமுடியவில்லை. இதனால் அவன் ஒரு பயங்கர கொலைகாரனாகக் காணப்படுகின்றான். அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்படுகிறது.

சிறையில், மரணத்திற்காக காத்திருக்கும்போது ஒரு குருவானவர் அவனைச் சந்திக்கிறார். குருவானவர் அவனை மனம் மாற்ற முனைகிறார். அழியாத ஆன்மா பற்றியும், அடுத்த உலகம் பற்றியும் சொல்கிறார். விசுவாசித்தால் அடுத்த உலகில் விமோசனமுண்டு என்கிறார். நெருக்குவாரம் போடுகிறார். அவனுக்கு ஆத்திரம் எழுகிறது. முதற் தடவையாக உணர்ச்சி வெளிப்படுகிறது. அந்த ஆவேச உணர்வுடன் அவனுக்கு ஒரு வெளிச்சம் ஏற்படுகிறது. அந்த வெளிச்சத்தில் சாவு பற்றிய தெளிவு பிறக்கிறது. சாவுடன் மனித வாழ்வு முற்றுப் பெறுகிறது. அந்த விழிப்புடன் வாழ வேண்டும் என்ற தீவிர ஆசையும் பிறந்துவிடுகிறது. தூக்குக் கயிறு அவனுக்காகக் காத்திருக்கும்போது, சாவு கதவைத் தட்டும்போது, அவனுக்கு வாழ்வில் பற்று ஏற்படுகிறது. வாழவேண்டுமென்ற துடிப்பு ஏற்படுகிறது.

சாவு நிஜமானது. அடுத்த உலகமோ ஆதாரமற்றது. இந்த உலகமோ அபத்தமானது. ஆனால் வாழ்வுக்கு அர்த்தமுண்டு. வாழ்க்கையை வாழ்வதில்தான் அந்த அர்த்தமிருக்கிறது. இந்தக் கருத்தையே இந்த நாவலில் அழுத்திச் சொல்கிறார் கம்யூ.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது பிரான்ஸ் நாடு ஜேர்மனியின் ஆதிக்கத்திற்கு உட்படுகிறது. நாசிச ஆக்கிரமிப்பிற்கு எதிராகக் கிளர்ந்த பிரெஞ்சு தலைமறைவு இயக்கத்தில் இணைந்துகொள்கிறார் கம்யூ. தலைமறைவு இயக்கத்தால் வெளியிடப்பட்ட COMBAT என்னும் பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்தார். போரும், சாவும், சிதைவும், அந்நியப் படையெடுப்பும் அதற்கு எதிரான போராட்டமுமாக அவர் பட்டுணர்ந்த அனுபவத்திலிருந்து PLAGUE என்ற உருவக நாவலையும், REBEL என்ற தத்துவ நூலையும் எழுதினார்.

கொள்ளை நோய் (PLAGUE) போரையும், சாவையும் குறியீடு செய்கிறது. சாவை எதிர்க்கும் மனிதனின் அர்த்தமற்ற எத்தனிப்பை

# மாங்கிளியும் மரங்கொத்தியும் ஒரு கவிஞனும்

மாங்கிளியும் மரங்கொத்தியும்
கூடு திரும்பத் தடையில்ல
நாங்க மட்டும் உலகத்திலே
நாடு திரும்ப முடியல்ல....

இந்தியச் சிறைக்குள் வாடும் தமிழீழக் கவிஞன் ஒருவரின் சோகம் சுமந்த வரிகள் இவை!



சொந்த மண்ணிற்கு வரத்துடிக்கும் அந்தச் சுதந்திரப்பறவையின் சிறகுகள் விலங்கிடப் பட்டுள்ளன. இருப்பினும், அப்பறவையின் உணர்வுகளுக்கு யாரால் விலங்கிடமுடியும்? அவை, காவல் எல்லைகளையும் கடந்து சிறகடிக்கின்றன.

தமிழீழத்திலிருந்து புலம் பெயர்ந்து உலகெங்கும் சிதறிக்கிடக்கும் தமிழனின் எழுத்துக்கள், பல்வேறு வடிவங்களில் இன்று 'புலம்பெயர்ந்தோர் இலக்கிய' மாகப் பதிவாகிக்கொண்டிருக்கின்றது.

இந்த எழுத்துக்கள் யாவும் உண்மையான உணர்வுகளின் வடிகாலாக வருகின்றனவா? அல்லது அனுதாபங்களைப் பெறுவதற்கான எத்தனிப்புக்களா? தங்களை நிலைநிறுத்திக்கொள்ள - தங்களுக்கான ஒரு நியாயத்தைக் கற்பித்துக்கொள்ள எடுக்கப்படும் முயற்சிகளா? என்பவை எல்லாம் ஆராயப்படவேண்டிய விடயங்கள்.

புலம்பெயர்ந்த இவர்களுக்கு எவ்விதமான கவலைகளுமே இல்லை என்று கூறவரவில்லை. அவர்களின் படைப்பாக்கங்களில் வெளிப்படும் மண்பற்று, தாயகம் மீதான தாகம் என்பனவே சந்தேகத்திற்குரியனவாக இருக்கின்றன.

இவர்களின் சிறகுகளை யார் அங்கே வெட்டிவிட்டது? தாயகத்திற்குத் திரும்பிவர, யார் அங்கே தடைவிதித்தது? அப்படி எவ்வாறான தடைகளும் அவர்களுக்கில்லையே!

ஆனால் - மேற்படி கவிஞனின் நிலை அவ்வாறானதில்லை.

மண்மீட்புக்காகப் பாடுபட்டவர்கள், ஆதரவாகச் செயற்பட்டவர்கள் எனப் பலர் இந்தியச் சிறைகளுக்குள் முடக்கி வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் அனைவரினதும் ஒருமித்த உணர்வு வெளிப்பாடகவே கவிஞனின் பாடல் ஒலிக்கின்றது.

பொருளாதாரத்தைத் தேடிப் புலம்பெயர்ந்தவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யும் உருவகப்படுத்துகிறது. ஓரான் என்ற அல்ஜீரிய கரையோரப் பட்டினத்தை கொள்ளை நோய் திடீரெனத் தாக்குகிறது. பட்டின வாசல்கள் அடைத்து மூடப்படுகிறது. சாவின் முற்றுகைக்குள் பட்டினம். நோயை எதிர்த்துப் போராட பட்டினவாசிகள் அணிதிரட்டப்படுகின்றனர். மனிதனுக்கும் சாவைப் பரப்பும் எலிகளுக்கும் போராட்டம் நிகழ்கிறது. ஒருவரோடு ஒருவர் தொடர்பற்று, உறவற்று, தனித்திருந்த பாத்திரங்கள் ஒரு பொதுவான பேரழிவில் ஒன்று சேர்கின்றனர். பிரதான பாத்திரமாக ஒரு வைத்தியர், ஒரு பாதிரியார், ஒரு பத்திரிகையாளர், ஒரு தீவிரவாதி, ஒரு அதிகாரி என்ற ரீதியில் வேறுபட்ட பார்வையுடைய வேறுபட்ட மனிதர்கள் ஒரு நாசகார சக்தியை எதிர்கொள்கின்றனர். மற்றவர்களைவிட வைத்தியர் மிகவும் அவதானமாக நடந்து கொள்கிறார். சாவை தடுத்துவிட முடியாது; ஒத்திப் போடலாம். தப்பிப் பிழைப்பவர்கள் மீண்டும் சாவை சந்தித்துத்தான் ஆகவேண்டும் என்ற பிரக்ஞையுடன் பற்றற்றவராக பணிபுரிகிறார். கொள்ளை நோயை கடவுளின் தண்டனையாக காண்கிறார் பாதிரியார். அசிங்கமான மனிதனை தூய்மைப்படுத்தும் திருக்கூத்தாக சம்பவிக்கிறது எனப் பிரசங்கம் செய்துவந்த அவரைச் சாவு தீண்டிவிடுகிறது. நாவலில் கதையில்லை. ஒரு நெருக்கடி நிகழ்கிறது. மனிதர்கள் சந்திக்கிறார்கள். வார்த்தைகள் பரிமாறப்படுகிறது. அவற்றில் எண்ணங்கள் தெறிக்கிறது. ‘கடவுள் இல்லாமல் ஒருவன் புனிதவாளனாக இருக்க முடியா? இதுதான் இன்று என்னை அமுத்தும் முக்கிய பிரச்சினை’ என்று ஒரு பாத்திரம் கேட்கிறது. ஆன்மீகமற்ற உலகில் அறம் சாத்தியமா என்ற கேள்வியை எழுப்புகிறார் கம்யூ. இறுதியில் நோய் தடுக்கப்படுகிறது. ஆனால் நோய்க்கிருமிகள் சாகவில்லை. அக்கிருமிகள் மீண்டும் மானிடரைத் தாக்கலாம். இரண்டாம் உலகப்போர் முடிந்துவிட்டது. ஆனால் போருக்கு காரணமான விஷக் கருத்துகள் சாகவில்லை. நாசிசமாகவோ, பாசிசமாகவோ அல்லது வேறு எந்தச் சித்தாந்தமாகவோ அந்தக் கருத்துக் கிருமிகள் மானிடம் மீது பேரழிவை ஏற்படுத்தலாம். இதுதான் மானிடத்தின் துயரமான இருப்பு நிலையாக இந்த உருவகநாவலில் சித்தரிக்கப்படுகிறது.

கிளர்ச்சிக்காரன் (THE REBEL) என்ற கம்யூவின் தத்துவ நூல் அரசியல் உலகத்தை விசாரணை செய்கிறது.

கம்யூ ஒரு சமூக சீர்திருத்தவாதி. அநீதிக்கு எதிராக கிளர்ச்சி செய்வதை ஆதரித்தார். கற்பனாவாத கருத்துக்காக, சித்தாந்தத்திற்காக புரட்சி செய்வதை அவர் எதிர்த்தார். மதங்களையும், சர்வாதிகார அரசியற் சித்தாந்தங்களையும் அவர் கண்டித்தார்.

கடவுட் கோட்பாட்டில் எழுந்த மத நம்பிக்கைகள் ஒன்றோடு

---

அல்லர் இவர்கள்.

கவிஞனின் பாடலிற் கேட்கும் உயிர்த்துடிப்பை எம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறது.

சிறைக்கூடங்கள், வீட்டுச்சிறைகள், தடைவிதிப்புக்கள் என அமைப்புக்கள் வெவ்வேறானவையாக இருந்தாலும், அனைத்தும் சிறைவாழ்க்கையே! இச்சிறை வாழ்வின் தாக்கம், தாயகம் மீதான தாகம் இரண்டும் ஒன்றிணைகிற போது, கவிதை கொதிப்புடன் ஊற்றெடுக்கிறது. அது மனதிற்குள் ஊடுருவிச் சிலிர்ப்பினை ஏற்படுத்துகின்றது.

உண்ணவும் முடியுதில்ல
உறங்கவும் முடியுதில்ல
எண்ணவும் முடியுதில்ல
இன்னும் தான் விடியுதில்ல....

என்கிற அடிகள் எவரது விழிகளையும் ஈரம் கொள்ளச் செய்யும்.

ஊர்க் கடிதம் படிக்கையிலே
விம்மி நெஞ்சு வெடிக்குது
போர்புலிகள் பக்கத்திலே
போக மனம் துடிக்குது....

கவிஞனின் தாகத்தை வெளிப்படுத்த இதனை விடவும் வேறுவார்த்தைகள் தேவைதானா?

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் வரிகள், அதே உணர்ச்சியுடன், தேனிசை செல்லப்பா என்கின்ற பாடகரின் குரல்வழியாக வந்து காற்றில் கலக்கிறது.

லண்டன் கலைபண்பாட்டுக் கழகத்தினரால் உருவாக்கப்பட்ட ‘விடுதலைப் போர் முரசு’ என்ற ஒலிநாடாவில் இடம்பெறும் இந்தப் பாடலை இன்னும் கேட்காதவர்கள் ஒருமுறை கேட்டுப்பார்க்கலாம்.

மரங்கிளியும் மரங்கொத்தியும்
கூடுதிரும்ப தடையில்ல
நாங்க மட்டும் உலகத்திலே
நாடு திரும்ப முடியல்ல
(மரங்கிளியும்)

சிங்களவன் படை வானில்
நெருப்பை அள்ளிச் சொரியுது
எங்களுயிர்த் தமிழீழம்
சுடுகாடாய் எரியுது
(மரங்கிளியும்)

தாய் கதறப் பிள்ளைகளின்
நெஞ்சுகளைக் கிளிக்கின்றான்
காயாகும் முன்பே அதன்
பிஞ்சுகளை அழிக்கிறான்
(மரங்கிளியும்)

பெத்தவங்க ஊரில
ஏங்குறாங்க பாசத்திலே
எத்தனை நாள் காத்திருப்போம்
அடுத்தவன் தேசத்திலே
(மரங்கிளியும்)

உண்ணவும் முடியுதில்ல
உறங்கவும் முடியுதில்ல
எண்ணவும் முடியுதில்ல
இன்னும்தான் விடியுதில்ல
(மரங்கிளியும்)

கிட்டிபுல்லு அடிச்சு நாங்க
விளையாடும் தெரிவில
கட்டி வச்சு அடிக்கிறானாம்
யார் மனதும் உருகுதில்ல.
(மரங்கிளியும்)

ஊர்க்கடிதம் படிக்கையிலே
விம்மி நெஞ்சு வெடிக்குது
போர்ப்புலிகள் பக்கத்திலே
போக மனம் துடிக்குது

**கவிதை என்பது வார்த்தைகளால் ஆன ஓவியம்.**
**ஓவியம் என்பது வார்த்தைகளற்ற கவிதை.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்று முரண்பட்டு மோதுகிறது. மதத்தின் பெயரால் மனிதன் மனிதனை அழித்து வருகிறான். கலவரங்கள் வெடிக்கின்றன. தெய்வத்தின் பெயரால் யுத்தங்கள் நிகழ்கின்றன. நீண்ட நெடுங்காலமாக, மத யுத்தங்களால் இந்தப் பூமியின் மடியில் இரத்த ஆறுகள் ஓடியிருக்கின்றன. நித்தியத்துவம் என்ற கற்பனாவாதக் கருத்திற்காக மானிடம் பிளவுபட்டு மோதி தன்னையே சிதைத்துக்கொள்கிறது.

அரசியற் கருத்துலகிலும் வன்முறை வெடிக்கிறது. ஒரு கற்பனாவாதக் கருத்துக்காக புரட்சி வெடிக்கிறது. கருத்துப் போர் வர்க்கப் போராகி சமூக பிரளயங்கள் நிகழ்கின்றன. சித்தாத்தங்கள் யுத்தங்களில் முடிகின்றன.

கம்யூவின் இந்தத் தத்துவ நூல் மத சித்தாத்தங்களை மட்டுமன்றி, அன்றைய கம்யூனிச உலகையும் கடுமையாகச் சாடியது. இதனால் கம்யூனிஸ்ட் தோழர்கள் பலரது நட்பை அவர் இழக்கவேண்டி நேர்ந்தது. நீண்டகால நண்பராக இருந்த சாத்தர்கூட கருத்து முரண்பாட்டால் நட்பை முறித்துக் கொண்டார்.

அநீதிக்கு எதிராக, மனிதன் சுதந்திரம் வேண்டிப் போராடுவதையும் கிளர்ச்சி செய்வதையும் கம்யூ வரவேற்றார். அவர் குறிப்பிடும் கிளர்ச்சிக்காரன் அநீதிக்கு எதிரான சுதந்திரப் போராளி. அவன் அதர்மத்திற்கு எதிரான சுதந்திரப் போராளி. அவன் அதர்மத்துக்கு எதிரான தர்மத்தின் தளத்தில் நிற்கின்றான். மற்றவர்களது துன்பம் அவனைத் தீண்டுகிறது. அந்தத் துன்பத்தை காணும்போது அவனிடம் விழிப்புணர்வு ஏற்படுகிறது. அந்த விழிப்புணர்வால் துன்பப்படும் மற்றவர்களோடு தன்னை இனம் கண்டுகொள்கிறான். மனித ஆன்மத்திற்கு பொதுவான ஏதோ ஒன்று, மனித அவலத்தில் பிறக்கும் புலனாகாத ஒன்று, அவனையும் மற்றவர்களையும் ஒன்றிணைத்து விடுகிறது.

அநீதிக்கு எதிராக மக்கள் ஐக்கியப்பட்டு எழுச்சிகொள்வதை கிளர்ச்சி என்றும், ஒரு கருத்திற்கு வசப்பட்டு மக்கள் அணி சேர்ந்து எழுவதை புரட்சி என்றும் வேறுபடுத்தி, வகைப்படுத்திக் காட்டுகிறார் கம்யூ. முன்னதில் நீதி இருக்கிறது. தர்மம் இருக்கிறது. பின்னதில் உன்னதமானது ஒன்றுமில்லை என்பது அவரது வாதம். மனித சுபீட்சத்திற்காக மனிதன் போராட வேண்டும். அது அர்த்தமுடையது. அரூபமான, பூடகமான கருத்துக்களுக்காக மனிதர்கள் போராடுவதும் மடிவதும் அபத்தமானது, என்கிறார் கம்யூ.

இந்தத் தத்துவ நூலில் நீச்சேயை அவர் கண்டிக்கிறார். நீச்சேயின் தத்துவார்த்த கருத்துகள் சர்வாதிகார சித்தாந்தங்களுக்கு தூபமிட்டிருப்பதாக அவர் குற்றம் சாட்டுகிறார். கடவுள் இல்லாத ஒரு உலகத்தை சிருஷ்டிக்க முனைந்த நீச்சே, மனித அறங்களும் செத்து விட்டதாகச் சொல்கிறார். இது தப்பு. இந்தக் கோட்பாடு அராஜகத்திற்கு வழிகோலும். கடவுள் இல்லாத உலகில், மனிதனே அறநெறிகளை வரித்துக்கொள்ள வேண்டும் என்கிறார் கம்யூ.

*1960* ஆண்டு, ஜனவரி *4*ந் திகதி பாரிஸில் கார் விபத்தில் சிக்கி, அல்பேர்ட் கம்யூ மரணமடைந்தார். சாவு என்பது வாழ்வின் ஒரு அபத்த நிகழ்வு என எழுதி வந்த கம்யூ அந்த அபத்தமான சாவை இறுதியில் சந்தித்தார்.

மானிடத்தின் மனச்சாட்சியை கிள்ளி விட்ட ஒரு மகத்தான கலைஞர் என நோபல் பரிசு குழு அவரைப் புகழ்ந்துரைத்தது அவருக்கு கிடைத்த பொருத்தமான சான்றிதழ்.

(தொடரும்)

## தமிழ் நூல்கள் எவ்வாறு மறைந்து போயின?

ஏரண மூருவம் யோகம் இசை
கணக்கிரகம் சாலம்
தாரண மறமே சந்தம் தம்ப
நீர் நிலமுலோகம்
மாரணம் பொருளென்றின்ன
மானநூல் யாவும் வாரி
வாரணம் கொண்ட தந்தோ
வழி வழிப் பெயருமான

என்னும் செய்யுள் கடல் பெருக்கெடுத்து பாண்டி நாட்டின் பகுதியை அழித்தபோது முதற்சங்க, இடைசங்க நூல்கள் மறைந்து போனதுபற்றி கூறுகிறது. அச்சுப் பதிப்புக்கள் இல்லாத அக்காலத்தில் நூலின் பிரதிகள் சிலவே இருந்தன. அவையும் நீர், நெருப்பு, சிதல் முதலிய காரணங்களால் அழிந்துபோயின.

சமயப் பகைகள் காரணமாகவும் பல ஏட்டுச் சுவடிகள் மறைந்து போயின.

குண்டலகேசி, விம்பசார கதை, சிந்தாந்த தொகை, திருப்பதிகம், புத்தயாதகக் கதைகள் முதலிய பௌத்த நூல்களும், சைன ராமாயணம், வளையாபதி, கிளி விருத்தம், எலி விருத்தம், சாந்தி புராணம், மல்லிநாதர் புராணம், நாரதர் சரிதை, பிங்கல கதை, வாமன கதை, பிங்கலகேசி, அஞ்சனகேசி, காலகேசி, தத்துவ தரிசனம் முதலிய நயன சமய நூல்களும் இவ்வாறு மறைந்த நூல்களாகும்.

சமயப் பகையினால் சில, பல நூல்கள் அழிந்தது போலவே மூடக் கொள்கையினாலும் பல நூல்கள் அழிந்தன.

பதினெட்டாம் பெருக்கு, கலைமகள் விழாவாகிய சரஸ்வதி பூசை, மாசிமகம் போன்ற காலங்களில் ஏட்டுச் சுவடிகளை கடலிலும், ஆற்று வெள்ளத்திலும் போடுகின்ற வழக்கமிருந்தது. பிற்காலத்தில் ஏற்பட்ட இந்த மூட வழக்கம் சமீப காலம் வரையிலும் இருந்தது. அதிவீரராம பாண்டினின் புத்தகசாலையிலிருந்த ஏட்டுச் சுவடிகள் பிற்காலத்தில் கோயிலதிகாரிகளினால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அரசர்களின் போரினாலும் புத்தகசாலைகள் அழிக்கப்பட்டு அருமையான நூல்கள் அழிந்துபோய் விட்டன. இப்பொழும் கூட சில நூல்கள் ஏட்டுப் பிரதிகளாகவே உள்ளன. அவற்றையும் விரைவில் அச்சிட்டு வெளியிடாவிட்டால், இருக்கின்ற சில எங்கள் அருந்தமிழ் நூல்களும் அழிந்து விடக்கூடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவங்கட விதி

கடும் புயலால் நொடிந்த காடு. காற்று கானகத்தின் பிடரியைச் சிலுப்பி ஊதியது. குறு )க்கே வீழ்ந்து கிடந்த மருத மரங்களில் அருவி மோதி எழுப்பிச் செல்லும் இசை மெல்லிய சோகத்தை சிறிய புல்வெளி முன்றலில் நிரப்பியது.

காற்றும், அருவியும், மரங்களும், பட்சிகளும், வண்டுகளும் பாடும் மாலைக் கருக்கலில் ஒரு சோர்வு துள்ளி ஓடி மறைந்தது. வீரர்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள். புற்களின் மீது அழகும் வனப்பும் மிளிர படுத்துக் கிடந்தார்கள்.

பேரிரைச்சலோடு வாகனங்கள் ஓடிக்கொண்டு இருந்தன. அவற்றுள் தலைப் பாகைகள் வைத்திருந்தவர்கள் இருந்தார்கள். கைகளில் துவக்குகள் நீண்டுகொண்டு இருந்தன.

“இந்தியப் படை வந்திற்று” கிழவர் புன்னகைத்தார். மேலும் “காந்தி தேசத்தில இருந்து வந்திருக்கினம் எங்களைக் காப்பாத்த.”

“எங்களுக்கு சிங்கள ஆமியும் ஒண்டுதானய்யா; இந்தியன் ஆமியும் ஒண்டுதானய்யா.” என்று கூறிவிட்டு பரிதி சிரித்தான்.

* * *

வாகனங்கள் பேரிரச்சைலோடு ஓடிக்கொண்டிருந்த ஒருநாள், மீன் பாடும் தேனகரில், அழுகையின் ஓலக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின.

*1987* ஆடி *29* இல் ஏற்பட்ட இந்திய சிறீலங்கா உடன்படிக்கையின் உண்மை முகம் தெளிவாகத் தெரியத் தொடங்கிய வேளை அந்தக் கிழவர் பரிதியைப் பார்த்துத் தலை குனிந்தார். வயதில் சின்னவனாய் இருந்தும் எப்படித் தீர்க்க தரிசனமாய்ச் சொல்லியிருக்கிறான் என நினைத்து.

“யார்க்கும் அடிமையில்லா சீவியம்தான் வேணும் தம்பி.” அப்படிச் சொல்லுகையில் அவர் முகமும் சிவந்திருந்தது.

*1987* ஒக்டோபர் *10* ம் நாள், இந்தியப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சண்டை மூண்டது. ஒரு எதிரி நாட்டு அரசுப் படைகளோடு மோதுவது போலவே இந்தியப் படைகள் மோதின. விடுதலைப் புலிகள் ஒருபோதும் மன உறுதி தளர்ந்துவிடவில்லை. உலகின் நான்காவது பெரும் இராணுவத்தையுடைய அரசின் படைகளை எதிர்த்து அவர்கள் உறுதியாகவே போராடிக் கொண்டிருந்தார்கள்.

* * *

தீவிர ஆதரவாளர்கள் பலரைக் கட்டி இழுத்துச் சென்றார்கள். சென்றவர்கள் வீடு திரும்பவில்லை. மறுநாள் வாவிகளில் பிணமாய் மிதந்தார்கள். ஊரெங்கும் இதுபோலவே நடந்தது. பள்ளிக்குச் சென்று வந்து கொண்டிருந்த பெண்ணொருத்தியை பலவந்தமாய் இழுத்துச் சென்றார்கள். “அக்கா... ஆ...” அவளின் சின்னத் தங்கை அழுதாள்,

உலகம் தலைகீழாய்ச் சுழன்றது. நிலைதடுமாறிப் போனாள். நெடிதுயர்ந்த தலைப்பாகை வைத்திருந்தவனின், கொடிய கரத்துள் சிக்கி அவளது சிறகுகள் ஒடிந்தன.

நிலைமை கட்டுமீறிச் சென்றது.

* * *

இந்திய இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள் எல்லை மீறிய ஒருநாள்,



நல்ல அடிகொடுக்க வேணும் என்று கண்ணன் சொல்லிவிட்டு எதையோ பற்றிக் கடுமையாக யோசித்துக் கொண்டிருந்தான். “எங்கட மண்ணில வந்து, எங்கட சகோதரிகளை...” என்று கூறிவிட்டு வார்த்தையின்றி இருந்தான்.


“வானரப் படையளடா” பரிதி கோபமாகக் கத்தினான்.

“கண்ணி வெடி தாக்குதல் ஒன்று நிகழ்த்துவம்” எனக் கண்ணன் கூறினான்.

“ஆம், அப்படிச் செய்யிறதுதான், இப்ப இருக்கிற நிலைமைக்கு சரியாகப் படுகுது.” தோழர்கள் எல்லோரும் ஒருமித்துக் குரல் கொடுத்தார்கள்.

”இருக்கிற வெடிமருந்து போதாது. என்ன செய்வது? மறைவிடங்களில் இருந்து வெடிமருந்துகளை எடுத்து வர முடியாமல் இருக்கு. எங்க பார்த்தாலும் உவனுகள் நிக்கிறாங்கள்.” என்றான் பரிதி.

அப்போது தோழர்களில் ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வன், நீண்டகாலத்திற்கு முன்னர் மட்டக்களப்பிற்கு வந்திருந்த எமது மூத்த போராளி ஒருவன் தன்னிடம் ஒரு பாசல் தந்ததாகவும், அது தன்னிடம் இப்போது இருப்பதாகவும் கூறினான்.

* * *

மெல்லிதாக மழை தூறத் தொடங்கியிருந்தது. நிசப்தமாக இருந்தது. மட்டு நகர் உப்பாற்றுக் கரையிலிருந்து குளிர் காற்று வீசிக் கொண்டிருந்தது. உப்பாற்றில் சில ஓடங்கள் நின்றுகொண்டிருந்தன. தூரத்தே உள்ள சில குடில்களில் லாம்பு வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டிருந்தன. மட்டுநகர் திருமலை பிரதான வீதியின் இரு கரைகளிலும் புலி வீரர்கள் நின்று கொண்டிருந்தார்கள். கன்னா பற்றைகளோடும் அவர்கள் இருந்தார்கள்.

இந்தப் பிரதான பாதை வழியாக இந்தியப் படைகளின் ரோந்து நடவடிக்கைகளும் ஆயுத விநியோகங்களும் நடந்துகொண்டிருந்தன. திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து மண்திரேசா என்ற இந்திய இராணுவ முகாமிற்கு இந்தியப் படையின் கனரக வாகனங்கள் துருப்புக்களை ஏற்றி இறக்குவதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தன. அதிக புழக்கமுள்ள பிராதான போக்குவரத்துப் பாதையாகவும் அது இருந்தது.

அமைதி நிலவும் அந்தக் கிராமத்தின் அழகு குலைந்துபோய் கிடந்தது. எறிக்கும் நிலவில்கூட குளிர்மை இல்லாதிருந்தது. உப்பாறு உறைந்துபோய் கிடக்க கன்னா பற்றைகளில் வெள்ளைக் கொக்குகள் கூட்டம் கூட்டமாய் குடியிருந்தன. மெல்லிதாக துமித்துக்கொண்டிருந்த வானம் உடைந்தால் போல் அடைமழை கொட்டத் தொடங்கிற்று. காற்று பலமாக வீசத் தொடங்கியது. மேஜர் கண்ணன் தலைமையில் புலிவீரர்கள் கண்ணி வெடியை புதைப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள்.



தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுடன் மேஜர் கண்ணன்

கண்ணிவெடி புதைப்பதற்காக அவர்கள் தேர்ந்த இடம் ஏற்கெனவே வெடிக்கவைத்து தகர்க்கப்பட்ட பாலத்தடியாக இருந்தது. ஏறாவூர் பொலிஸ் நிலையத் தாக்குதலில் இந்தப் பாலம் தகர்க்கப்பட்டதாகவும், ஏறாவூர் பொலிஸ் நிலையத் தாக்குதல் அருணா, குமரப்பா தலைமையில் நடந்ததாகவும், தன் அருகே நின்ற போராளிகளுக்குக் கண்ணன் சொன்னான்.

இந்த மதவு உடைக்கப்பட்ட பிறகு பிரதான பாதையில் மீண்டும் இணைவதற்காக இணைப்புப் பாதையொன்று புளக்கத்தில் வந்திருந்தது. இந்த இணைப்புப் பாதையில்தான் கண்ணி வெடி வைப்பதற்கான வேலைகள் நடந்துகொண்டிருந்தன. "இந்தப் பாதை மணல் நிறைந்தது. மழையும் கொட்டிக் கொண்டிருக்கிறதால இந்தப் பாதையில் கண்ணிவெடியைப் புதைப்பதும், மறைப்பதும் இயற்கையாகவும் சுலபமாகவும் அமையும்." என கண்ணன் கூறியதை தோழர்கள் வரவேற்றார்கள். அந்த இடத் தேர்வு பரிதிக்கு மிக விருப்பமாகவும் நம்பிக்கையாகவும் இருந்தது. கண்ணி வெடியைப் புதைப்பதற்கான வேலைகள் நடந்துகொண்டிருக்கையில் அருகே இருந்த வீடுகளில் சனங்கள் கதைத்து, பேசி சிரிக்கும் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. அப்பொழுது மக்கள் இனங்கண்டு கொள்ளாதவாறு நடந்துகொள்ள வேண்டியிருந்தது. அதற்கு பல காரணங்கள் இருந்தன. மக்களால் இரகசியம் பேணப்படாது போனால், மக்களுக்குள் துரோகக் கும்பல்களைச் சேர்ந்தவர்கள் ஒழிந்திருக்க நேர்ந்தால், ஆபத்தானதாக அமைந்துவிடும். அதனால் முக்கிய இடங்களில் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போராளிகள் இந்தியன் ஆமியைப் போன்று வேசமிட்டிருந்தார்கள்.

* * *

'கிலிங்... கிலிங்... கிலிங்...' என ஓசை எழுப்பியபடி பிரதான பாதை வழியாக மாட்டு வண்டிலொன்று வந்துகொண்டிருந்தது. இந்தச் சங்கடமான நிலைமையில், இந்தியச் சிப்பாய்களைப் போல வேசமிட்டு, காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போராளிகள், இருளில் இருந்து வெளிச்சத்தில் வந்து நின்றார்கள். எதுவித அச்சமும் இன்றி விறகுகள் ஏற்றி வந்துகொண்டிருக்கும் மாட்டு வண்டில் அவர்களை நெருங்கிக் கொண்டிருந்தது. வண்டிலுக்குக் கீழே லாம்பு மங்கிய ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தது. மாடுகள் மழையில் நன்கு தோய்ந்து விட்டிருந்தன. மழை நீரை தலையை ஆட்டி எற்றும்போது கழுத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டியிருந்த மணிகள் கணீர் எனும் நாத ஒலியை எழுப்பி அந்த இருளின் நிசப்தத்தைக் கலைத்தது. வண்டிக்காரன் நெருங்க நெருங்க அவர்களுக்கு அச்சமாய் இருந்தது. தங்களது முயற்சி தோற்று விடக் கூடாது என்ற மேலுணர்வால் அவர்கள் தங்களுக்குள் புதிய புதிய யுக்திகளைக் கையாண்டார்கள். தங்களுக்குத் தெரிந்த ஹிந்தி மொழியின் சொற்களை ஆங்கல வார்த்தைகளோடு கலந்து மாற்றி மாற்றி ஒரு வசனத் தொடர்போல் அமையுமாறு பேசினார்கள்.

வண்டில்காரன் தனக்கு ஆபத்து நேர்ந்துவிடப் போகின்றது என அச்சமுற்றான். விறகு தறித்துக் கொண்டிருக்கையில் அன்று மாலை வாவியில் மிதந்த பிணத்தின்துயரக் கதையாகத் தன் கதை முடிந்துவிடக் கூடும் என அஞ்சினான். இந்திய இராணுவம் கொடுமையானது என்றும், அது ஒருபோதும் இரங்காது என்றும் அவன் நன்கு அறிந்து வைத்திருந்தமையாலும் அவர்களை நெருங்க நெருங்க அவன் விழிகள் பிதுங்கின. வீட்டில் தன் மனைவி, குழந்தைகள் பற்றிய கற்பனை எண்ணங்கள் எழுந்து நின்றன. அடை மழை பெய்து கொண்டிருந்தது. குளிர் காற்று மழைத் துளிகளை அவன் இருந்த போக்குக்கு எற்றியது. "கதிரமலை தனில் வாழும் சுவாமி, நான் அப்பாவி சுவாமி." என்று தனது நிலையை தேவாரத் திருவாசகப் பாடல்களின் அடிகளோடு கலந்து பாடிக் கொண்டே நெருங்கிக் கொண்டிருந்தான்.

கண்ணி வெடி வைப்பதை அவன் கண்டுவிடப் போவதை அறிந்த போராளிகள் அச்சமுற்றார்கள். இந்த நிமையை சரியாகச் செய்து முடிக்காது போனால், பொறுப்பாளரிடம் தண்டனை பெற நேரிடும் என அவர்களுக்கு அச்சம் எழுந்தது. வண்டிக்காரன் மிக நெருக்கமாக வந்தவுடன் ஒரு மோசமான இந்திய ராணுவச் சிப்பாயைப் போல தங்கள் கையில் இருந்த துப்பாக்கியை சுடு நிலைக்குத் தயாராக்கினார்கள்.


வண்டில்காரன் தனது இறுதிக் கணத்தை எண்ணிப் பயந்து பதறி வண்டிலில் இருந்து குதித்து, "நான் போறேன், நான் போறேன்" என்று அவலமாய் கத்தியபடி ஓடிமறைந்தான். வெற்றிகரமாக யாரும் கண்டுகொள்ளாதவாறும் யாருக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தாதவாறும் கண்ணிவெடி நிலத்தில் புதைக்கப்பட்டு முடிந்தது.

நிலக்கண்ணி வெடி புதைக்கப்பட்ட இடத்தில், உடைந்து கிடந்த பாலத்தில் அபாயம் என்று எழுதி வைக்கப்பட்டிருந்த அறிவிப்புப் பலகையை பிடுங்கி நிலக்கண்ணி வெடிக்கு நேர் எதிரே பருதி நாட்டினான். மேஜர் கண்ணனை பரிதி இறுதியாகச் சந்தித்து உரையாடிய போது தனது கைத்துப்பாக்கியை கண்ணனிடம் கொடுத்தான். மேஜர் கண்ணன் சில கணங்கள் யோசித்துவிட்டு "பரிதி! இது உன் பாதுகாப்புக்கு அவசியமில்லையா?" என்று கேட்டான்.

"நான் திரும்பி வருவேன் என்ற நம்பிக்கை குறைவாக இருக்கின்றமையால்தான்" எனப் பதிலளித்த போது பருந்துகளிடமிருந்து தன் குஞ்சுகளைக் காக்கும் தாய்க்கோழியைப் போன்ற உணர்வுமிக்க கண்ணன் கலங்கினான். தன்னிடமிருந்த வோக்கி டோக்கியைக் கொடுத்து இதை உன் பாதுகாப்புக்காக வைத்திரு என்று கொடுத்தான். பருதியிடமிருந்து தோழர்களும் கண்ணனும் விடைபெற்றுக் கொண்டு தங்கள் மறைவிடத்தை நோக்கிச் சென்றார்கள்.

* * *

பரிதி, இரவுப் பொழுதை, ஏழ்மையில் வாடும் ஒரு குடும்பத்தினரின் குடிலில் கழித்தான். குளிரால் நடுங்கிக்கொண்டு, நட்சத்திரங்கள் அற்ற வானத்தின் கீழ் உள்ள அந்தக் குடிலில் படுத்துக் கிடந்தான். எப்போது விடியும் என்ற எண்ணமே அவனுள் ஓங்கி நின்றது. தனது வாழ்நாள் காலத்தில் தனது மக்கள், தன் கண்ணெதிரே சந்தித்த கொடுமைகளையும் துன்பங்களையும், கண்டு கலங்கிய அவனது விழிகள் தூங்க மறுத்தன. தனது நெருங்கிய தோழனான மேஜர் கண்ணனைப் பற்றியும், அவன் போன்ற போராளிகள் இந்த உலகத்தில் பிறப்பது அரிது என்பதும், அவன் எண்ணினான். இறுதியாகவே அந்தக் குடிலில் தான் படுத்து உறங்குவதாகவும் எண்ணினான். கண்ணிவெடி புதைக்கும் போது கண்ணனும் தோழர்களும் எவ்வளவு நேர்த்தியாகவும் திறமையாகவும் செயற்பட்டார்கள் என்றும், அவர்களின் சமயோசிதமான நடவடிக்கைகளும் அவனைக் கவர்ந்திருந்தது. கொட்டும் மழையில் நடுங்கிக்கொண்டு அவர்கள் இயங்கிக்கொண்டிருந்த இறுதிக் காட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சிகள் அவனுள் மங்கிய நிழற்படங்களாய் விரிந்துகொண்டிருந்தது.

* * *

ஒற்றைச் சேவலின் கூவலைத் தொடர்ந்து காட்டிலிருந்த பட்சிகளும் பாடத் தொடங்கின. அந்த அதிகாலைப் பொழுது சோவெனப் பெய்த பெரு மழையால் நனைந்து உறைந்துபோய் இருந்தது. என்றுமில்லாதவாறு பசிய மர உச்சாணிக் கொப்புகளூடாக கிழக்கு வானம் சிவந்து கிடந்தது. பரிதி அதிகாலையோடு எழுந்து தனது நிலைக்குச் சென்று கரும் பனைகளோடு




ஒட்டிக்கொண்டு நின்றுகொண்டிருந்தான். ஊர் எழும்பிவிட முன்னர் வாகனங்கள் நிரைநிரையாக ஊர்ந்துகொண்டு வந்தன. கனரக வாகனங்களும், லொறிகளும், ஜீப் வண்டிகளும், ட்ரக் வண்டிகளுமாக மிகப் பெரிய தொடர், ஆக்கிரமிப்பாளர்களின் மிகப் பெரிய ஊர்வலம் அவன் கண்களில் தீயை மூட்டியது. சின்னம் சிறு வயதில் எந்த தடையுமின்றி திரிந்ததையும், அருகே கிடக்கின்ற உப்பாற்றில் மீன்பிடிக்கச் சென்றதையும் அவன் ஒருகணம் நினைத்தான். அந்த வீதியில் நிழல்தரும் மரங்களின் கீழே அவனின் நண்பர்களோடு விளையாடித் திரிந்த பொழுதுகளும் அவன் கருத்தை நிறைத்தது.

www.tamilarangam.net

அந்தத் தெரு வீதிகளை சந்தேகக்கண் கொண்டு எதிரி பார்த்தான். காற்றுக்கு சலசலக்கின்ற மரங்களும், அருகே ஓடிக்கொண்டிருக்கும் உப்பாறுகளும் கூட அவர்களுக்குத் திகில் ஏற்றியது. கைகளில் வெடிமருந்து புதைத்திருப்பதைக் காட்டும் கருவி இருந்தது. இந்திய இராணுவச் சிப்பாய்கள் அந்தக் கருவியை சந்தேகமுறும் இடங்களிலெல்லாம் வைத்து இயக்கினார்கள். இரும்புத் துண்டுகளுக்கும், வேறு உலோகப் பொருட்களுக்குமாக அது கத்தித் தொலைத்தது. இந்திய இராணுவக் கவச வாகனங்களும் நீட்டிய துப்பாக்கிகளும் தனியனாக நிற்கும் பரிதியிடத்து அச்சத்தை ஏற்படுத்திய போதும், பரிதி பனைமரங்களோடு உறுதியாக நின்றான்.

அபாயம் பொருத்தப்பட்டிருந்த பகுதியைக் கடந்து சிறிய ஜீப் வண்டி சென்றது. அதன் பின்னரும் சென்றுகொண்டிருந்த ஜீப் வண்டியில் தொலை தொடர்புக் கருவிகளும் அதன் இயக்குனர்களும் இருந்தார்கள். அவர்கள் வாழ்வில் அதிர்ஷ்டம் இருப்பதாக தனக்குள் சொன்னான் பரிதி.

மெல்லவாக ஊர்ந்து வந்துகொண்டிருந்த ஜீப் வண்டியில் ரோந்துப் பிரிவின் பொறுப்பதிகாரி இருந்தார். “நீ இதனைப் பார்க்க வேண்டும் போ” என்று அனுப்பிவைத்தான்.

அடுத்ததாக அம்புலன்ஸ் வண்டி வந்தது. “உன்னைத் தாக்குவது சர்வதேச சட்டவிதிகளுக்கு முரணானது. நீயும் போ” என அனுப்பி வைத்தான். மூடப்படாத ட்ரக் வண்டியுள் சென்னைப் படைப்பிரிவு வந்துகொண்டிருந்தது. வண்டித் தொடர்களில் தமிழர்கள் இருக்கிறார்கள் என மன்னித்துவிட்டான். ஏழாவதாக வந்துகொண்டிருந்த ட்ரக் வண்டியில் 24-கும் மேற்பட்ட இராணுவத்தினர் இருந்தனர். நெய் மணம் கலந்த காற்று அவன் முகத்தில் அடித்தது. அதிலிருந்த சிப்பாய்களில் சிலர் தங்கள் தலைப்பாகைகளை சரிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஆவேசமும் கொடூரமும் கொண்ட இராணுவமாக அவன் கண்களில் அவர்கள் பட்டார்கள். மட்டக்களப்பில் நிகழ்ந்த துயரங்களின், அந்தக் கதைகளின் மூலகர்த்தாக்களாக, அவன் அவர்களைக் கண்டான்.


அபாயம் எனப் பொறிக்கப்பட்ட அந்தப் பகுதியை சாரதி நோக்கினான். இருந்தும், வாழ்வின் இறுதிக் கணமாக அது இருக்கும் என அவன் ஒருபொழுதும் எண்ணிவிட முடியாது போயிற்று. கரும் பனைகளூடும், பசிய மரக்கிளைகளூடும் சூரியன் எழுந்து சிரிப்பதாக பரிதி ஒரு கணம் உணர்ந்தான். தமிழ் மக்களின் இதயங்களில் எத்தனையோ சோகங்களும், ஆறாத காயங்களும் அடங்கிக்கிடக்கின்றன. பல நூற்றாண்டுகளாய், வந்தவர்கள், போனவர்கள் எல்லோரும் தங்களைக் காலிலும் கீழாய் கருதிப் போயிருந்தனர் என்கிற துயரச் செய்தி சந்ததி சந்ததியாகத் தெரிவிக்கப்பட்டு வந்ததேயொழிய யாரும் இதற்கு எதிராய் நிமிர்ந்தனர் அல்ல.

உப்பாறு சலசலத்து ஓடியது. அபாயம் எனக் குறித்துவைத்திருந்த இடத்தின் மையப் பகுதியை அந்த ட்ரக் வண்டி நெருங்கிய போது பரிதி இயங்கினான். வானமும் பூமியும் அந்தப் பெருவெளியும் ஒரு கணம் குலுங்கி அதிர்ந்தது. கொடூரங்களை இழைத்த ஆக்கிரமிப்பாளர்களின் முதுகெலும்பின் மீது பலத்த பேரடி வீழ்ந்தது. திக்கெல்லாம் சிதறி ட்ரக் வண்டித் துகள்கள் தெறித்தன. பெருநெருப்பு ஒரு கணம் பற்றி எரிந்தது. அவ் ட்ரக் வண்டிக்கு முன்னும், அதைக் கடந்து பின்னாலும் நின்ற பெரும் படைகளின் அவலமான ஓலம் என்னவென்று கூறமுடியாத அளவுக்கு பரிதியின் காதுகளை அடைத்தது.

ஒரு கணம் உப்பாறும் ஓடாது உறைந்துபோய் நின்றது. அதன் இனிய சங்கீதம் மட்டும் அந்த வெளியில் நிறைந்தது. ✸

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நேர்காணல்
# பொ. தாசன்
## நேர்முகம் - கருணாகரன்

மட்டக்களப்பு, வாழைச்சேனையைச் சேர்ந்த திரு. பொ. தாசன் வழிவழியாக வந்த ஒரு கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். எம் மண்ணில் அண்மையில் உருவாக்கம் பெற்ற வண்ணப்பட ஒளிப்பேழைகளான (வீடியோப் படங்கள்) 'தமிழோசை', 'இது எங்கள் தேசம்', 'தாயகக் கனவு', 'சின்ன விழிகள்', 'இன்னுமொரு நாடு', 'உயிர்ப்பூ' ஆகியவற்றின் நெறியாளர் ஆவார். இயல்பான கலை உள்ளமும், புதியன தேடும் ஆர்வமும், சாதிக்கவேண்டும் என்ற முனைப்பும் கொண்டவர். தமிழீழத்தின் எதிர்கால சினிமாவின் வளர்ச்சிக்கு இவர் பெரும் பங்காற்றுவார் என நம்பப்படுகிறது.

போராட்டத்தின் மீதும், போராளிகள் மீதும் இறுக்கமான பிணைப்பைக் கொண்டுள்ள இவர், சிறுகதைகள் சிலவற்றை எழுதியுள்ளதுடன், மேடை நாடகங்களிலும் அதிகளவு கவனம் செலுத்தி வந்துள்ளார். இவரிடம் தமிழீழக் கலையுலகம் நிறையவே எதிர்பார்க்கிறது.

**✸✸ குறுகிய காலத்தில் பலராலும் பேசப்படும் தங்களின் வாழ்க்கைப் பின்புலத்தையும் கலைத்துறையில் தாங்கள் நடந்து வந்த பாதையையும் அறியத்தாருங்கள்:**

★★ நான் மட்டக்களப்பு வாழைச்சேனையில் 05-08-1961-ல் பிறந்தேன். எனது தந்தையார் காங்கேசன்துறையைச் சேர்ந்தவர். தாயார் வாழைச்சேனையைச் சேர்ந்தவர். தந்தை, அரசினர் வைத்தியசாலையில் 'கங்காணி'யாக வேலைசெய்தார். எங்கள் குடும்பத்தில் என்னுடன் ஏழுபேர். அதில் நான் ஐந்தாவது. என் மூத்த தமையனார் கணேஸ் - இவர் 'இன்னும் ஒரு நாடு' படத்தில் தேனீர்க்கடை உரிமையாளராக நடித்து மக்கள் அபிமானம் பெற்றவர். ஏனைய சகோதர, சகோதரிகளும் கலைஞர்களே! நான் இயக்கி வெளிவந்த முதல்படமான 'இதயத்தில் இவர்கள்' என்ற படத்தில் எல்லோரும் நடித்துள்ளனர். குடும்பமே கலையுடன் நெருக்கமாகி இருந்தது. காங்கேசன்துறை, மன்னார் - சிலாவத்துறை, வாழைச்சேனை என்ற இடங்களிலெல்லாம் எனது படிப்புத் தொடர்ந்தது. சிலாவத்துறையில் நான்காம் வகுப்பு படிக்கும்போது 'பத்தினித் தெய்வம்' என்ற நாடகத்தில் ஒரு பாத்திரமேற்று நடித்தேன். அதுதான் என் முதல் கலை அனுபவம். பிறகு, வாழைச்சேனையில் பதினாறு, பதினேழு வயதில் நானே நாடகங்களை எழுதி, நெறிப்படுத்த ஆரம்பித்தேன். இதற்கு பருத்தித்துறை வடமறவர் குலத்தைச் சேர்ந்த எனது சிறிய தந்தையான ஜே. ஏ. அருள்தாசன் அவர்கள் துணை புரிந்தார். நாடகத்துறையில் தீவிர நாட்டம் கொண்டதால் எனது வாழ்க்கையின் பின்புலம் சகல வழிகளாலும் பாதிக்கப்பட்டது. என்றாலும் எனது தாயாரின் ஒத்துழைப்பும் ஊக்கமும் என்னை இத்துறையில் வெகு ஆர்வமுடன் ஈடுபட வைத்தது.

1983-ம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்தின் போது சகோதரர்கள் இலங்கை இராணுவத்தால் தேடப்பட்டனர். ஆகவே வாழைச்சேனையில் இருந்து பருத்தித்துறைக்கு வரவேண்டியதாயிற்று. பருத்தித்துறையில் 'நாதன் வீடியோ சென்ரரில்' உள்ளூர் தொலைக்காட்சி சேவை நடத்தும் வாய்ப்புக் கிடைத்தது. இங்கேதான் சினிமா சம்பந்தமான விடயங்களை அறிந்து கொண்டேன். குடத்தனை 'பொற்பதி கலைஞர்களை'க் கொண்டு 'இலட்சிய வேங்கை' என்ற வீடியோப் படத்தை இயக்கினேன். அது பணப்பற்றாக்குறையால் பாதி கடந்துவிட்ட நிலையில் நின்றுவிட்டது.

87-ம் ஆண்டு 'லிபரேசன் ஒப்பரேசன்' இராணுவ நடவடிக்கையால் முல்லைத்தீவுக்கு இடம் பெயரவேண்டியேற்பட்டது. அப்போதுதான் முல்லைத்தீவுக் கலைஞர்களையும் என்னுடைய சகோதரர்களையும் கொண்டு 'இதயத்தில் இவர்கள்', 'வாழ்த்துங்கள்' ஆகிய படங்களைத் தயாரித்து இயக்கினேன். இவை இரண்டும் தொழில்நுட்பரீதியாகவும், இயக்குதலிலுள்ள அனுபவக்குறைபாடுகள் காரணமாகவும் தோல்விகண்டன. பிறகு, விடுதலைப் புலிகள் கலை,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பெரிய திரைப்படம் ஒன்றை இயக்க வேண்டும். இந்தப் போராட்டத்தை அந்தத் திரையில் வெளிப்படுத்த வேண்டும். எங்களுக்குள் புதைந்து கிடக்கும் எல்லாவற்றையும் வெளிக்கொணர முடியாதவாறு காலமும் பின்தள்ளிப் போகிறது.**

பண்பாட்டுக் கழகத்துடன் தொடர்பு ஏற்பட்டது. என்னுடைய கலை வளர்ச்சியில் பல மாறுதல்களும், உயர்ச்சியும் காணத்தொடங்கியது.

'வெளிச்சம்' இதழில் 'மீண்டும் ஒரு பாடம்' என்ற சிறுகதையை எழுதினேன். தொடர்ந்து முல்லை மாவட்டத்தில் 'வைகறை' என்ற தட்டச்சுச் சஞ்சிகையையும், 'ஊடகம்' என்ற கையெழுத்துச் சஞ்சிகையையும் வெளிக்கொணர்ந்தேன். இதன் பின்னர்தான் 'தமிழோசை' என்கின்ற படத்தை நெறிப்படுத்தினேன். அது வெற்றிபெற்றது. எமது தேசியத் தலைவரைக் காணும் அளப்பரிய பாக்கியத்தைத் தந்தது.

**✱✱ தென்தமிழீழத்தின் மட்டக்களப்பைச் சேர்ந்த தாங்கள் ஆரம்பத்தில் எமக்கு ஒரு இலக்கியக்காரனாகவே தோற்றம் தந்தீர்கள். இன்று வீடியோக் கலைத்துறைக்குள் நுழைந்து கணிசமான வெற்றி பெற்றுள்ளீர்கள். இந்தப் பாய்ச்சல் எவ்விதம் உங்களில் நிகழ்ந்தது?**

★★ தமிழீழத்தில் எல்லாத் துறைகளும் வளர்ச்சி கண்டுவரும் நிலையில் திரைப்படத்துறை பூஜ்ஜியமாகக் காணப்பட்டது. விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் இந்தத் துறையின் வளர்ச்சிக்கு பெரிதும் முயற்சியெடுத்தது. ஆனால், இந்தத் துறையுள் நுழைய பலர் ஆரம்பத்தில் தயக்கம் காட்டினர். ஒருசிலர் முயற்சியிலீடுபட்டனர். இந்தவேளை முல்லை மாவட்ட விஷேட தளபதியாயிருந்த லெப். கேணல் அன்பு அண்ணா, மாவட்டத் தளபதி பாண்டியன் அண்ணா, முல்லை மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் சங்கர் அண்ணா போன்றோரின் ஊக்கம் கிடைத்தது. முயற்சியில் இறங்கினேன்.

**✱✱ 'தமிழோசை', மூலம் அறிமுகமாகி 'உயிர்ப்பூ' வரையிலான தங்களது கலைப்படைப்பாக்கங்கள் மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட அனுபவம், வளர்ச்சி, தேடல் என்பன பற்றிச் சொல்லுங்கள்:**

★★ 'தமிழோசை' படம் எடுக்கும் போது அது இலகுவாகவே பட்டது. காரணம், அப்போது ஒலி, ஒளி பற்றிய போதிய அறிவு எனக்கு இருக்கவில்லை. 'உயிர்ப்பூ' படம் எடுக்கும் போது நிறையக்



கஸ்டமாக இருந்தது. ஏனெனில் ஒலி, ஒளி என்பன இப்படித்தான் இருக்கவேண்டும், இப்படி வந்தால் நன்றாகவிருக்கும் என்ற தவிப்பு இருந்தது. இவற்றையெல்லாம் இந்த இடைவெளியில் அனுபவரீதியாக அறியக்கூடியதாக இருந்திருக்கிறது. எனவே இவற்றிலெல்லாம் கூடிய கவனம் எடுக்கவேண்டியேற்பட்டது. ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு போன்றவற்றில் இன்னும் எனது தேடல் தொடர்ந்துகொண்டேயிருக்கிறது.


**✱✱ திரைப்படம் என்ற வடிவமும், வீடியோ படம் என்ற வடிவமும் வெவ்வேறானவை. இந்த இரண்டு வடிவங்களையும் நீங்கள் இனங்கண்டிருப்பீர்கள். எமது மண்ணில் இன்று வளர்ச்சி கண்டுவரும் வீடியோ கலை வடிவத்தையும், வரவுள்ள திரைப்பட வடிவத்தையும் கருத்திற்கொண்டு இரண்டின் வேறுபாடு, பயன்பாடு, புரிந்துகொள்ளல் என்பவற்றைக் கூறுங்கள்:**

★★ திரைப்படத்தையும், வீடியோப்படத்தையும் வெவ்வேறு கோணத்தில் பார்க்கவேண்டும். பெரியதிரை, சின்னத்திரை என்று வகைப்படுத்த வேண்டும். இப்படி வகைப்படுத்தி, சின்னத்திரைக்கென்று ஒரு யுக்தியை ஏற்படுத்திய படியால்தான் என்னால் இந்தப் படங்களை இயக்கமுடிந்தது. திரைப்படம் (பெரிய திரைக்கானது), வீடியோப் படம் (சின்னத் திரைக்கானது), இவற்றுடன் வீடியோ நாடகம் (டெலிராமா) - இவை மூன்றையும் மூன்று வடிவத்தில் கொள்ளவேண்டும். திரைப்படம் வேகமானதாகக் காணப்படும். வீடியோ நாடகம் (டெலிராமா) வேகம் குறைவாகக் காணப்படும். வீடியோ படம் இந்த இரண்டுக்கும் இடைபட்டதாக இருக்கும். வேகமாகவும் இருக்காது, வேகம் குறைவாகவும் இருக்காது. இதனால் நாங்கள் அமைக்கும் திரைக்கதையை வீடியோ படத்திற்கு ஏற்றவாறுதான் அமைக்கவேண்டும். திரைப்படத்தை மனதில் நிறுத்திக்கொண்டு திரைக்கதையை அமைக்கக்கூடாது.

திரைப்பட ஒளிப்பதிவுக் கருவிகள் வேகமாக இயங்கக்கூடியன. இதற்கு 'கிறேன்' (உயர வண்டி), ட்ரொலி (நகரும் வண்டி) போன்றவை இன்னொரு விதத்தில் உதவுகின்றன. இதற்குத் தக்கபடி 'லைற்றிங்'கையும் அமைப்பார்கள். திரைப்படத்திற்கு எத்தகைய கதைகளையும் புனையலாம். கதாசிரியரின் கற்பனை எதையும் படமாக்கமுடியும். நவீன கருவிகள் மேலதிகமாக துணைபுரிகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**எமது படங்கள் சர்வதேச தரத்திற்கு, அதாவது சர்வதேச போட்டிகளுக்கு செல்லக்கூடிய அளவுக்கு தோற்றம் கண்டுவருகின்றன.**

ஆனால், வீடியோ படத்தில் நாம் நினைத்ததையெல்லாம் இப்போது செய்துகாட்ட முடியாது. நமக்கு எல்லா வளங்களும் கிடைக்கும் பொழுது நாம் மாறிக்கொள்ள முடியுமென நினைக்கிறேன். அது வரை வீடியோப்படம் என்ற முயற்சியில் ஈடுபடுகிறவர்கள், கதாசிரியர்கள் - எம்மிடமுள்ள கருவிகள் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும். இந்தக் கருவிகளில் எதைச் சாதிக்க முடியும்? எதைச் சாதிக்க முடியாது? என்பதை வகைப்படுத்திக் கொள்ள வேண்டும். பொதுவாக கதை அமைப்பவர்கள் எம்மிடமுள்ள வசதிகள், சாதனங்களை மனதில்கொண்டு எழுதினால் படம் இயக்குவது எளிதாக இருக்கும்.

**✵✵ எமது போராட்ட நிகழ்வுகளை வெற்றிகரமாக கலைப்படைப்பாக்கி வரும் தங்களின் எதிர்காலக் கனவு என்ன?**

★★ பெரிய திரைப்படம் ஒன்றை இயக்க வேண்டும். இந்தப் போராட்டத்தை அந்தத் திரையில் வெளிப்படுத்த வேண்டும்.

**✵✵ நல்ல நடிகர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், சினிமாத் துறையுடன் இணைந்த மற்றும் கலைஞர்கள் இங்கே இல்லையென்றும், அதனால் ஒரு நல்ல படத்தை எடுப்பதற்கு சிரமம் நிறைய உண்டு என்றும் சொல்லப்படுவதுண்டு. இது பற்றி உங்கள் கருத்தென்ன?**

★★ திரைப்படத்துறையுடன் இணைந்த தொழில்நுட்பக் கலைஞர்கள், நடிகர்கள் இல்லையென்று சொல்லமுடியாது. நிறைய அனுபவம் இல்லையென்றாலும் ஓரளவுக்கு அனுபவமுள்ளவர்கள், நிறையவும் ஆற்றலுள்ளவர்கள் இங்கே இருக்கிறார்கள். இவர்களெல்லாம் இலைமறைகாயாக இருப்பதால் நாம் இவர்களைக் கண்டுபிடிப்பது கஷ்டம். தாமாக முன்வருவார்களானால் நமது துறைக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

**✵✵ சர்வதேசத் தரத்துக்கு எமது படங்கள் வளர்ச்சியடையும் என்று நீங்கள் கருதுகிறீர்களா? கருதுவதானால் அதற்கான காரணமென்ன?**

★★ இப்பொழுது எமது படங்கள் சர்வதேச தரத்திற்கு, அதாவது சர்வதேச போட்டிகளுக்கு செல்லக் கூடிய அளவுக்கு தோற்றம் கண்டு வருகின்றன.

இங்கே அமையும் படங்கள் செயற்கைத் தன்மையில் அமையாமல், இயற்கையான காட்சிகள், சூழல், இயல்பான நடிப்பு என்பவற்றால் மனித வாழ்க்கையை வெளிப்படுத்துகின்றன. போராளிகளின் அதியுன்னதமான தியாகத்தை யதார்த்தமாகச் சித்தரிக்கின்றன. பொதுவாக உண்மையே சொல்கின்றன. இதனால் என்னுள் ஒரு நம்பிக்கை ஏற்படுகின்றது. எதிர்காலத்தில் எமக்குப் போதிய அளவு கருவிகள் கிடைக்கும்போது எமது படங்களும் சர்வதேசச் திரைப்படப் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதிபெறும். இதனை தென்னிந்திய பிரபல கலைஞர்கள் சிலர்கூட ஒப்புக்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**✵✵ கருவிகள் மட்டும் நல்ல படத்தை எப்படித் தரமுடியும்?**

★★ கரு நிறைய உண்டு. கருவிகள்தான் இல்லையென்கிறதே எனது ஆதங்கம். இங்குள்ள இக் கலை சார்ந்த எல்லாக் கலைஞர்களின் நிலையும் இதுதான். இன்று விஞ்ஞானரீதியாக தொழில்நுட்பம் முன்னேறிவிட்ட நிலையில் நாங்கள் சாதாரண வைபவங்களுக்கு பயன்படுத்தப்படும் கருவிகளைக் கொண்டே இப்படைப்புக்களை உருவாக்குகிறோம். இதனால் கூடுதலான நேரம் வீணாகிறது.

எங்களுக்குள் புதைந்து கிடக்கும் எல்லாவற்றையும் வெளிக்கொணர முடியாதவாறு காலமும் பின்தள்ளிப் போகிறது.

**✵✵ இங்கே வெளிவந்துள்ள நீளப் படங்களுடன் ஒப்பிடும்போது குறும்படங்கள் பல குறிப்பிடக் கூடிய அளவுக்கு வந்துள்ளன. இதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?**

★★ முழுநீளப் படமென்றாலும் சரி, குறும்படம் என்றாலும் சரி கதையின் கரு இவ்வளவு என்கின்ற அளவுதான் இருக்கும். ஒரு முழு நீளப் படத்தை படைத்தே தீர வேண்டுமென்று தேவையற்ற காட்சிகளை திணிப்பதன் மூலம் மக்களின் விசனத்துக்கு உட்பட வேண்டியதாகிறது. குறும்படங்கள் ஒரு அளவுக்குள் அடக்கமாக நின்றுகொள்கின்றபடியால் அது மக்களின் மனதைத் தொட்டுவிடுகிறது.

**✵✵ உங்களின் படங்கள் பற்றிய விமர்சனங்கள் உங்களுக்குக் கிடைக்கின்றனவா? அப்படியாயின் அவை உங்களை ஊக்கப்படுத்துகின்றனவா? தாக்கத்தை ஏற்படுத்துகின்றனவா?**

★★ வெளிநாடுகளிலிருந்து கடித மூலமே கிடைக்கின்றன. இது எம்மை ஊக்கப்படுத்துகிறது. இங்கே அநேகமாக நேரடியான விமர்சனமே கிடைக்கிறது. பலர் சரியான விமர்சனங்களை முன் வைக்கிறார்கள். நாம் விடும் தவறு, ஒரு காட்சியின் அமைவு, தரம், இன்னும் பல விடயங்களை அவர்கள் சொல்லும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. ஒருசிலர் அர்த்தமில்லாத கருத்துக்களைக் கூறுவார்கள். ஏதோ தாங்கள் பிழை பிடித்துவிட்டோம் - கெட்டிக்காரர் தாமே - என்ற கனவில் - நினைவில் நனைகிறார்கள். நான் எல்லாவற்றையும் நன்றாக அவதானித்து வைத்திருக்கிறேன். இரண்டாவது வகையினரின் விமர்சனங்கள் என் ஊக்கத்தைக் குறைக்கவில்லை. மாறாக ஒரு உந்துதலை, ஒரு விதமான சவாலையே தருகின்றன. என்னுடைய ரசிகர்கள் இவர்களுக்குரிய பதிலை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ✵

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொதுமை பேணுமின்

### நீ. மரியசேவியர் அடிகள்

## பண்பாடு

வரலாற்று ஓட்டத்தில் மலர்ந்தும், உலர்ந்தும், வளர்ந்தும், தளர்ந்தும் நிற்கும் பண்பாடு, பல கூறுகளை அடக்கிய பல்வேறு கூட்டொருமைத் தன்மையது. பொதுக் குறியீடுகளைக் கொண்டதும், ஒரு இன மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும், குறிப்பிட்ட ஒரு பாங்கிற்குள் பின்னப்பட்டதுமாகிய ஒழுகலாறு, உலக நோக்கு, சிந்தனை முறை, செயற்பாட்டு வகை, சமூக அமைப்பு, கலை வெளிப்பாடு போன்ற இன்னோரன்ன உறுப்புக் களைக் கொண்டதுதான் பண்பாடு.

## பொதுமை

தமிழ் இனத்தைப் பொறுத்தளவில் அதன் பண்பாட்டுச் சொத்து பல்வகைப்பட்ட வரலாற்று, சமய, சமூக, அரசியற் தாக்கங்களுக்கும் உள்ளானது என்பது கருத்திற் கொள்ளப்படவேண்டியது. இலக்கியத் துறையை எடுப்பின், புத்த சமயத்தின்- மணிமேகலையும், சமண மதத்தின் சிலப்பதிகாரமும், சைவ சமயத்தின் தேவார, திருவாசகங்களும், கிறிஸ்தவ மதத்தின் தேம்பாவணியும், முகமதியர் மறையின் சீறாப்புராணமும் தமிழர் அனைவரினதும் அழியாச் சொத்துக்கள். இந் நோக்கில், தமிழர் பண்பாட்டின் கூறுகள் என்பன எந்தவொரு குறிப்பிட்ட தமிழ் வகுப்பிற்கோ, பிரிவிற்கோ தனிச் சொந்தமாகாது. பொதுமை உணர்வுடன் போற்றிக் காக்கப்பட வேண்டும்.

## சங்ககால உலகு நோக்கு

தமிழர் பண்பாட்டின் ஒரு சில கூறுகள் தமிழின வரலாற்றிலும் வாழ்க்கை முறையிலும் ஆழமாகப் பதிந்துவிட்டன.

''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்றார் புலவர் பூங்குன்றனார். இது, எந்தக் குறுகிய எல்லைக்குள்ளும் வாழாது உள்ளப் பண்பினால் உலகளாவ வாழும் தன்மையை மட்டுமல்லாது, உலகில் வாழும் மக்கள் அனைவரையும் அடைக்கும் தாளின்றி அன்பு செய்து வாழும் பண்பும் சங்ககாலத் தமிழினத்துக்கு இருந்தது என்பதைக் காட்டுகின்றது. இக் கூற்று இன்றைய நம் நிலையிலும் வேறுபட்டதன்று. அதே பாடலில்,

> "வாழ்தல் இனிதென மகிழ்ந்தன்று
> மிலமே;
> முனிவின் இன்னாது என்றலு மிலமே"

என இயம்பும் புலவர் அன்றைய தமிழ் மக்களின் வாழ்க்கைக் கண்ணோட்டத்தைச் சுட்டிக்காட்டுகின்றார். இதனால் இன்பந்தான் இறுதி என்ற கொள்கையோ, உலகத்தைத் துறத்தல்தான் சிறந்தது என்ற கோட்பாடோ இன்றி, வருவதை ஏற்று வாழ்வாங்கு இன்புடன் வாழ்தல் தமிழ் இனத்தின் தனிக் கொள்கை என்பது தெளிவாகின்றது. சங்க காலத்துத் தமிழ் மக்களின் மன நிலையைப் படம் பிடித்துக் காட்டும் அதே புலவர் **"சாதலும் புதுவதன்று"** என அடித்துக் கூறி **"தீதும் நன்றும் பிறர் தர வாரா"** என அறிவுரை கூறுகின்றார். இது மனிதனே தனது செயல்களுக்கு முழுப் பொறுப்பேற்க வேண்டுமென்ற பண்டைத் தமிழர் கொள்கையினை வலியுறுத்துகின்றது.

## பழையதும் புதியதும்

மேற்கூறப்பட்டதற்கு மாறாக வேறு சில பண்டைய பண்பாட்டுக் கூறுகள் இன்று முற்றும் மாறுதல் அடைந்து விட்டன. அன்றைய தமிழர் சமூகம்,

> பிறவியில் உயர்வும் தாழ்வும்
> சொல்லல் மடமை - இந்த
> பிழை நீங்குவதே உயிருள்ளாரின் கடமை"

என்று பாரதிதாசன் சாடுவதற்கு ஏதுவான சாதி வேற்றுமைகளை வளர்க்கவில்லை. ஒன்றே குலம், ஒருவனே தெய்வம் என்ற கொள்கையில் வேரூன்றி இருந்தது. ஆரிய ஆதிக்கத்தின் அவலமான விளைவே தமிழ் வாழ்வில் சாதி என்ற அடிப்படையில் உருவாகிய உயர்வு தாழ்வுகள். ஆக கபிலர், அந்தணரை நோக்கி,

> "நால்வகைச் சாதி இந் நாட்டில் நீர் நாட்டினீர்"

எனக் கூறியதில் வியப்பில்லை. இதைப் போலவேதான் அன்றைய தமிழகத்தில் புலால் அருந்துதல் தவறாகக் கருதப்பட்டதன்று. தமிழ் வேந்தர் அரண்மனைகளில்,

> "புலவு நாற்றத்த பைந்தடி
> பூ நாற்றத்த புகை கொளி இ
> ஊன்றுவை கறி சோறுண்டு"

வாழ்ந்த வாழ்வைப் புறநானூறு சுட்டிக் காட்டுகின்றது. காலப் போக்கில் காய், கனிகளை உண்பதும், மச்சம், மாமிசத்தைத் தவிர்ப்பதும் தமிழின உயர் குடிமக்களின் ஒழுக்கமாய் மாறியது. அதேபோல் இன்று தமிழ் மக்களிடம் காணப்படும் சீதனம் (இலக்குமி செல்வம்) அன்றைய தமிழர் சமூக வாழ்வில் இருக்கவில்லை. மாறாக தமிழ் இலக்கியங்களில் மணமகன், மணமகளுக்கு அளித்த "முலை விலை" யைப் பற்றிப் பேசப்படுகின்றது. பெண்ணுக்கு அணிகலன்களை மணமகனே கொடுத்த வழக்கத்தை அகநானூற்றுப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

> **பிறவியில்உயர்வும் தாழ்வும்**
> **சொல்லல் மடமை - இந்த**
> **பிழை நீங்குவதே உயிருள்ளாரின்**
> **கடமை"**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஒற்றுமையின் சின்னம்

விழிப்புணர்ச்சியும், விடுதலை வேட்கையும் தலைதூக்கிய இன்று தமிழினத்தின் பண்பாடு நம்மவரைக் கட்டிக் காக்கும் ஒற்றுமையின் சின்னமாய் மாற வேண்டும். இதன் பொருள்: நமது இனத்தின் எந்தவொரு பிரிவினரும் எக்காரணத்தையிட்டும் தமிழரின் பொதுச் சொத்தாகிய பண்பாட்டிற்குத் தனியுரிமை கோரலாகாது. நமது பண்பாடு இப் பொதுமை அடிப்படையில் பேணிக் காக்கப்பட்டும் புது மெருகேற்றப்பட்டும் வளர்க்கப்பட வேண்டியது.

## பொது விழாக்கள்

பொது விழாக்களை தமிழ் மக்கள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து கொண்டாட வேண்டும். இயற்கையுடன் இணைந்து வாழ்ந்த நம் மூதாதையர் அதனுடன் தொடர்புள்ள விழாக்களை பொது விழாக்களாகக் கொண்டாடி வந்ததில் வியப்பில்லை. உழைப்பின் உயர்வையும், உழவரின் மேன்மையையும் உயர்த்தி இயற்கையினூடாக அதற்கு அப்பாலுள்ள இறைக்கு நன்றி செலுத்த உருவாகியது தைப் பொங்கல் விழா. அறுவடையின் விழாவாகவும், நன்றியின் விழாவாகவும் விளங்கும் தைப்பொங்கல் எந்தவொரு குறிப்பிட்ட சமூக, சமய, எல்லைக்குள்ளும் அடைபட்டிருக்கவில்லை. அதனாற்தான் தமிழினத்தைத் தட்டியெழுப்பிய தமிழ் அறிஞர் அண்ணாத்துரை தைப்பொங்கல் விழா மற்றைய விழாக்களைப் போல் அன்றி "நமது விழா; நாம் நம்மை உணர உதவும் விழா" என்றார். தமிழரின் புத்தாண்டு விழாவும் இத்தகையதே. இயற்கையுடன் இணைந்தது; நேரடியான சமூக, சமய தொடர்பற்றது; ஆகவே பொதுமையானது.

## மரபுச் சடங்குகள்

வாழ்வின் மையமான நிகழ்ச்சி திருமணம். அதில் வரும் ஒருசில நடைமுறைகள் மிகவும் பழைமை வாய்ந்தன; புனிதமானவை. தனி நிலை உணர்வையும், அதற்கு அப்பாலுள்ள சமூக உணர்வையும் சுட்டிக்காட்டும் தமிழர்களின் திருமணச் சடங்கில் மாப்பிள்ளை பெண்ணுக்குக் கட்டும் தாலி பண்டுதொட்டு இன்றுவரை தமிழ் மக்களின் திருமண நடைமுறையாக இருந்து வந்துள்ளது என்பது அறிஞர் பலரின் கருத்து. பிற்கால இலக்கியங்களில், கூறப்பட்ட தாலி அணிதல் பண்டைய தமிழர்களின் திருமண உறவின் அடையாளம் என்கின்றனர். தாலிகளுள்ளும் புலிப்பற் தாலியே மிகவும் பழமையானது. எனவே ஐந்திணையுள் ஒன்றான குறிஞ்சி வாழ் மக்களிடையே இப் பழக்கம் தோன்றியிருக்கலாம்.

## கலைகள்

தமிழர்கள் வளர்த்துவந்த கலைகள் கால ஓட்டத்தில் கணிசமான மாற்றங்களை அடைந்து வந்தன. எடுத்துக்காட்டாக குறிஞ்சிப்பண், பாலைப்பண், மருதப்பண், முல்லைப்பண், நெய்தற்பண் முதலிய தமிழ்ப் பண்கள் இசைத்துறையின் ஆதிப் பண்கள். அவைகளைப் பற்றியோ, பத்துப் பாட்டுப் போன்ற சங்க நூல்களில் கூறப்படும் பண்கள் பலவற்றின் தன்மைகளைப் பற்றியோ, இன்றுள்ள நம்மவர்க்குத் தெரியாது. இன்று நமது பாரம்பரிய இசையென்று போற்றப்படும் கர்நாடக இசை விசய நகர அரசின் காலத்தில் நமது இசை வாழ்வியலில் புகுந்தது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? ஐரோப்பியர், முஸ்லீம்களின் வரவால் மேல்புலத்து, வடநாட்டு இசைமுறைகள் தமிழ் இசைத்துறையில் நுழைந்தன. இடையில் புகுந்தென்று எதையும் ஒதுக்கிவிடாது, நமது சொந்த ஊற்றுக்குச் சென்று, அதன்வழி நின்று, வரலாற்றில் நிகழ்ந்த மாற்றங்களையும் கருத்திற்கொண்டு, புதிய வடிவங்களைச் சமைக்க வேண்டும். இந்தக் கண்ணோட்டத்தில், ஆலயங்களில் வழிபாட்டு மொழியாக அழகுதமிழ் கையாளப்படுவதும், நாடகத்துறையில் கிராமியக் கலை வடிவங்கள் பேணிக் காக்கப்படுவதும், பரத நடனக் கலையை சமய சார்பில்லாத மற்றைய கருத்துக்களுக்கும் ஊடகமாகப் பயன்படுத்துவதும் வரவேற்கப்பட வேண்டியது.

பெருமிதம் அடைய வேண்டிய நமது பண்பாட்டின் பொதுமையை உணர்ந்து, புதியன புகுத்தி, பழையன பேணி வாழ்வாங்கு வாழ்வோம்!

★★



தமிழீழத்தில் மேதினத்தின் போது வெளியிடப்பட்ட துணியிலமைந்த கருத்தோவியம் இதுவாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் வீர விளையாட்டுக்கள்

ஆசியாவின் நாகரிகங்களில் தமிழர் நாகரிகம் மிகத் தொன்மையானது. தமிழர்கள் அந்த நாளிலேயே விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வீரத்தை வளர்த்தார்கள்.

கொல்லேறு தழுவுதல், யானை யேற்றம், குதிரையேற்றம், தேர் செலுத்துதல், மற்போர், வாட் போர், வேல் வீசுதல், வில் வளைத் தல், புனலாடுதல் ஆகிய விளை யாட்டுக்களை தமிழர் விருப்போடு பயின்றனர். தங்கள் திறன் காட் டினர்.

இத்தகைய விளையாட்டுக்க ளோடு சேவல், யானை, கிளி, குதிரை முதலியவற்றை ஒன்றோடு ஒன்று மோதவிட்டும், ஓடவிட்டும் போட்டிகள் நடாத்தி பணயம் வைத்து விளையாடும் வழக்கமும் இருந்தது.

தேர்களையும், வண்டிகளையும் ஓடவிட்டு பந்தயம் நடத்தும் வழக் கமும் இருந்தது.

விழா நாட்களில் வீரர்கள் கூடித் தமது சேரிகளில் நடத்தும் விளையாட்டுப் போர்கள், 'சேரிப் போர்' என வழங்கப்பட்டன. 'மன்னர் விழவு' என்றும் இதனைக் கூறுவர்.

திருவோண நாளில் மதுரையில் நிகழும் சேரிப் போரைப்பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.

வயதான கிழவர்கள் ஊர்ப் பொது அம்பலங்களில் கூடியிருந்து பொழுதுபோக்காக வல்லுக்காய்கள் என அழைக்கப்படும் சூதாடும் காய்களைக் கொண்டு "வட்டுப் பொருவுதல்" என்னும் சூதாட்டம் ஆடினார்கள்.

சிறுவர்களாடும் பாண்டி ஆட் டம் அந்நாளில் "நெல்லி வட்டா டுதல்" என வழங்கப்பட்டது. இந்தக் காலத்தில் கோலியாடுதல் என்பது அந்நாளில் "உண்டை உருட்டுதல்" என வழங்கப்பட்டது. சிறு தேர்களை உருட்டிச் சிறுவர் கள் விளையாடும் விளையாட்டு "சிறுதேர் உருட்டுதல்" என வழங் கப்பட்டது.



**சேவல் சண்டை**

**பண்டைய காலத் தமிழர்கள் சேவல்களை மோதவிட்டு விளையாடும் காட்சியை சித்தரிக்கின்ற ஓவியம்.**

**இன்றும் இதுபோன்ற விளையாட்டுக்கள் வழக்கில் இருப்பதைக் காண்கின்றோம்.**

**ஓவியம் அ. பாலமனோகரன்**

ஆடவருக்கு மகளிர் சளைத்த வர்கள் அல்லர். தமிழ் மகளிரின் விளையாட்டுக்களைப் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் நிறையக் காணக்கிடைக்கின்றன.

பஞ்சடைத்த பொம்மைகளை வைத்து விளையாடிய சிறுமிகள் "ஓரை ஆயம்" என அழைக்கப் பட்டனர். மகளிரின் மென்மை இயல்புக்கேற்ப அவர்களின் விளை யாட்டுக்கள் அமைந்திருந்தன. "வண்டலயர்தல், சிறுவீடு கட்டுதல், சிறுசோறு சமைத்தல், பாவை யாடல், அம்மானை ஆடுதல், சிலம்பெதிர் கூவுதல், கும்மி, கோலாட்டம், தெற்றி ஆடல், பந்து ஆடுதல்" போன்ற விளையாட் டுக்களை மகளிர் ஆடினர்.

அந்த நாளில் மகளிர் மட்டுமே பந்தாடினார்கள். அது மகளிருக்கே உரிய விளையாட்டு. ஆடவர்கள் பந்தாடுவதில்லை.

தமிழ் ஆடவரும், மகளிரும் இத்தகு வீர விளையாட்டுக்களை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆடியவர்களாவார்.

ஆசியாவில் வீரவிளையாட்டுக் களை முதன்முதலாக வளர்த்த பெருமை தமிழர்களுக்கு உரியது. இந்தியாவின் பிற பகுதிகளுக்கும் ஆசிய நாடுகளுக்கும் வீரவிளை யாட்டில் தமிழகம் வழிகாட்டியா கத் திகழ்ந்தது. இது வரலாறு கூறும் உண்மை.

ஆனால் இத்தகு பெருமை படைத்த தமிழகத்திற்கு ஆசிய விளையாட்டில் இன்றைய பங்கு என்ன? இதற்குரிய பதில் பெருமை யளிக்கும் விதத்தில் இல்லை.




## தமிழீழத்தில்...

தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனத்தின், 'நாற்று' எனும் பெண்கள் மாத இதழ் சஞ்சிகை, நிறைந்த நம்பிக்கையோடு வெளிவரத் தொடங் கியுள்ளது.

பெண்கள் சமூகத்தின் விழிப்புணர்வை வளர்க் கவும், ஆண்களின் மனவுலகில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதையும், அது தன் குறிக்கோளாகக் கொண்டுள்ளது, ஒவ்வொரு பெண்ணும் தன்னைத் தானே அறிந்து கொள்ளும், நிலைக் கண்ணாடியா கத் இது திகழும். 'பெண் விடுதலை' என்ற பதத் தின்பால் வேறுபட்ட தவறான புரிந்து கொள்ளலையும் இது களையும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தோழர்கள்

**திருமதி. நடின் கோடிமர் 1991 ஆம் ஆண்டுக்கான 'நோபல்' இலக்கிய விருதைப் பெற்றவர், தென்னாபிரிக்கா பெற்ற முதல் நோபல் பரிசு இது. இவரது கதைகள் தென்னாபிரிக்காவில் நிலவிய நிற ஒடுக்குமுறைக்கு எதிராக எழுதப்பட்டவை. இருபது நூல்கள் வரை எழுதியுள்ளார். அவற்றில் 'கதைகள் ஆயினும் பிரசுரத்திற்காக அல்ல' என்ற சிறுகதைத் தொகுப்பு புகழ் பெற்றது.**

**மூலம்: நடின் கோடிமர்**
**தமிழில்: சு. மகேந்திரன்**

திருமதி. 'கற்றதெல்போட்' காரில் இருந்த எச்சரிக்கை ஒலிக்கருவியைச் செயலிழக்கச் செய்யும் எலக்ரோனிக் உபகரணத்தை அழுத்தினாள்.

பின்னால் இளைஞர் குழாம் ஒன்றிருந்தது. கறுப்பினத்தவர்கள் தான்; ஆனால் பயப்பிடத்தேவையில்லை. இது ஒரு நகரத்தெரு அல்ல; நிறப்பாகுபாடுகள் எல்லா நீக்கப்பட்ட கல்வி கற்பதற்கான ஒரு பிரதேச, பழைய கொடிய சூழ்நிலைகளின் எச்சங்களாகத் திகழும் பல்கலைக்கழகம் காவலர்களையும் நாய்களையும், அங்கிருந்த மலர்ப்படுக்கைகளும் தாவரவியல் அடையாளப் பலகைகளைத் தாங்கிநின்ற மரங்களும், நாகரிகத் தோரணையுடன் காட்டின. அவளைப் போலவே இந்த இளைஞர்களும் பல்கலைக்கழகத்தில் நடந்த, 'மக்கள் கல்வி' பற்றிய கருத்தரங்கில் பங்குபற்றிவிட்டு கலைந்து செல்பவர்கள். இவர்கள்தான் கல்வி அறிவு புகட்டப்பட வேண்டியவர்கள். அவள் மேடையிலிருந்த கறுப்பினத்தவரும் வெள்ளையரும் இணைந்து செயல்படும் நிர்வாகப் பிரிவைச் சேந்தவள். (புரட்சிக்காரர்களுக்கு வேண்டப்பட்டவர்கள், இடதுசாரிகள், கிறிஸ்தவர்கள், தாராளப் போக்குடையோர் சகபயணிகள்)

"தோழரே...!"

அவள் சாரதியின் ஆசனத்தில் அமரவும், மெலிந்து தெளிவற்று தெரித்த ஒரு உருவம் காரில் யன்னல் பக்கமாகத் தோன்றியது. அவனது முகம் பக்கவாட்டாகவே அவளுக்குத் தெரிந்தது. அவளது நீல நிறக் கண்களின் இமைகள்



சினேகபாவத்துடன் மேல் எழுந்ததாலும், வெள்ளை முகத்தில் தோன்றிய மலர்ச்சியினாலும் அவனுக்கு துணிவு வர பேசமுற்பட்டான். "தோழரே! நீங்கள் நகரத்துக்குப் போகப்போகிறீர்களா?"

"இல்லை, அவள் வீட்டுக்குப் போகப்போகிறாள்."

ஆனால் இளைஞர்கள் நிறைந்திருந்த அந்த மண்டபத்தில் எங்கோ ஓர் இடத்தில் அவளுடன் இருந்து கொண்டு (ஓ...! இல்லை, அவளே அவர்களுடன் இருந்தாள்) நிலத்தில் காலை உதைத்தபடி விடுதலைக் கீதங்களைப் பாடியவர்கள்தான் அவர்கள் என்பதால் ஏற்பட்ட ஆர்வத்தால் சடுதியாக, அந்த இளைஞருக்காய்க் குரல்கொடுத்தாள். சொன்ன பஸ் நிலையத்துக்கு அவர்களை இட்டுச்செல்ல நினைத்தாள்.

"உள்ளே ஏறுங்கள்."

மற்றவர்கள் பின்னே ஏற குரல் கொடுத்தவன் அவளருகே அமர்ந்தான். தன்னைக் கணநேர பார்த்துவிட்டு, பார்வையை விலக்கி வேறெங்கோ பார்த்தவனது வெள்ளைக் கண்களில் நிலவிய மருட்சியை அவள் கண்டுகொண்டாள். அவர்களை இயல்பான நிலைக்குக் கொண்டு வருவதற்கான வார்த்தைகளைத் தேடினாள். இளைஞர்களிடம் கேள்வியை எப்போதும் வயதானவர்களே ஆரபிக்கவேண்டும்.

அவர்கள் 'செரவெட்டோ'வில் இருந்தா வந்துள்ளார்கள்?

அவர்கள் 'போளெக்' வட்டாரத்திலுள்ள 'ஹரிஸ்மித்'திலிருந்து வந்தவர்கள்.

அவள் கணக்கிட்டுக் கொண்டாள்.

அவர்கள் இருநூறு கிலோ மீற்றர் தூரத்திலிருந்து வந்துள்ளார்கள். எப்படி இவர்கள் இங்கு வந்தார்கள்? யார் இவர்களுக்கு மகாநாடு பற்றித் தெரிவித்தார்கள்?

"நாங்கள் 'போளெக்'கிலுள்ள இளைஞர் கொங்கிரசைச் சேர்ந்தவர்கள்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இது ஒரு பிரதிநிதிக் குழு. பஸ்சில் வந்திருக்கிறார்கள். மகாநாடு ஆரம்பித்து வெகுநேரமான பின்பும் குழுக்கள் வந்து கொண்டிருந்தனவே! அவற்றில் ஒன்றோ? அல்லது அங்குமிங்கு சும்மா அலைந்து திரிந்தவர்களோ தெரியவில்லை. அப்படியானால் இலவசமாக விநியோகிக்கப்பட்ட மதிய உணவை இவர்கள் தவறவிட்டிருப்பார்களோ?

பின் சீற்றிலிருந்து மூச்சுவிடும் சத்த கூடக் கேட்கவில்லை. இளைஞர்களது பேச்சாளன், அவர்களுடன் எதோ மௌனமாகத் தொடர்பு கொண்டான்

"நாங்கள் பசியுடன் இருக்கிறோம்"

இந்த இளைஞர்கள் அவளுடன் பகிர்ந்துகொண்ட இனம் புரியாத தொரு பிணைப்போ, அல்லது இந்தப் பயணம் உருவாக்கியிருந்த ஒருவகையான கடமைப்பாடோ அவளைப் பேச வைத்தது. பின் சீற்றுகளில் காற்று முழுவதும் உறுஞ்சப்பட்டுவிட்டது போன்ற இறுக்கமான அமைதி நிலவியது.

அவள் ஓரிரு வினாடிகள் பதில் கூறாமல் மௌனம் சாதித்தாள்.

இந்த மிகப்பெரிய ஒன்றுகூடல் அவளை உணர்ச்சி வசப்படுத்தியிருந்தது. அவ்விடத்தில் அவள் எல்லோராலும் ஈர்க்கப்பட்டாள். கூட்டம் கட்டுப்பாடின்றி இருந்ததால் சீற் வரிசையில் குறுக்காகச் செல்பவர்கள் எவ்வளவுதான் லாவகமாக விலகிச் சென்றபோதும், சடுதியாக ஏற்படும் குலுக்கலாலும் நெரிசலாலும் துன்பம் அடைந்தனர். சேர்ச்சின் பக்கவாட்டாகப் பிரிக்கப்பட்டிருந்த பகுதிகளில் நடந்து செல்பவர்கள் நெடிய காலடிகளை வைத்தே செல்லவேண்டியிருந்தது. தாய்மாரின் மடிகளில் தவழும் குழந்தைகளின் நப்கின்களை அவர்கள் மாற்றும்போது, கழிவுகளுடன் கூடிய மென்மையான கால்களை அவை உதறுவதையும் அவள் பார்த்தாள். தலைமயிரைப் பின்னி சுருளாகக் கட்டிய சிறுபெண்கள், கிழவிகளைப்போல் அங்கு நடைபெற்றவைகளை உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தனர். உப்பிய உடம்புகளையுடைய பெண்கள் விழாக்கால பாடல்களை கைகளை வீசியபடி பாடிக்கொண்டிருந்தனர். உணர்வுகளை அளவிடமுடியாத பயங்கரமான கறுத்த முகங்களையுடைய ஆண்கள், உணர்வுகளால் உடைந்து போய் சுருதியுடன் மிருதுவான குரலில் எங்கும் எப்போதும் போரில் ஈடுபடும் இரு பகுதியினருமே தத்தமது போர்வீரர்களின் பாதுகாப்பிற்காகவும் போரின் வெற்றிக்காகவும் இறைவனிடம் வேண்டுவதுபோல் இவர்களும் தமது போராளிகளுக்கு பாதுகாப்பு நல்குமாறு இறைவனிடம் வேண்டி கீதங்களை இசைத்துக்கொண்டிருந்தனர்.

இப்படியான நிகழ்வுகள் நடக்கும் நாட்களில் அது முடிவடைந்தபின் அவளுக்கு ஒரு 'டிரிங்ஸ்' தேவைப்படும். அந்த கெட்ட பழக்கத்தால் கிடைக்கும் சௌகரியமான தனிமையும், அமைதியும் (ஓ! ஆமாம் இந்த நாள் முழுமையானதாகவே இருந்தது) அவளுக்கு புத்துணர்ச்சியை ஊட்டி அவளை மீண்டு அவளது இயல்பான தன்மைக்குக் கொண்டுவந்துவிடு.

**நிலத்தில் காலை உதைத்தபடி விடுதலைக் கீதங்களைப் பாடியவர்கள்தான் அவர்கள் என்பதால் ஏற்பட்ட ஆர்வத்தால் சடுதியாக, அந்த இளைஞருக்காய்க் குரல்கொடுத்தான்.**

பசி. ஆனால் அது ஐஸ் போட்ட விஸ்கியும் சோடாவும் அருந்திவிட்டு கால்களை மேலேபோட்டுக் கொள்ளும் அந்த 'லக்சரி'க்கானதல்ல. அவள் சிறிதளவு தயக்கம் காட்டியது போலவே இருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"இங்கே பாருங்கள் நான் அருகாமையில் தான் வசிக்கிறேன் வீட்டுக்கு வந்து ஏதாவது சாப்பிடுங்கள்; பின் நான் உங்களை காரில் ரவுனுக்கு இட்டுச் செல்வேன்"

"இது ஓர் உவப்பான காரியம் தான். அதற்காகச் சந்தோசமடைகிறோம்"

அதன்பின், பின்சீற்றில் ஏற்பட்டிருந்த இறுக்கமான சூனிய அமைதி நீங்கியது.

அவர்கள் அவளைப் பின்தொடர்ந்து கேற்றால் உள்ளே வந்தனர். அவள் நாய் கடிக்காது எனக் கூறியும் அதனது பெரிய உருவமும், உறுதியற்ற பட்டி ஒன்றினால் அதை அவள் கட்டியிருந்ததாலும், அவர்கள் சிறிது தயங்கியபடியே உள்ளே வந்தனர்.

அவள் எப்போதும் குசினி வழியாகவே விட்டுக்கு வருபவள். ஆகையினால் அவர்களையும் அவ்வழியே அழைத்து வந்தாள். இதனை அவர்கள் வயது வந்தவர்களாக இருந்திருந்தால் செய்திருக்கமாட்டாள். அது, கறுப்பின நண்பர்களை அழைத்து வர அவ்வழியை தேர்ந்தெடுத்திருந்தாளாயின், யோசனை இன்றி கால காலமாக நடைபெறு ஓர் அவமானத்தை இவளும் செய்கிறாளே என்று அவர்களது சொவஸ்ரிகேசன் (சடுதியாக பிழையான முறையில் விளங்கிவிடும் தன்மை) அவர்களை நம்ப வைத்துவிடவும் கூடும்.

அவள் அவர்களை உடனே சாப்பிட வைக்க எண்ணியதால் சோபாக்களும் மலர்களும் இருக்கும் வரவேற்பறைக்கு அழைத்துச் செல்லாமல், நேராகச் சாப்பாட்டறைக்கு அழைத்துச் சென்றாள்.

திருப்தி தரு ரசனையுடன் அது அமைந்திருந்தது. நிலவிரிப்பு பொருத்தமான நிறத்திலமைந்தது. மரத்திலான சீலங்கு, கிளைகளையுடைய செம்பாலான புராதன விளக்குப் பொருத்தியும், காற்றுப்புகாத தடித்த திரைச்சீலைகளுப் பதிலாக துவாரங்களையுடைய திரைச்சீலைகளும் அவற்றை அதிகப்படியான முறையில் அலங்கரித்திருந்தன. "மக்கூவா" அடிமரத்திலிருந்து செதுக்கி எடுக்கப்பட்ட ஆபிரிக்க மரச்சிற்பத்தில், கருவிலிருந்து வெளியேறும் சிங்கம் மிக அற்புதமாக வெளிக்கொணரப்பட்டிருந்தது.

கதிரைகளை இழுத்து, அந்த நான்கு இளைஞர்களையும் இருக்க வைத்தாள். பின்புறம் இருந்த குசினிக்குள் சென்று கோப்பியைத் தயார்செய்து, குளிர்சாதனப் பெட்டியில் 'சான்விச்' இருக்கிறதா எனப்பார்த்தாள். அவர்கள் 'குசினி' வழியாக உள்நுழைந்த போது தாதியும் அவர்களும் அவர்களது மொழியிலேயே வணக்கம் தெரிவித்திருந்தனர். தாதியும் திருமதி. 'கற்ற தெல்போட்'டும் ஆறிப்போயிருந்த இறைச்சியையும் பாணையும் கோப்பியையும் தயார் செய்தனர். தாதி தனக்காக காத்து நிற்பதை இளைஞர்கள் பார்க்கவேண்டாம் என்ற எண்ணம் திருமதி. தெல்போட்டிக்கு சடுதியாகத் தோன்றியது.

கனமான அந்த 'ட்றே'யை அவளே சுமந்துகொண்டு சாப்பாட்டறைக்குள் வந்தாள்.

அவர்கள் மேசையைச் சுற்றி மௌனமாக அமர்திருந்தனர். தங்களுக்குள் மெல்லிய தொனியில் அவர்கள் கதைத்துக்கொண்டிருந்ததற்கான அடையாளம் எதுவும் தெரியவில்லை.

அவர்களுக்கு பீங்கான்களையும் கோப்பைகளையும் பங்கிட்டாள்.

உணவை அவர்கள் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். அனால் அவர்களது கண்களில் வேறொன்று தெரிந்தது. அதிக அளவில் ஏற்பட்ட களிப்பே அது. அவள் அவர்களை நன்றாகச் சாப்பிடும்படி தூண்டினாள். "ஆறிய இறைச்சிதான் இருக்கிறது. அது எனக்குக் கவலையைத் தருகிறது தான். 'சட்னி'யும் இருக்கிறது. விருப்பமானால் நீங்கள் சாப்பிடலாம். எல்லோரும் பால்விட்டுக் கொள்ளப்போகிறீர்களா? கோப்பி 'ஸ்ரோங்' ஆக உள்ளதா? யாராவது இன்னும் சிறிதளவு சுடுதண்ணீர் கலந்து கொள்ளப்போகிறீர்களா?"

அவர்கள் சாப்பிட்டு முடித்தனர். அவள் அவர்களின் பேச்சாளனை விட்டுவிட்டு மற்றொருவனிடம் கதைக்க முற்பட்டபோது, அவன் மன்னிக்கவேண்டும் என்ற ஆங்கிலச் சொல்லை பிழையான உச்சரிப்புடன் கூறினான். அவனால் ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை என அவள் உணர்ந்தாள். வெள்ளைக்காரர்கள் பேசும் மொழிகளிலே அவனது நாட்டுப்புற நகரத்தில் பேசப்படும் 'ஆபிரிக்கான்' மொழியில் சிறிதளவு அவனுக்குத் தெரிந்திருக்கலாம்.

இன்னுமொருவன், சாப்பிட்டதால் ஏற்பட்ட நன்றியால் உண்டான மென்மையான உணர்வால் "நான் 'சட்ராக்நுட்சா'" என்று தனது பெயரைக் கூறினான். அவன் அதிலிருந்து குடும்பப் பெயரைச் சரியான முறையில் உச்சரிக்க வேண்டி திரும்பவும் ஒருமுறை அதைக் கூறிக்கொண்டான். அதற்குப்பின் அவள் பேசவேயில்லை. அவர்கள் எல்லோரது கண்களும் அவசரமாக ஒருமுறை சந்தித்துக் கொண்டன. பேச்சாளன் வெறுமையாக இருந்த சீனிக்கிண்ணத்தை எடுத்து "தயவு செய்து"..

அவள் அதனை எடுத்துவர குசினிக்குள் விரைந்தாள். அவர்களுக்கு சக்கரைச்சத்து அதிக அளவில் தேவையே. அவர்கள் பசியுடன் வேறு இருக்கிறார்கள். இளைஞர்களான அவர்களுக்கு அதி விரைவில் அது சீரணித்துவிடும். உணவு முழுமையானதாக இல்லாமல் இருந்ததையிட்டு மனத்துயரம் அடைந்தாள். அப்போது அவள் கவனம், பழங்கள் வைக்கும் கிண்ணத்தின் மேல் பட்டது. அவளது பெரிய செப்பாலான கிண்ணத்தில் 'அப்பிள்' பழங்களும் வாழைப்பழங்களும் நிரம்பியிருந்தன. திராட்சை இலைகளுக்குக் கீழே, அவள் சாப்பாட்டைச் சுவாரசியத்துடன் முடித்துக்கொள்ள உதவ 'பீச்' பழங்களில் ஒன்றோ இரண்டோ மட்டும் இருந்தன.

"பழங்களைச் சாப்பிடுங்கள். தயவுசெய்து நீங்களே பரிமாறிக் கொள்ளுங்கள்" சமைக்கவோ அல்

www.tamilarangam.net

லது படுப்பதற்காகவோ அல்லது சாப்பிடுவதற்கு மட்டுமே உபயோகிக்கப்படும் அவ்வறையில், பீங்கான்களையும் கோப்பைகளையும் என்ன செய்வது எனத் தெரியாது தடுமாறியபின், ஒழுங்கற்ற முறையில் அவற்றை வைத்தனர். அவர்கள் வாழைப்பழங்களையும் அப்பிள்களையும் சாப்பிட்டு முடித்தபோது (ஒரு பீச்பழம் மட்டும் கிண்ணத்தில் இருந்ததைக் கண்டுவிட்ட சட்ராக்கின் கைகள், மற்றவர்களை முந்திக்கொண்டு விரைவாக அதனிடம் சென்றன) அவள் பேச்சாளனிடம் பேசத்தொடங்கினாள்.

"நீ இப்போது பள்ளியில் இருக்கிறாயா டுமைல்?"

அவன் பள்ளிக்குப் போவதில்லை.

- அவர்கள் ஒருவரு பள்ளிக்கூடம் செல்வதில்லை. இள ஆடவர்களாகவும் யுவதிகளாகவும் மாறிவரும் இந்த இளைஞர்களுக்கு பாடசாலைகளே போர்க்களங்களாகவும், பகிஷ்கரிக்கவும் ஆர்ப்பாட்டம் செய்யவும் அரசியல் பேச்சாற்றலை விருத்தி செய்யவும் தமது பெற்றோர் வாழ்ந்த வாழ்வுக்கு எதிராக புரட்சி ஒன்றை உருவாக்கக்கூடிய இடமாகவும் அமைந்திருக்கின்றன. சிறுபிராயத்துக்கு சற்றுமேல் சிறப்புடன் கூடிய தலைமைத்துவ பொறுப்புக்களைக்கூட அவர்கள் வகிக்கின்றனர். இந்தப் பேச்சாளன், இளைஞர் கொங்கிரசின் கிளை ஒன்றின் தலைவன். ஒரு பகிஷ்கரிப்புக்குத் தலைமை தாங்கியதால், இரண்டு வருடங்களுக்கு முன் பாடசாலையிலிருந்து அவன் வெளியேற்றப்பட்டான். பொலிசுக்குக் கல்லெறிந்ததாலும், பள்ளிக்கூடத்தை எரித்தாலும்கூட இது நடந்திருக்கலாம். அவன் எல்லாவற்றையும் கூறினான். அமைதியாகவும் சுருக்கமாகவும் சொன்னான். சாதாரணமான பல விஷயங்கள் அவனுக்குத் தெரியாமலிருந்தன. திடமான சொற்களில் பேசியவனுக்கு சில சொற்களை மறைத்துப் பேசவும் தெரிந்தது. - 'அரசியல் செயல்பாடுகள்'

அவள் அவனுக்கு அப்பிளைச் சாப்பிட நேரம் கொடுக்கவேயில்லை. அவன் பெரிய துண்டொன்றை விழுங்கிக் கொண்டிருந்தான். அவனது சிறிய இளம் கழுத்தின் மேலிருந்த தலை ஆடிக் கொண்டேயிருந்தது. "நான் உள்ளே இருந்தேன். இந்த யூனில் இருந்து ஆறுமாதகாலம் தடுத்து வைக்கப் பட்டிருந்தேன்."

அவள் மற்றவர்களின் மேல் பார்வையைச் சுழற்றினாள்.

"நீ?"

சட்டாக் பொதுவாக தலையை அசைத்ததுபோல் இருந்தது. மற்ற இருவரும் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களது நிறத்தையொத்த இளைஞர்களிடம் இதுதான் பொதுவான பதிலாக இருக்கும். அவள் இதை எல்லாம் கட்டாயமாகத் தெரிந்து வைத்திருக்கவேண்டும். தாங்கள் கிரிக்கெட் அணியின் முதலாம் பிரிவில் சேர்க்கப்பட்டும், பாடசாலை விடுமுறையின்போது, மாணவர்களுக்கான 'ரூறில்' ஐரோப்பாவுக்குச் செல்லப் போவதாக அவர்கள் சொல்லப் போவதில்லை!

இளைஞர்களின் பேச்சாளராக விளங்கிய அந்த 'டுமைல்' தான் அஞ்சல் வழிமூலம் படித்த தனது 'மெற்றிக்' பரீட்சையை எடுக்க வேண்டுமென்றான். இப்போது முகத்தில் அரும்பத் தொடங்கியிருக்கும் உரோமம் எதுவுமற்று, வெறும் குழந்தையாக இரு வருடங்களுக்குமுன் இருந்தபோதே, அவன் அப்பரீட்சைக்காக ஆயத்தப் படுத்திக்கொண்டிருந்தான். தயக்கமும் அமைதியும் விளங்கிய அந்த மேசையில் தடுமாற்றத்தால் பீங்கான்களுக்கும் வாழைப்பழத்தோலுக்கும் நடுவே கோப்பி சிதறி இருக்க, அவன் அந்த அஞ்சல் வழிப் பாடசாலைக்கான விண்ணப்படிவத்தை நிரப்பவே மாட்டான் என்பது ஐயமின்றித் தெரிந்தது. அவள் அவர்களைப்பற்றித் தெரிந்து வைத்திருந்தவைகளை நம்பமுடியாமல் அவர்களைப் பார்த்தாள். சடுதியாக இப்போது இங்கே வந்திருக்கும் இவர்கள், தாங்கள் போற்றிப்பாடும் பாடலைப்பாடியபடி ஏ. கே. 47-ஐத் தூக்கப் போகிறவர்கள். இறப்பு அந்தப் பாடலுடன் அபிநயம் காட்டி தொடர்ந்து வந்தாலுகூட! அவர்கள் வாகனங்களின் கீழ், வயர்களுடன் கூடிய வெடிமருந்துகளை வைக்கும் தொழிலையுடையவர்கள். இங்கிருந்து போய் பற்றைகளுக்கூடாக திரும்பவும் வந்து, வீடுகளுக்கு நிழல் கொடுக்கும் மரங்களை வைப்பதற்கன்றி வெடிமருந்து வைப்பதற்காகவே குழிகளை தோண்டுபவர்கள். அவர்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்பதே அவளுக்குத் தெரிந்தது. அவர்களு பாதிப்புக்களை உண்டாக்குவார்கள் என, அவளால் நம்பமுடியவில்லை. பழங்களைப் புசித்ததால் பசைத்தன்மை கொண்ட கைகளை, பயனற்றமுறையில், அவர்கள் ஒன்றுடன் ஒன்று தேய்த்துக்கொண்டிருந்தனர்.

அவள் மௌனத்தைக் கலைத்தாள். எதையாவது சொல்லியாக வேண்டும்.

"என்னுடைய சிங்கத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அது அழகாக இருக்கிறதா? அது சிம்பாவே நாட்டைச் சேர்ந்த கலைஞனால் உருவாக்கப்பட்டது. அவனது பெயர் 'டுபி' என நினைக்கிறேன்"

மடத்தனமான இடைமறிப்பு ஆயினும், அது அவர்களைக் களிப்படையவே செய்தது. டுமைல், தூரத்தில் உள்ள எதையோ உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவன் தயங்கி, தங்களை எல்லாம் மகிழ்வடையச் செய்த அந்நிகழ்வுக்காக மௌனமான முறையில் நன்றி செலுத்தினான். அப்போது அந்த அறையின் உள்ளேயிருந்த கிளைகளையுடைய புராதன விளக்குப் பொருத்தி, தன்னுணர்வுடன் போடப்பட்டிருந்த துவாரங்கள் நிரம்பிய ஜன்னல் சீலைகள், செதுக்கப்பட்ட அந்தச் சிங்கம் எல்லாமே வேறுபட்ட தாக்கம் எதையும் தரவில்லை! அவை எல்லாமே ஒன்றுக்கொன்று பிரித்தறிய முடியாதவையாகவும், எந்த விதத்திலும் அற்புதமானவை எனக்கூற முடியாதவாறும் அமைந்திருக்க - அவர்களது பசிக்காக அவள் கொடுத்த உணவு மாத்திரமே கற்பனையற்றதாகவும் செயற்கை இல்லாமலும் இருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகத் தொழிலாளர் தினம்



புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் மே தின எழுச்சி ஊர்வலத்தில் பெருந் திரளெனக் கலந்து கொண்ட காட்சிகள்.

பிரான்சில்....






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜேர்மனியில்....











சுவிசில்....





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கேள்வி - பதில்

**நடராசா, தூசிஸ் (சுவிஸ்)**

**தமிழீழப் பெண்கள் ஆயுதமேந்தியது மட்டுமல்லாது ஆண்களே வியக்கும் வெற்றிகளை பெற்றுக் கொண்டிருக்கும் இக்காலப்பகுதியில் புலம்பெயர்ந்து வாழும் பல தமிழீழப் பெண்களிடத்தில் எமது போராட்டம் தொடர்பான அரசியல் சமூக விழிப் புணர்ச்சி குன்றிக் காணப்படுவதற்கு காரணிகள் எவை?**

புலம் பெயர்ந்த தமிழீழப் பெண்களிடத்தில் மட்டுமல்ல பல ஆண்களிடத்திலும் அரசியல், சமூக விழிப்புணர்சி குன்றியே காணப்படுகின்றது. போராட்டத்தின் நேரடி அனுபவத்தில் இருந்து விலகி வந்திருப்பது ஒரு காரணமாய் இருக்கிறது. பல நூற்றாண்டுகால அன்னிய ஆட்சிக்குட்பட்ட அடிமை மனோபாவத்தை நிரந்தரமாய்த் தக்கவைத்துக் கொள்ள பலர் முனைவது இன்னொரு காரணமாய் இருக்கிறது. மூன்றாவது, பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் மீதுள்ள ஆணாதிக்கம் பரந்த சமூகப் பார்வையை பெறுவதற்கு இன்னொரு தடையாக இருக்கிறது.

**சி. சிறீதரன், தூசிஸ் (சுவிஸ்)**

**தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் எமது விடுதலைப் போராட்டத்தை காலத்திற்கேற்ப புதிய போர் வடிவங்களாகவும் சிறந்த போர்ப்படைப் பிரிவுகளாகவும், தானே உருவாக்கி உலகமே போற்றும் வெற்றிகளைப் பெற்றெடுத்து எம்மை விடிவின் எல்லைக்கு கொண்டு சென்றிருக்கின்றார். அவருடன் உலகின் தலைசிறந்த தலைவர் எவரையும் ஒப்பிட்டுக் கூறமுடியுமா? யார் அவர்?**

தற்கால உலகில் தலைசிறந்த கெரில்லா தலைவர் என எமது தேசியத் தலைவரையே, உலக அபிப்பிராயம் கணிக்கிறது. சேகுவேரா, மாஓசேதுங் போன்றவர்களுடன் ஒப்பிட்டு பல அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். ஆயினும் தலைவர்கள் ஒவ்வொருவரும், தங்கள் சூழலுக்கு, காலத்திற்க்கு ஏற்றவாறான தனித்தன்மை படைத்தவர்கள்.

**சி. தயானந்தன், தூசிஸ் (சுவிஸ்)**

**சிறீலங்கா அரச பிரதிநிதிகள் கூறுவதுபோல சமஷ்டி தொடர்பான தீர்வை முன்வைத்தால் நாம் பழையன எல்லாவற்றையும் மறந்து மன்னித்து பௌத்த பேரினவாதிகளுடன் சேர்ந்து வாழமுடியும் என்று கருதுகின்றீர்களா?**

தமிழரின் தாயக ஒருமைப்பாடு தமிழ் மக்களின் தன்னாட்சியுரிமை ஆகியவற்றை அங்கீகரித்து அதன் அடிப்படையில் ஒரு சமஷ்டித் தீர்வை அரசாங்கம் முன்வைப்பது என்பது எளிதில் சாத்தியமான ஒன்றல்ல.

அப்படி ஒன்று வைக்கப்பட்டால், அது விடுதலைப் புலிகளால் பரிசீலிக்கப்படுவது மாத்திரமல்ல, தமிழ் மக்களின் ஒப்புதலுக்கும் விடப்படவேண்டும். சிங்கள பௌத்த பேரினவாதம் என்பது வளர்ந்து வரும் போக்கு. பாதுகாப்பும், சுதந்திரமும் உறுதிப்பட்ட தமிழீழத்தால்தான் அதனுடன் தக்க உறவை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

**உதயகுமார், சவுதி அரேபியா**

**தமிழீழப் பிரதேசத்திலிருந்து முஸ்லீம் மக்கள் என்ன காரணத்திற்காக வெளியேற்றப்பட்டார்கள்? அவர்களும் போராட்டத்தின்போது தமது உயிர்களை இழந்தவர்கள் தானே. இதற்கான விரிவான விளக்கம் தரவும்.**

முஸ்லீம் மக்களுடைய வெளியேற்றம் ஒரு வேதனைக்குரிய விடயம்தான். ஆயினும் இதுவும் தேசியப் பாதுகாப்புடன் சம்பத்தப்பட்ட விடயமாக அமைந்துவிட்டது. சிறீலங்கா அரசாங்கம் முஸ்லீம் மக்களை பகடைக்காய்களாக பயன்படுத்த முற்பட்டதன் விளைவே இது. தென் தமிழீழத்தில் முஸ்லீம் ஊர்காவல் படையின் தோற்றமும் தமிழ், முஸ்லீம்களிடையே ஏற்பட்ட மோதல்களும், இரத்தம் சிந்தப்பட்டமையும், ஆயிரக்கணக்கனோர் அகதிகளானமையும் நிதர்சன உண்மைகள். இதே விதமான குழப்ப நிலைமையை விடுதலைப் புலிகளின் கோட்டை என்று கூறப்படும் யாழ். குடாநாட்டினுள்ளும் ஏற்படுத்த அரசாங்கம் விரும்பியது. இதற்காக முஸ்லீம்கள் பலரை பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டது. இத்தகைய சூழலில்தான் முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டனர். நிரந்தர சமாதானமும் பாதுகாப்பும் உறுதிப்படும் பொழுது நிச்சயம் முஸ்லீம் மக்கள் தங்கள் குடியிருப்புக்களுக்கு வரும் சூழ்நிலை உருவாகும்.

**உதயகுமார், சவுதி அரேபியா**

**தமிழீழத்தில் இருந்து தமது உறவினரைப் பார்க்க கொழும்பு செல்பவர்களை மிகவும் கடுமையான முறையில் நீங்கள் நடத்துவதாக செய்திகள் வருகின்றனவே; ஏன்?**

கொழும்பு செல்பவர்கள் ஒரு சில ஒழுங்கு விதிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் உட்படுத்தப்படுவது உண்மைதான். இது ஒரு ஒட்டுமொத்தமான தேசியப் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டது. இதில் சிறியதொரு ஓட்டை விழுமாயின் அதனூடாக எமது பெரிய, சிறிய எதிரிகள் நுழைந்து நாட்டினுள் ஏற்படுத்த விரும்பும் அராஜகம், அனைவரையும் மிகவும் பாரதூரமாகப் பாதிக்கும். போராட்டத்தையும் பின்னடையச் செய்யும்.

**உதயகுமார், சவுதி அரேபியா**

**இவ்வளவு இன்னுயிர்களை இழந்த பின்பும், இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி அரசியல் தீர்வுகாண முயற்சி செய்வது நியாயமா? இறந்த போராளிக**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ளின் உறவினர்கள் இதனையிட்டு எவ்வளவு வேதனைப்படுவார்கள் என்பதை எண்ணிப்பார்க்கவில்லையா? என்னுடைய பிள்ளை அநியாயமாக செத்துவிட்டான் என்று மறைந்த போராளிகளின் உறவினர்கள் புண்படுவது நியாயமா?

✎: அரசியல் தீர்வு காண வேண்டியது அவசியம்தான். ஆனால், பேச்சுவார்த்தை மூலம் மட்டும் இதனைச் சாதிக்கலாம் என்ற நம்பிக்கை வெகுவாய் குறைந்துவிட்டது. பேச்சுவார்த்தை என்பது போராட்டத்தின் ஒரு அம்சம் என்பதே வலுப்பட்டு வருகின்றது. எமது அடிப்படை உரிமைகளைப் பேச்சுவார்த்தையில் பேரப் பொருள்களாக அரசாங்கம் பேசமுற்பட்டமையே மீண்டும் ஆயுத முரண்பாட்டுக்கு வழிவகுத்தது. எனவே பாரதீனப்படுத்தப் படமுடியாத எமது அடிப்படை உரிமைகளை விடுதலைப் புலிகள் விட்டுக்கொடுக்கவோ, சமரசம் செய்யவோ மாட்டார்கள். விடுதலைப் புலிகள் தமது இலட்சியத்தில் என்றும் உறுதியாக இருப்பார்கள். இதுவே வீரமரணம் அடைந்த மாவீரர்களின் ஆத்ம தாகமுமாகும். ✸

www.tamilarangam.net

# எமது தமிழீழப் பெண்களின் நிலை ஒரு இலட்சிய வடிவம் அடைந்து வருகின்றது

உலகத்தின் எந்தப் பகுதியிலும் அதிகமான முன்னேற்றமடைந்த நாடுகளில் - ஏதாவது ஒரு நாட்டில் கூட - பெண்களுக்கு ஆண்களோடு முழு அளவுக்குச் சமமான உரிமைகள் எந்தக் காலத்திலும் இருக்கவில்லை. மகத்தான பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்று சுமார் நூற்றுமுப்பது ஆண்டுகளுக்கும் அதிகமாகவே ஆன பிறகும் கூட, இந்த நிலை இருக்கிறது.

1857 மார்ச் 8-ம் நாள். நியூயோர்க்கில் நெசவுப் பெண் தொழிலாளர்கள் தொழிற்சங்க ரீதியாக அணிதிரண்டு உரிமைப் போரில் குதித்த நாளாகும். இந்த நாளை நினைவு கூரும் முகமாகவே மார்ச் 8-ம் நாள் பெண்களின் முன்னேற்றத்திற்கான எழுச்சி நாளாக உலகளாவிய ரீதியில் எல்லா நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஏனைய நாடுகளில் பெண்கள் வாழ்க்கையை மேம்படுத்த போராட்டம் நடத்துகையில், எமது பெண்கள் வாழ்க்கை நடத்துவதற்கே போராட வேண்டிய நிலையில் உள்ளனர். எமது தமிழீழத்தைப் பொறுத்த வரையில் பெண்களின் உரிமைகள் பற்றிய சட்டங்களில் பெண்களின் சமத்துவம் பேணப்பட்டிருக்கிறது. ஆனால், வெறும் சட்டங்கள் மட்டும் போதுமானவையல்ல.

வீட்டுவேலை செய்யும் பெண்களின் வேலைப்பளு இன்னும் குறைக்கப்படவில்லை. பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய பொது வேலைகளில் அவர்கள் ஈடுபட முடியாமல் (விருப்பம் இருந்தும்) வேலைகள் தடுக்கின்றன. தொழில்பார்க்கும் பெண்கள் கூட தமது வெளி வேலையுடன் இந்த வேலைப்பளுவையும் சுமப்பவர்களாகவே எமது தமிழீழப் பெண்கள் உள்ளனர். ஒரு குடும்பத்தில் உள்ள உறுப்பினர் அனைவரும் அந்தக் குடும்பத்தின், வேலைகளை தமக்குள் பங்கிட்டுச் செய்வதன் மூலம் எல்லாப் பெண்களும் தமது நேரத்தை மீதப்படுத்தி சமூக வேலைகளில் குழுவாகவோ, தனியாகவோ ஈடுபட்டு தமது கிராமத்தையும் சமூகத்தையும் மேம்படுத்த வாய்ப்பளிக்கலாமே?

இன்று பெண்களின் வேலைப்பளுவைக் குறைக்கக் கூடிய வகையில், குடும்ப வேலைகளில் இருந்து விடுவிக்கக்கூடிய குழந்தை வளர்ப்பு நிலையங்கள் முன்மாதிரியான அமைப்புக்கள் போன்றவற்றை எமது பெண்களே முன்னின்று அமைத்துவருவது பாராட்டக்கூடியதாகும்.

மதம், மரபு, சாத்திரம், சடங்கு என்று பழமைவாதிகளால் ஒடுக்கப்படுதல், பெண்களே பெண்விடுதலைக்கு, பெண்கள் நலன்களுக்கு எதிராகச் செயற்படும் கொடுமை போன்ற அறியாமைகளைப் போக்கும் முயற்சியில் ஈடுபடுவதுதான் பெண்ணொடுக்குமுறைக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய முதல் நடவடிக்கையாகும்.

எமது தமிழீழப் பெண்களின் நிலை ஓர் இலட்சிய வடிவம் அடைந்து வருகின்றது. எனினும் இது ஒரு நீண்ட பயணத்தின் ஆரம்பம் மட்டுமே. அனைத்துலகப் பெண்கள் நாளில், எமது இலட்சியப் பயணத்தில் புதிய இலக்குகளை அடைவதற்கு எமது தமிழீழப் பெண்களின் ஒத்துழைப்பைக் கோருகின்றோம்.

- பெண்கள் ஆய்வு நிறுவனம்

> *ஐயா!*
> மாதர்களை இருட்டிலே தள்ளிவிட்டு அவர்கள் அறியாமல் நீங்கள் மேலான நிலைமைக்கு வந்துவிடுவது வீண் முயற்சி. அது ஒருபோதும் நடக்கமாட்டாது.
>
> - சகோதரி நிவேதிதாதேவி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நெடும் போர்



கொட்டு செங்குருதிக் களத்தினி லங்கே
கொதித்தெழும் மறவர் தம்மிடையே
கட்டுடல் வீரன் ஒரு தமிழ் நெஞ்சன்
கடலென அதிர்ந்தொலி செய்வான்!

தமிழர் பொன்னாட்டைத் தாயக மண்ணைத்
தரமறுக் கின்றவ னெவனோ...?
இமை நொடிப் போதி லெழுந்திரு தமிழா?
இன்னுயிர் நமக்கொரு பொருளோ?

ஓடுக தானை! ஓடுக பகைவர்
உலவிடும் திசை வழி யெல்லாம்!
தேடுக தமிழர் தேசத்தின் மானம்...
தெய்வத்தில் ஆணையிட்டெழடா!

பைந்தமிழ் மொழியை எவன் பழித்தாலும்
பழித்தவன் தலை கொண்டுவாடா!
ஐந்து துண்டாக்கி அடுப்பினில் வைப்போம்?
அது நமக் குணவாகும் போடா!

கருவினில் அன்னை வளர்த்ததும் இந்தக்
கைகளைத் தந்ததும் எல்லாம்
செருவினில் வெற்றிக் கொடியுடன் நின்று
சிரிப்பதற் கன்றோடா தமிழா!

ஆழிபோல் ஆழி அலைபோல் முழங்க
ஆடடா... போர்க்களமாடு!
நாளிகை யொன்றில் நாடாள வேண்டும்
நாமென்று சிங்கம் போலார்த்தான்!

சங்கொன்று களத்தில் முழங்கிற்று வீரர்
தானையும் முழங்கிற்று கண்டீர்!
பொங்குபோர்க் களத்தில் மாற்றாரும்
போந்தார்!
போரென்று கொட்டிற்று முரசம்!

அதிர்ந்தன திசைகள்! அசைந்தன மலைகள்
அழிந்தன காடுக ளெல்லாம்!
உதிர்ந்தன கரங்கள்! உடைந்தன தலைகள்!
உயர்ந்தன பிணமலைக் குவியல்!

- உணர்ச்சிக் கவிஞர்
காசி ஆனந்தன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



எங்களின் வானத்தில் வட்டமிட்டு
பூமியைப் பிளந்த வல்லூறுகள்
சிறகொடிந்து சிதைந்து வீழ்ந்தது கண்டு
அகமகிழ்ந்து ஆனந்தப் பெருக்குடைத்த
விண்ணை நோக்கின
விழிநீர் சொரிந்த விழிகள்
மண்ணில் உள உயிர்கள்
யாவும் உயிர்த்தன
விடுதலையை ஆகர்சிக்கும்
பூமிக்கு புதிய சிறகுகளும் முளைத்தன

www.tamilarangam.net

ஓவியர் கண்ணாவின் இவ் ஓவியம்
தூரிகைகளின்றி சவர அலகின்
துணைகொண்டு வரையப்பட்டது.